நாவலர் பெருமான்



நாவலர் பெருமான்

வித்துவான் கா. மாயாண்டி பாரதி

தமிழ் விரிவுரையாளர் : தூய யோவான் கல்லூரி,
பாளையங்கோட்டை

பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம் :: சேப்பாக்கம்
திருச்சிராப்பள்ளி :: சென்னை-5.

முதற் பதிப்பு — ஜுலை 1955

விலை ரூபா இரண்டு

அச்சிட்டோர் : ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை-5

முன்னுரை

நாவலர் பலர் நாடெங்கும் தோன்றிப் புகழ் பெற்று வாழ்ந்தமையை நாமறிவோம். அவரனைவரும் நாவன்மை யொன்றையே தமக்குரிய தகுதியாகக் கொண்டிருந்தனர். ஆனால், ஊழிபெயரினும் தாம் பெயராத சான்றாண்மையும் தோலாத நாவன்மையும் ஒருங்கே பெற்றுப் புகழ் நிறுவியவர் யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் ஒருவரேயாம். அப் பெரியார் நாவலர்கள் நடுவண் நாயகமணியாய்த் திகழ்ந்த அருமை நோக்கி அவர்தம் வாழ்க்கை வரலாறு "நாவலர் பெருமான்" என்ற புனைபெயருடன் எழுதப்பட்டது.

1949 ஏப்ரல் 26 - என் வாழ்க்கையில் மறக்கமுடியாத நன்னாள்! அன்றுதான் இலங்கையினின்றும் எதிர்பாராத அழைப்பு வந்தது. இலங்கை நாட்டின் எழில் காண வும் தமிழ்ப்பணி புரியவும் தாய் நாடு விட்டுப் பயணப் பட்டேன். அன்று முகிழ்த்தது ஓர் எண்ணம்; அஃது இலங்கை யில் பூத்தது; ஈழத்தில் காய்த்தது; தாயகத் தில் பழுத்தது; நன்றாகக் கனிந்து சுவைக்க ஐந்தாண்டுகளாயின! அவ்வாறு எழுந்த எண்ணமே ஆறுமுக நாவலரின் உரு வெளித் தோற்றம். அவ்வெண்ணம் பூத்துக் காய்த்துக் கனிந்து என் உள்ளத்தே சுவை பயக்கக் காரணமாயிருந்ததே அவர்தம் வாழ்க்கை வரலாறு. அங்ஙனம் கனிந்த

கனியாகிய நாவலர் பெருமானின் வாழ்க்கையைத் தமிழகம் சுவைத்துப் பயன் பெற வேண்டுமென விழைந்த விழைவே இந்நூல்.

இந் நூலினை எழுதுதற்குக் காரணம் ஒன்று இயல்பாகவே வாய்த்தது. யாழ்ப்பாணம் நாவலரைத் தோற்றுவித்துப் புகழ் கொண்டுள்ளதல்லவா? அவர் பிறந்து வாழ்ந்த திருவிடத்தைக் கண்டு களிக்கச் சென்றேன். அங்குள்ளாரனைவரும் நாவலரைத் தெய்வமாகப் போற்றிப் புகழ்ந்தேத்துதலைக் கண்டேன். அவர் பிறந்த மண்ணிலே அடி வைக்கவும் அஞ்சினேன். அப்பெருமானைக்குறித்து அவர்கள் சொல்லிய உருக்கமான செய்திகள் சிலவற்றைக் கேட்டேன். உள்ளம் குழைந்தேன். வான் வழியாக யான் தாயகம் வரும்போதும் அச் செய்திகள் ஒன்றன்பின் ஒன்ருக என் கண் முன் தோன்றி மறைந்தன. யான் புலவர் கல்லூரியில் பயிலுங்கால் நாவலரைப் பற்றிப் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் கூறிய செய்திகள் சிலவும் நிழல்போல் வந்து மறைந்தன. தமிழிசைக்குப் புத்துயிரளிக்க 'யாழ் நூல்' இயற்றிய மும்மொழிப் புலமை வாய்ந்த செந்தமிழ்த் துறவி விபுலானந்த அடிகளாரின் தொண்டருகை விருந்த சில திங்களில் நாவலரைப் பற்றி வியந்து பாராட்டிக் கூறிய நிகழ்ச்சிகளும் நினைவிலே வந்து கழிந்தன. நாவலர் பால் அமைந்திருந்த நினைவுத்திறம்,

பல்கலைப் புலமை, சமயவுணர்வு, நா நலம், பெருந்தகைமை முதலிய குணங்கள் என் உள்ளத்தை இறுகப் பிணித்தன. கருவிலே திருவுடையராய் விளங்கிய அப்பெருமகன் வரலாற்றைத் துருவ முயன்றேன். நாவலர் தம் உறவினரும், மதிப்பிற்குரிய மாணவரும் ஆகிய திரு. கைலாச பிள்ளையவர்கள் எழுதிய நூல் ஒன்று கிடைக்கப் பெற்றேன். அந் நூலினைக் கருவியாகக் கொண்டு மேனுட்டு அறிஞருடனும் சங்ககாலச் சான்ரேருடனும் ஒப்ப ஆய்ந்து "நாவலர் பெருமான்" என்ற பட்டத்திற்குத் தகுதி யுடைமையை ஒருவாறு விளக்கி வரைந் துள்ளேன். இம் முயற்சியில் எத்துணை யளவு வெற்றி பெற்றுள்ளேன் என்பதை அறியேன்.

இந் நூலினைப் பாடநூலமைப்பில் யான் எழுதத் துணிந்தது மாணவருலகில் நாவலர் போன்று பலர் உருவாக வேண்டுமென்ற ஆர்வமே. இதனை ஒல்லும் வகையான் தூய தமிழில் எழுதியுள்ளேன். உரைநடை வேந்தராக விளங்கிய நாவலர் பெருமான் வரலாற்றைப் பயிலும் தமிழ் மாணவரும் பிறரும் தூய நடையும் தூய பண்பும் தூய வாழ்வும் உடையவர்களாக விளங்குவர் என்பது உறுதி.

இந் நூலினை எழுதக் காரணராக விருந்த வரும், இலங்கைக்குச் செல்லும் வாய்ப்பினை நல்கியவரும் எனது உழுவலன்பரும் ஆகிய

வித்துவான் முத்தணந்த பெருமாள் அவர் கட்கும், யான் கொடுத்த கையெழுத்துப் படியைக் கைம்மாறு கருதாது செம்மைப் படுத்துதவியவர்களாகிய சென்னைப் பல் கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரும் சொல் லின் செல்வரும் ஆகிய திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கட்கும், இந்துக் கலாசாலைத் துணைத் தலைமை யாசிரியரும், என்பால் மிக்க அன்புடை யாரும் ஆகிய திரு. நெ. நடராச பிள்ளை பி. ஏ., எல். டி. அவர்கட்கும், என்னை இடை யருது தமிழ்ப்பணியில் ஊக்குவித்துப் பல் லாற்ருனும் உதவி வரும் தூய யோவான் கல்லூரித் தலைவர் திரு. ஜே. வேதசிரோன் மணி எம். ஏ., பி. எல். அவர்கட்கும், மதுரை நகராட்சி அலுவலக வருமான அதிகாரியும் எனது அண்ணலும் ஆகிய ச. மாணிக்க முதலியாரவர்கட்கும் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன்.

இந் நூலினை நல்ல முறையிலே பதிப் பிக்க இசைந்த பழனியப்பா வெளியீட்டாருக் கும் என் உளங்கெழுமிய நன்றி உரியது.

இப் பணியை முட்டின்றி முடிக்கத் துணையாய் நின்ற தமிழன்னையின் பேரருளுக்குத் தலைவணங்குகின்றேன்.

பாளையங்கோட்டை
1 - 6 - 1955.

தங்கள் அன்பன்
கா. மாயாண்டி பாரதி

உள்ளுறை

எண்		பக்கம்
1.	தோற்றுவாய்	1
2.	குலச் சிறப்பும் பெருமான் பிறப்பும்	6
3.	கல்வி வேட்கையும் இளமை வாழ்க்கையும்	10
4.	இரு பெரும் பணிகள்	22
5.	உரையாசிரியரும் பதிப்பாசிரியரும்	59
6.	சொல்லின் செல்வர்	86
7.	குணக் கலைக் குன்று	126
8.	பிறவாப் பெருநிலை	145

நாவலர் பெருமான்

---

1. தோற்றுவாய்

இந்தியப் பெருங்கடலில் இலங்குவது இலங்கைத் தீவு. குமரி நாடு கடலால் விழுங்கப்பட்ட போதும் குலையாது விளங்குவது. இமயப் பெருமலையின் இடிந்த சிகரத்துண்டு எனப் புராணத்தாற் புகழப்படுவது. பொருநைக் கரையிலே பொங்கிப் பொலியுந் தங்கத் தீவு எனத் தீட்டினன் கிரேக்க அறிஞன் மெகஸ்தனீஸ். சேரன் தீவு எனத் திருப்பெயர் சூட்டினர் செந்தமிழ் நாட்டார். அழியா அழகுடன் காட்சி தரும் மாட்சியைக் கவிஞர் விட்டு விடுவரோ? இரத்தினத் தீவு எனப் போற்றினர் தண்டமிழாசான் சாத்தனார். பொன்னகர் என்று புகழ்ந்தார் புவியோர் தொழும் கவியரசர். "நரகமே ஒக்கும் சொர்க்கம் இந் நகர்க்கென" நா கூசாதுரைத்தான் மாருதி மைந்தன். எழில் மிக்க இலங்கையின் காலடியிலே சொர்க்கத்தைப் பதித்தே விட்டான் இலக்கியக் கம்பன். இன்றும் தொன்மைப் புகழ் குன்றாது குன்றின் மேலிட்ட விளக்குப் போல மிளிர்கின்றது வியக்கற்பாலதே. பரந்த கடலிடத்தே விரைந்து வருகின்ற பெருங்கலங்களுக்கு வழிகாட்டுவது கலங்கரை விளக்கு. அது போன்றே உலகப் பெருநாடுகட் கெல்லாம் அழகொளி காட்டி அகமகிழச் செய்வது இலங்கைத் தீவன்றோ? ஆங்கே, இயற்கையன்னை கோயில் கொண்டிருக்க, இன்பக்குயில் பாட, செல்வமயில் ஆடக் கண்டவர் வியந்து மகிழ்வர். கேட்டோர் காண விழைவர். முக்

கோடி வாழ்நாளும் முன்னவனின் பெருவரமும் பெற்ற மறவேந்தன் இனிதமர்ந்த இலங்கை என்பார். அழகையெல்லாம் சிந்தாமல் சேகரித்து ஒளியுமூட்டிச் செய்தனனே மயன் என்பார். அனைத்து நாட்டுக் கப்பல்களும் இணையின்றி விளங்கிடும் எழில் என்னே என்பார். சுருங்கக்கூறின், அழகுத் தெய்வம் இலங்கை; அழியா வாழ்வு இலங்கை; எத்தனையோ நாடுகள் நித்தம் தவங்கிடக்கும் வித்தகத் தீவு இலங்கை. இலங்கைக்கு ஒப்பு இலங்கையே!

இத்தகைய சிறப்பு வாய்ந்த இலங்கை இரண்டு பகுதிகளாக அமைந்தது. வானளாவிய மலைகளும் குன்றுகளும், வற்றாத ஆறுகளும், செறிந்த காடுகளும் ஒருங்கே கொண்டது தென்னிலங்கை. ஓங்கி வளர்ந்த தென்னைகளும், வெண்ணிலவை விரித்தாற்போன்ற மணற்பரப்புடைய கடல் தீவுகளும் கொண்டிலங்குவது வட விலங்கை. இதை 'மணல் தீவு' என்று காரணப் பெயரிட்டழைப்பர். யாழ்ப்பாணம் என வேறு பெயரிட்டு வழங்குவர் தமிழ்ச் சான்றோர். இதற்கு யாழ்ப்பாணம் என்ற நற்றமிழ்ப் பெயர் வந்த காரணம் என்ன, அங்கு இன்றும் தமிழ் மக்கள் பல்கி வாழ்வ தேன் என ஆராயின் இதன் பெருமை விளங்கும்.

பண்டைத் தமிழகத்தோடு இணைந்திருந்தது இன்றுள்ள இலங்கைத் தீவு. குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடையே விளங்கிய நிலப்பகுதி இரண்டாவது கடல்கோளுக் குட்பட்டது. அதன் பிறகு பெரிய கால்வாய் ஒன்றால் பிரிக்கப்பட்டுத் தனியாகி யதே இந்த இலங்கைத் தீவு என்பதை வரலாற்று வல்லுநர்கள் விரிவாகக் குறித்துள்ளனர். இதன் வட பகுதியில் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரை நாட்டிலே வாழ்ந்த மக்கள் குடியேறினர். தென் பகுதியில் வங் காள நாட்டு மக்கள் போந்து வாழத்தலைப்பட்டனர். அவர்களே சிங்களர் என்ற பெயருடன் இன்று ஆட்சி

புரிபவர் என்பர். எனவே, இலங்கையின் வடபால் மூவாயிரமாண்டுகட்கு முன்னர் வந்து வாழும் தொன்மையுடைய தமிழ் மக்களே யாழ்ப்பாணத்தார் என்பது உறுதியாகின்றது. இன்றும் தமிழரின் நாகரிகம், பண்பாட்டொழுக்கங்கள் சிறிதும் குறையாது காணப்படுதலே தக்க சான்ருகும். அன்றியும், ஆண்டு தோறும் ஒரு முறையோ இருமுறையோ அங்கு வாழ்பவர்கள் திருச்செந்தில் மேய கந்தவேளையும், தில்லையில் மேய கூத்தப் பெருமானையும் மறவாது வழிபட்டுய்யப் போந்து மீளுதலும், தமிழகத்து வாழ்பவர்கள் கதிர்காமத்து எழுந்தருளியுள்ள செவ்வேளை மறவாது வழிபாடு ஆற்றச் செல்லுதலும் இதனை நன்கு வலியுறுத்துவனவாம். மேலும், திருநெல்வேலி, பாளையங்கோட்டை என்ற தமிழக ஊர்களின் பெயர்களை மனம் விரும்பி யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு வழங்கி வருவதும் குறிப்பிடத் தக்கதாம். ஆகவே, யாழ்ப்பாணத்தை உரிமை நாடாகவும், தமிழகத்தை உறவு நாடாகவும் நினைந்து வாழும் பழந்தமிழ்க் குடியினரே யாழ்ப்பாணர் என்பது தெளிவாகிறது. இலங்கை என்பதற்கு நாக தீபம் என்ற பெயருண்டென்றும், நாகர்கள் வாழ்ந்ததனுல் அப் பெயர் பெற்றதென்றும், அவர்கள் இந்திய நாட்டு வேந்தனொருவனைத் தலைவனுகக் கொண்டு சிங்களர் என்று பெயர் பெற்றனர் என்றும் ஒரு சாரார் கூறுவர். தமிழ் நாட்டு மன்னர்கள் படையெடுப்பும் ஆட்சியும் நிகழ்ந்தமை கல்வெட்டுக்களால் நன்கு அறியலாம். இலங்கையின் வடபகுதியில் தமிழ் மொழியே பெரும்பான்மையும் பேசப்பட்டு வந்தது என்பதை ஆங்கிலேயர்கள் 1815-ஆம் ஆண்டில அந் நாட்டு அரசனேடு செய்து கொண்ட ஒப்பந்தத்தில் தமிழிலேயே கையொப்பமிட்ட செய்தியால் உறுதியாகிறது. தமிழ்ப்பெரும் புலவர்கள் பலர் ஆங்கே சென்று பரிசு பெற்று வந்தனர் என்பதும், அக் கால வேந்தன் தன்பால் பாடிவந்த தமிழ் நாட்டுப் பாணன்

ஒருவரின் புலமைத் திறங்கண்டு வியந்து தன் நாட்டையே அந்த யாழ்ப்பாணனுக்குப் பரிசாக வழங்கியதாகவும், அன்று தொட்டே யாழ்ப்பாணம் என்ற தனித் தமிழ்ப் பெயர் வந்தது என்றும் கூறுவர். நாட்டையே பெரிதெனக் கருதாது ஈந்து புகழ் நிறுவிய நல்லோர் மரபிலே வந்த சின்னத் தம்பிப் புலவரவர்கள் கொடைச் செய்தியைப் பின்வரும் பாவிலே குறித்துள்ளதைக் காணலாம்:

" பண்ணிற் ரேயப் பொருள்முடிப் புக்கட்டிப்
பாடும் பாவலர்க்கு ஈந்திட என்றே
எண்ணிப் பொன்முடிப்புக் கட்டி வைத்திடும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே."

கால வெள்ளத்தையும் கடந்து தம் பெயர் மாறுபடாது வந்த இப்பகுதி எங்ஙிலை யடைந்தது என்பதை அறிய வேண்டுமன்ரே ?

வரலாற்றுச் சுவடியிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலம் பதினைந்தாம் நூற்ருண்டு என்பர். அந்த நூற்ருண்டின் இறுதியிலே தான் ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் புதிய கடல் வழி கண்டனர். வாஸ்கோடகாமா என்ற போர்ச்சுக்கேசிய கப்பலோட்டி தன் விடா முயற்சியால் ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைக் கண்டான். அதனையுங் கடந்து இந்தியப் பெருங் கடலை யடைந்து தமிழகத்தின் மேல்கரையில் உள்ள கள்ளிக்கோட்டையை அடைந்தான். வெற்றிக் கொடியை நாட்டினன் ! இப் புதிய வழிக் கண்டதும் வணிகம் செய்யத் தொடங்கினன் போர்ச்சுக்கேசியர் தலைவன் அல்புகர்க். ஆனல், இந்திய மன்னர்கள் வலி குன்றிய சமயமறிந்து ஆட்சியை நிறுவி, மதத்தை யும் பரப்பினன். இவ்வாறு நூருண்டுகள் போர்ச்சுக் கேசியர் வணிகத்தில் தனியாட்சி செலுத்தினர்.

இந்தியாவின் மேல்கரையில் துறைமுகங் கண்டவர் யாழ்ப்பாணத்தை அறியாதிருப்பரோ? வணிகத்தை இலங்கையின் வடபாலமைந்த யாழ்ப்பாணத்தும் பரப்பினர். வணிகத்தைவிட மதத்திற்கே முதலிடம் கொடுப்பது அக்கால வணிகரியல்பு. அம்முறையில் அங்குள்ள மக்கள்பால் தம் மதத்தைக் கைக்கொள்ளச் செய்தனர். போர்ச்சுக்கேசியர் ஆட்சி யாழ்ப்பாணத்தும் வேரூன்றியதால் அறனல்லா நெறியில் தம் சமயத்தை வளர்க்க முனைந்தனர். பிற சமயத்தவர்களாகிய புத்த, இஸ்லாமிய, சிவ நெறி ஒழுகுவோர் அனைவரும் அஞ்சி வாழும் நிலை ஏற்பட்டது. கண்ணகி தேவிக்குப் படிமம் அமைத்து வழிபாடாற்றிய கயவாகு வேந்தன் காலந்தொட்டுக் கட்டப்பட்ட கோவில்கள் எண்ணற்றன. அவற்றுள் பலவும் இக் காலத்தே அழிந்துபட்டன என்பர். மக்களில் பலர் தம் சமயவொழுக்கங்களைக் கைவிடும் அளவிற்குக் கொடுமை மிகுந்தது. இத் தன்மையதாகிய போர்ச்சுக்கேசியர் ஆட்சியில், அறம் வாழுமென்று கனவிலும் கருதவியலுமோ? இந்தச் சூழ்நிலையிலும் தம் ஒழுக்கமும் பெருமையும் அழியாது வாழ்ந்த மரபு ஒன்று இருந்தது! அதுவே, நம் நாவலர் பெருமான் தோன்றிய **ஞானப் பிரகாசர்** மரபு.

2. குலச் சிறப்பும் பெருமான் பிறப்பும்

ஞானப்பிரகாச சுவாமிகள் என்பார் யாழ்ப் பாணத்து நல்லூரைச் சார்ந்த திருநெல்வேலியிலே தோன்றியவர். தொன்மை மிக்க பாண்டியர் மழவர் குடியைச் சார்ந்தவர். போர்ச்சுக்கேசியா ஆட்சிக் காலத்திலே வாழ்ந்தவர். பிறந்த குடிக்கேற்பப் பழுத்த தமிழ்ப் புலமையுடையவர். சிவனை மறவாச் சிந்தையர். மழவர் என்ற சொல்லிற்குப் பொருந்த மனவலிமையும் படைத்தவர். இத்துணைச் சிறப்புடைய பெரியாரையும் போர்ச்சுக்கேசியர் தலைவன் வாளாவிருக்க விடவில்லை. அத்தலைவனின் உணவின் பொருட்டு யாழ்ப்பாணத்து மக்கள் நாடோறும் ஒவ்வொரு பசுவினைக் கொண்டுவர வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருந்தான். அக் கட்டளையை மறுக்க முடியாதவர்களாய் அஞ்சியவர்கள் தம் சமய வொழுக்கத்தையும் வழுவி நிறைவேற்றி வந்தனர். ஆனால், ஒழுக்கம் பழுத்த சைவ மரபிலே வந்த அடிகளார் இச் செயல் செய்ய ஒருப்படுவரோ? முதல் நாளிரவே யாருமறியா வண்ணம் வெளியேறி னார். யாழ்ப்பாணத்தினின்றும் நீங்கித் தில்லையை அடைந்தார். திருவருளை நினைந்து 'உய்ந்தேன் உய்ந் தேன்' எனச் சொல்லி மகிழ்ந்தார். என்னே இவர்தம் துணிவு! ஒழுக்கமே உயர்குலம் எனக் கருதும் இவரன்றோ உயர்ந்தார்! திருமூலர் அருளிய திரு மந்திரத்தை ஓதும் இவரோ ஆவினைக் கொன்றுண்ண உய்ப்பார். பிறவுயிர்க்கும் வரும் சிறு துன்பத்தையும் தமக்கேற்பட்டதெனக் கருதும் பிறழா நோன்பின ரன்றோ இவர். 'அருட் செல்வமே செல்வத்துட் செல் வம்; அஃதிலார்க்கு அவ்வுலகமில்லை' என்னும் வான் புகழ் வள்ளுவர் மொழி அறிந்தவரன்றோ? ஆகவே, போர்ச்சுக்கேசியர் தலைவன் ஆணைக் கஞ்சி ஆவினைக்

கொடுத்தலினும் வேற்றிடம் சென்று எத்துணை இடுக்கட்படினும் நன்றே எனக் கருதியே அவன் ஆணையை நிறைவேற்ற தொழிந்தார். ஒரு பசுவினைக் கொடுத்து மனை மக்கள் சுற்றமுடன் தாயகத்து இன்பமாக வாழத் தெரியாத பைத்தியக்காரரர் என்று பழிப்பவரு முளர். ஆனால், ஒழுககமே உயிரினும் மேலானது என்று இம்மை யினபமெல்லாம் துறந்த இவரோ பைத்தியக் காரர்? இல்லை; உயர்நதவர் இவரே! கொள்கைக்காக உயிரையும் வெறுத்தவர் இவரே! இவரே தெய்வப் பிறவி! மனிதருள் மாணிக்கம்! அவர் வாழ்வு என்ன வாயிற்று என்பதைக் காண்போம்.

யாழ்ப்பாணம் நீங்கிச் சிதம்பர மடைந்த ஞானப் பிரகாசர் சில ஆண்டுகள் தங்கி வாழ்ந்தபின் வடநாடு சென்றார். ஆங்கே வடமொழிப் பண்டிதர்களை அணுகிப் புலமை பெற்றார். தமிழிலும் வடமொழி யிலும் புலமை அடைந்த அவர் மீண்டும் தமிழகம் போந்தார். திருவண்ணுமலைக் குன்றக்குடி ஆதீனம் சென்று துறவு பூண்டார். அவ்வாதீனத்தின் ஆதரவில் வாழ்ந்துவரும் நாளில் செய்த சைவ சமயத் தமிழ்த் தொண்டுகள் அளப்பரியன. தமிழிலுள்ள சித்தாந்த நூல்களையும் உரைகளையும் வடமொழியிற் பதித்தார். சிவஞான சித்தியார் என்ற சமய சாத்திர நூலிற்கு நல்ல உரை வரைந்தருளினர். இன்றும் சிதம்பரத்தி லுள்ள திருக்குளம் வந்தவர்க்கெல்லாம் ஞானப் பிரகாசர் திருப்பெயரைச் சொல்லா நிற்கின்றது. நன்றும் தீதும் பிறர்தர வாராவன்றே? அடிகளாருக்குப் போர்ச்சுக்கேசிய தலைவனல் நேர்ந்த தீங்கே நன்மை யாகி முத்தியின்பம் எய்தக் காரணமாயிற்று. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே' என்ற மணிவாசகர் மாண்புறு மொழிகளே இவர்தம் வாழ்விற்கு இலக்கியமாயிற் றல்லவா?

இவர்தம் மரபு யாழ்ப்பாணத்து நல்லூரிலே பன்னெடுங்காலம் தொடர்ந்து நிலவியது. போர்ச்சுக்

கேசியர் வணிகத்தில் தனியாட்சி செலுத்தினர். இதனை அறிந்த ஐரோப்பியர்களான ஆங்கிலேயரும் டச்சுக் காரரும் இந்திய நாட்டிலே வணிகம் செய்யத் தொடங் கினர். கி. பி. 1600-ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசியாகவிருந்த எலிசபெத்து அம்மையார் அளித்த உரிமைச் சாசனத்தின்படி நூறு ஆங்கிலேய வணிகர்கள் ஒரு வணிகக் குழுவை அமைத்தனர். இரு சாராரும் சேர்ந்து போர்ச்சுக்கேசியரைப் போட்டி யிட்டு வென்றனர். ஆதலால், இந்தியாவில் ஏற்பட்ட மாறுதல் யாழ்ப்பாணத்திலும் உண்டாயிற்று. பதினே ழாம் நூற்றுண்டில் போர்ச்சுக்கேசியரின் ஆட்சி நீங்கி, டச்சுக்காரரின் ஆட்சி நிலவியது. இவர்களும் வணிகத் தினும் தம் சமயத்தைப் பரப்புவதிலேயே மிகவும் கருத்தைச் செலுத்தினர். டச்சுக்காரர் காலத்திலும் பிற சமயத்தினர் தங்கள் உரிமையோடு வாழமுடிய வில்லை. இந்தக் காலத்தில் ஒரு குறிப்பிடத் தக்க நிகழ்ச்சி நடந்தது. அதுவே நம் ஞானப்பிரகாசர் மரபு மீண்டும் தழைத்தோங்கக் காரணமாயிற்று. அந் நிகழ்ச்சி யாது?

டச்சுக்காரர் ஆட்சி புரியுங்காலத்தில், ஞானப்பிர காசர் மரபிலே தோன்றி வாழ்ந்தவர் இலங்கைகாவல முதலியார் என்பவர். இவர் சிறந்த தமிழ்ப் புலமை யோடு மருத்துவப் புலமையும் உடையவர். இவர் காலத்தில் மருத்துவத் தொழிலில் இவரை வெல்ல வல்லவர் ஒருவரும் இல்லை யென்றே சொல்லலாம். ஒரு நாள், இலங்கைத் தீவினை யாண்ட டச்சுக்காரர் தலைவன் தாங்க முடியாத நோய்வாய்ப்பட்டான். மேல் நாட்டு மருத்துவக் கலையில் கைதேர்ந்த பலரும் பார்த் துக் குணம் அடையவில்லை. எத்தனையோ மருத்துவ முறைகளைக் கையாண்டும் பயன் சிறிதுமில்லை. இந் நிலையில் யாழ்ப்பாண நல்லூரிலே வாழ்ந்து வந்த இலங்கை காவலரைக் கேள்வியுற்று வரவழைத்தான்.

இறுதியாக, டச்சு அரசன் நோய் முழுதும் குணப்படுத்திய இலங்கை காவலரின் திறமையைப் பாராட்டி மிகுந்த பொருளைக் கொடுத்து மகிழ்ந்தான். மருத்துவக் கலையில் தலை சிறந்தவரென்பதை அறிவிக்க 'முதலியார்' என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்தான். அன்று முதல் தன் அரச குடும்ப மருத்துவராகவும் அமர்த்திக் கொண்டான். ஆகவேதான், இலங்கை காவல முதலியார் என்று அழைக்கப்படலானார். இவர் தம் ஒரே மைந்தன் பரமானந்தர் என்பவரையும் மருத்துவப் புலமை யுடையராக்கியதோடல்லாமல் அரச குடும்ப மருத்துவராகவும் விளங்கச் செய்தார். முதலியாரவர்களின் பேரர் கந்தப்ப பிள்ளை என்பாரும் தமிழ்ப் புலமை நிரம்பியவராய் அரசாங்க அலுவல் புரிந்தார். தம் தந்தையாரும் பாட்டனாரும் நடத்திய மருத்துவத் தொழிலை அவரும் விடவில்லை. அவர்களிருவரைக் காட்டிலும் மிகுந்த திறமையுள்ள மருத்துவரெனப் புகழ் பெற்றார். பின்வரும் யாவருக்கும் பயன்படும் வண்ணம் மருத்துவ நூல்களை யெல்லாம் நுட்பமாகப் பயின்று வசனமாக எழுதினார். அவர் எழுதிய நூல்கள் பல. அவர் தம் ஓய்வுக் காலத்தையும் இயற்கையோடு இயைந்து வாழப் பயன்படுத்திக் கொள்பவர். பூங்கா வளர்ப்பதில் விருப்பமுடையவர். நாடகக் கலையை வளர்க்கும் நாட்ட முடையவர். பல நாடகங்களை எழுதித் தமிழ் மொழிக்குச் சிறந்த தொண்டாற்றியவர். இவ்வளவு சிறப்பும் நல்குடிப் பிறப்பும் பெற்ற நுண்மாண் நுழைபுலமுடைய **கந்தப்ப பிள்ளை** யவர்களே நம் நாவலர் பெருமானின் தந்தையார். நாவலர் பெருமானை மகனாகப் பெறும் பேறு பெற்ற **சிவகாமி அம்மை**யே அவர்தம் தாயார். இவர்கள் இருவருக்கும் இறுதி மகவாக, கி. பி. 1822-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்தவரே ஆறுமுகன் என்ற பிள்ளைத் திருநாம முடைய நம் நாவலர் பெருமான்!

3. கல்வி வேட்கையும் இளமை வாழ்க்கையும்

இந்தியாவிற்குள் வந்த டச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் வணிகத்தில் போட்டி வலுவடைந்தது. டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்கள் சிலரைத் தூக்கிலிட்டனர். இதன் காரணமாக வெகுண்டெழுந்த ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்களை இந்திய நாட்டில் வணிகம் செய்யாதவாறு தடுத்தனர். ஆதலால், டச்சுக்காரர்கள் கிழக்கிந்தியத் தீவுகளில் மட்டும் தம் வணிகத்தை வளப்படுத்தினர். அதன் பின், பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயருக்குப் போட்டியாக ஒரு வணிகக் குழு அமைத்து இந்தியாவில் வாணிபம் செய்தனர். பதினெட்டாம் நூற்றுண்டில் பிரெஞ்சு கவர்னர் டூப்ளே என்பார் ஆங்கிலேயரின் வணிகத்தைத் தென்னிந்தியாவினின்றும் ஒழித்துவிட எண்ணினுர். எண்ணிய எண்ணம் முற்றுப் பெறுவதற்கு முன்னர், கருநாடக நவாபாக விளங்கிய மகமது அலியுடன் வாரிசு காரணமாகத் தலையிட்டுப் பகையைத் தேடிக்கொண்டார். இதனுல் மகமது அலி ஆங்கிலேயருடன் சேர்ந்து பிரெஞ்சுக்காரர்களைத் தொலைத்துவிடத் திட்டமிட்டான். ஆங்கிலேயரும் நல்ல சமயம் வாய்த்தது என்று கருதி, எஃகு மனம் படைத்த கிளைவ் என்ற படைத் தலைவன் கீழ் பெரும் படையை விடுத்தனர். போரில் பிரெஞ்சுக்காரருக்குத் தோல்வியே கிடைத்தது. பிரெஞ்சுக்காரர்களின் போட்டி ஒழிந்தது. டச்சுக்காரர்களும் ஒடுக்கப்பட்டனர். இந்த நூற்றுண்டிலேதான், யாழ்ப்பாணத்திலும் டச்சுக்காரர் ஆட்சி நீங்கி, ஆங்கில ஆட்சி தொடங்கியது. நாவலரின் முன்னேர்கள் டச்சுக்காரர் ஆட்சியிலே புகழ்பெற்று விளங்கினுர்கள் என்பது வெளிப்படை. அவர்கள் ஆங்கில

ஆட்சியில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதும் அறிய வேண்டு மன்றோ?

நாவலரின் தந்தையார் கந்தப்ப பிள்ளை, தம்மைப் போன்றே மக்களும் புலமை பெற வேண்டுமென்று கருதித் தம் கடமையைச் செய்வாரானார். 'சான்றோ னாக்குதல் தந்தைக்குக கடன்' என்ற முதுமொழி யறிந் தவரல்லவா? ஆண் மக்கள் ஐவருள் நால்வர்க்குத் தமிழ்ககல்வியும் ஆங்கிலக் கல்வியும் ஒரு சேரப் பெறு மாறு செய்தார். அந் நால்வரும் ஆங்கில அரசாங்கத்தில் அலுவல் பெற்றுச் சிறப்புற வாழ்ந்தனர். அரசாங்க அலுவலை மேற்கொண்ட போதிலும் தம் மொழி மறந்து வாழுந் தன்மையரல்லர். அவாகளனைவரும் தாய் மொழியினிடத்து மிக்க அன்புடையவர்கள். அவருள் ஒருவர் இலக்கண இலக்கியங்களை முறைப்படி கற்றுப் புலவர் பட்டமும் பெற்றாரெனின் அவர்தம் தாய் மொழிப் பற்றை என்னென்பது! கடைசி மகவாகிய நம் ஆறுமுக நாவலர் தந்தையால் மிக்க அன்பு பாராட்டப்பட்டவர். சிறு பருவத்திலேயே தமிழினபால் வேட்கையுடையார் என்பது அவர் தம் தந்தையா ருடனே இருந்து அவர் சொல்லிலும் எழுத்திலும் இடைவிடாது கவனம் செலுத்தி வந்தமையால அறிய லாம். பள்ளிப் பருவம் வந்ததும் யாழ்ப்பாண நல்லூரி லுள்ள சிறிய தமிழ்ப் பள்ளிக்குப் பயில விடுத்தனர். நீதி நூல்களையும், நிகண்டு முதலிய கருவி நூல்களையும் இளமையிற் கற்றார். இளமையிற் கற்பது எழு பிறப்பும் தொடர்வதல்லவா? ஆகவே, ஆசிரியர் கற்பித்தவற் றைச் செவி வாயாக, நெஞ்சு களனாகக் கொண்டு விடாது உள்ளத் தமைத்துத் தலை மாணவர் இலக கணத்திற்குப் பொருந்த விளங்கினார். கல்வி ஆர்வத் தைக் கண்ட யாவரும் அன்றே வியந்தனர் என்பது பொய் யன்று. பின்வரும் நிகழ்ச்சி யொன்றே அதனை மெய்ப்பிக்கும்.

நாவலர் கல்வி கற்று வரும் நாளில் தந்தையார் கந்தப்ப பிள்ளை முதுமைப் பருவத்தரா யிருந்தனர். மருத்துவத் தொழிலிற் சிறந்த அவருடைய உள்ளம் தமிழ்ப் பணியில் சென்றது. முப்பெரும் பிரிவினதாக விளங்குவது நம் அருமைத் தமிழ் மொழி. வேறு எம் மொழிக்கும் இல்லாத சிறப்புக்களில் இஃதும் ஒன்று. இயல், இசை, நாடகம் எனும் பிரிவுடன் திகழ்ந்ததை யாரே அறியார். அவற்றுள், இசையும் நாடகமும் காமம் பயப்பன என்று சமணர் முதலிய சமயத்தவர் வெறுத்தனர். அதனால் அவை யிரண்டும் வளர்ச்சியுருது குன்றத் தலைப்பட்டன. நாடகமோ முழுதும் அழிவெய்திவிட்ட தென்றே சொல்லலாம். இந்த நிலையை அறிந்த தமிழறிஞர் சிலர் மனம் வருந்தினர். நாடகக் கலையால் மக்கள் எய்தும் பயனை அவர்கள் நன்கு உணர்ந்தனர். சமணர் முதலியோர் கருத்துக்கள் அறிவிற்கு ஒத்ததன்று என ஆராய்ந்து கண்டனர். நாடகநூல்கள் பலவும் தமிழில் இயற்றத் துணிந்தனர். அத்தகைய நன்னோக்கம் கொண்டவர்களில் ஒருவரே நம் நாவலர் பெருமான் தந்தையார். ஓய்வுக் கால முழுவதையும் நாடக நூல்கள் எழுதுவதிலே கழித்தார். பல நூல்கள் எழுதியுதவினார். சாந்துணையும் நாடக நூலகளை எழுதிக் குவிக்கும் கருத்துக்கொண்டனர் போலும்! ஒரு நாள், ஏட்டினைக் கையிலே தாங்கி எழுத்தாணி கொண்டு ஒரு நாடகம் எழுதிக்கொண் டிருந்தார். சிந்தனை ஊற்றிலிருந்துவரும் கருத்துக்களை எழுத்தாணி வாயிலாகத் தீட்டித் தீட்டிப் படித்துக்கொண்டே இருந்தார். ஏட்டையும் எழுத்தாணியையும் பிடித்த வண்ணமே சிந்தனை தவழும் முகத்தினராய் நெடு நேரம் அமர்ந்தேவிட்டார்! பேச்சில்லை, மூச்சில்லை; அச்சடித்த பதுமையேபோல் அசைவில்லை. ஆம்; தமிழுக்காகவே உயிரைவிட்டார்! அந்தோ! நாடகம் முற்றுப்பெற வில்லையே என்ற ஏக்கந்தான் அவருக் கிருந்திருக்கும்! குடும்பத்தைப் பற்றி

அவருக்கு நினைப்பேது? தொண்டின்பால் மனம் வைத் தவர்க்குப் பிறபொருளெல்லாம் துரும்பல்லவா?

தந்தையார் இறந்தபோது நாவலர்க்கு ஒன்பது ஆண்டே நிரம்பியிருந்தது. அவர் இறப்பைப்பற்றி யாவ ரும் வியந்து பேசுவதைக் கேள்வியுற்ருர். 'நல்ல சாவு' யாருக்கு வாய்க்குமென நாட்டினர் புகழ்ந்த வண்ண மிருந்தனர். ஆனல், நாடகத்தை முடிப்பதற்குள் நமன் கவர்ந்துவிட்டானே என்றும் இரங்கினர். இறுதியாகக் கூறிய இந்த வார்த்தைகள் நாவலர் மனத்திலே நடம் புரிந்தன! பன்முறையும் அவைகளை நினைந்தார்! நினைத் தலும் செய்தலோ டொக்கும் என்பர் பெரியோர். அந்தக் கூற்றிற்கிணங்கத் தம் இளமைப்பருவமாகிய ஒன்பதாம் வயதில் தந்தை எழுதிய நாடகக் குறையை நிறைவு செய்தார். தந்தைக்கு உண்மையான கடமை யைச் செய்ததாக மகிழ்ந்திருப்பரன்ருே? நாடகத்தைத் தமயன்பால் கொண்டு காட்டினுர். இச்சிறிய வயதிலே இவ்வளவு இயற்கையறிவு பொருந்தியிருப்பதை அறிந் தார்; தழுவி மகிழ்ந்தார்; வியப்புக் கடலில் ஆழ்ந்தார்! மற்றவரும் அறிந்து மகிழ்ச்சியுள் திளைத்தனர்! அவர் கள் கண் முன்னே ஞானசம்பந்தப் பெருமானும் குமர குருபர வடிகளும் காட்சியளிப்பதுபோல் களித்துக் கூத் தாடினர் போலும்!

இவ்வாறு தம் உடன்பிறந்தார் பாராட்டக் கண்ட நாவலர் தலை சாய்த்து நின்றனர். தற்புகழ் விரும்பா நற்குடிப் பிறந்தவரல்லவா? தந்தையை இழந்த நாவ லர் தம் வாழ்வை வளம்பெறும் பொறுப்பை அவர்தம் தமயன் முதலானேர் ஏற்றுக்கொண்டனர். நாவலர் நுண்ணறிவைக் கண்டு தண்டமிழ்ப் புலவரிருவர்பால் தமிழ் கற்க விடுத்தனர். 'தந்தையொடு கல்வி போம்' என்னும் உலகமொழி பொய்யாகியது! தந்தையின் கடமையைச் செய்ய மகிழ்வுடன் போந்த தமயனுரைத் தந்தையாக எண்ணி வாழ்த்தியிருப்பரன்ருே? நாவலர்

முதன் முதலாகக் கற்கச் சென்ற ஆசிரியர் சரவண முத்துப் பிள்ளை என்பவர். அடுத்துக் கற்கச் சென்றது சேனாதிராயர் என்ற தமிழ்ப் புலவர்பாலாம். பன்னூ லாய்ந்த பவணந்தி முனிவ ரியற்றிய நன்னூலையும், அமுதசாகரர் அருந்தமிழ் யாப்பையும் நாடோறும் கற்று வாலானார். இவர்தம் கூர்த்த மதிக்கு ஆசிரியர்கள் நடத்தும் பாடம் கடலிற் கரைத்த காயம்போலிருந்தது! ஒவ்வொரு நாளும், காலையில் எழுந்து கடமையை முடித்து வழிபாடு செய்வர். பள்ளி சென்று நண்பகல் உணவுகொள்ள வருவர். உரிய காலத்தில் உணவு கிடைக்காதாயின் மீண்டும் கற்பதற்கேகுவர். நண்பகல் உணவுகொள்ள வில்லையே எனக் கருதி விரைவிலே வீடு திரும்புவாரல்லர். நன்கு பாடங் கேட்டு வழக்கம் போலவே இரவுப்பொழுதில் வந்து சேருவர். கருமமே கண்ணாயிருப்பவர் பசி நோக்காரல்லவா? அம்மட்டோ! ஆசிரியர் பாடஞ்சொல்ல வியலாத பொழுதினையும் வறிதே கழிக்கமாட்டார். அங்குள்ள குடியில்லா மனையிற் சென்று அமைதியாகப் பயின்றுகொண்டே யிருப்பர். ஆசிரியர் கற்பிக்கும் நீண்ட பாடல்களையும் படிக்கின்றபோதே இலக்கணப் பிழை முதலிய கண்டு சொல்லும் நுண்ணறிவு வாய்க்கப் பெற்றிருந்தார். அக் காலத்தில் மாணவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஏடு இராது. ஏட்டினை இரவல் பெற்றே எழுதிப் படிக் கும் காலம். நாவலர் இலக்கண இலக்கியங்கள் சிலவும், தனிப்பாடல்கள் சிலவும் கற்றுக்கொள்ள முடிந்தது. ஆசிரியர் ஒரே தடவை படிக்கும் பாடலைக் கேட்டுப் பொருளுணர்ந்து திருத்தம் கூறும் ஆற்றலு மிருக்கு மாயின் அவர் அறிவை என்னென்று புகழ்வது? ஆசிரி யர்களும் ஏனைய மாணவர்களும் தனி மதிப்புத் தாரா திருப்பரோ? இடைக்காலத்திலே ஏடாயிரங்கோடி எழு தாது தன் மனத்து எழுதிப் படித்த விரகராம் அந்தகக் கவி வீரராகவ முதலியாரும் இத்தகு கூர்த்த அறிவுடை

யாரே. ஆங்கில ஆட்சிக் காலமாகிய பத்தொன்பதாம் நூற்றுண்டிலே சென்னை உயர் நீதிமன்றத் தலைவரா யிருந்து அழியாப் புகழ் எய்திய சர். முத்துச்சாமி ஐயர் என்பார் தாம் கல்விபயிலும் இளமைக் காலத்தில் ஆசிரியர் கற்பிககாத நூலகளையும், பாடங்களையும் தாமே கற்று நினைவாற்றலிற் சிறந்தவராய்த் திகழ்ந் தனர் என்பதும் அறிந்து உளங்கொளத் தக்கது. இதனுல் பெறப்படுவதோர் உண்மை யாது? நூருண்டு கட்கு ஒரு முறையேனும் வியத்தகு பேரறிஞர் தோன்றி வழிகாட்டுவர் என்பதன்ரே?

நாவலர் நுட்ப அறிவு கண்டு மகிழ்ந்தவர்களில் அவரது உறவினர் விசுவநாத முதலியார் என்பவரும் ஒருவர். யாழ்ப்பாணத்திலே நீதிபதியாக விளங்கிப் புகழ்கொண்டவர். அக்காலத்தில், தமிழறிந்தவர்களால் கோவில்களில புராணங்கள் படிக்கப் பெறுவதுண்டு. கேட்டால் புண்ணியமுண்டு என்ற நோக்கத்தோடு வருபவரே பலராவர். புலமையைப் பற்றியோ கருத் துக்களைப் பற்றியோ கூர்ந்து நோக்குவார் மிக அரியர். அவ்வாறு புராணங்கள் நடைபெறுங் காலத்தில் நீதி பதியவர்கள் நாவலரையும் அழைத்துச செல்வது வழக்கம். செல்லுகின்ற நாட்களில் கந்த புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூர்ப் புராணம், பெரிய புராணம் முதலியவற்றுள் ஒன்றைப் படித்து விளக்குவார்கள். அவர்கள் படிக்கின்றபோதும், விளக் கிக் கூறுகின்றபோதும் இரு செவியும் பயன்படுமாறு உற்றுக் கேட்பர். கேட்ட பின்னர் பாடலிற் காணும் பிழை கள், கருத்து மாறுபாடுகள் முதலியவற்றை எடுத்துக் காட்டி யாவரும் ஒப்புமாறு செய்வர். பன்னீராண்டும் நிரம்பப் பெருத நாவலர் ஆயிரக் கணக்கான கதை களையும், பாடல்களையும், சித்தாந்த உண்மைகளையும் கொண்ட நூல்களைக் கேட்ட மாத்திரத்தே பிழை கண்டு மெய்ப்பித்துக் காட்டும் பெற்றி கண்டு வியவாதார்

யாரே? அவரை அற்புதப் பிறவி என்று யாவரும் வணங்க முற்பட்டமைக்கு இதனினும் சான்று வேண்டுங்கொல்?

இவ்வற்புத நிகழ்ச்சியைத் தமயன் முதலாயினோர் கேட்டு உவகையுற்றனர். 'இவருடன் பிறத்தற்கு என்ன மாதவம் செய்தோம்' என எண்ணி எண்ணி உருகினர்; தமிழைக் கற்கச் செய்ததோடு நில்லாமல் நாவலரை ஆங்கிலமும் கற்கச் செய்யும் விருப்புக் கொண்டனர். இந்த உலகிலே திறமையுள்ளவர் ஆதரிப்பாரில்லாமல் எத்தனையோ பேர் மண்ணோடு மண்ணாய்ப் புதையுண்டனர். தங்கள் திறமையை உலகிற்கு உதவும் வாய்ப்பில்லாது உயிர் துறந்து கல்லறையிலே அடங்கியோர் எத்தனை பேர்? அந்த நிலையை நம் நாவலருக்கு அளிக்காத தமிழினத்திற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்! நாவலர் திறமையை அறிந்த அவர் உடன்பிறந்தார் அவர் திறமையை வளர்க்கப் பேருதவி புரிந்தனர். அந்நாளில், பார்சிவல் துரை நடத்திவந்த பள்ளியில் ஆங்கிலங் கற்க உய்த்தனர். நாவலர் கருத்தூன்றிக் கற்று மேல் வகுப்பை அடைந்தார். இவர் திறமையைக் கண்ட துரைமகனார் மிகவும் பாராட்டினர். இவருக்குத் தமிழ்ப் புலமை மிக்கிருப்பதை அறிந்து தாமும் பயன்படுத்திக் கொள்ள நினைந்தார். ஆகவே, பள்ளியில் மாணவராக இருந்த நாவலரைக் கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலமும், மேல் வகுப்புகளுக்குத் தமிழும் பயிற்றுவிக்கும் ஆசிரியராக அமைத்தார். இதனால் நாவலருக்கு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஐயந்திரிபறக் கற்றுத் தெளிவு பெற ஒரு நல்ல வாய்ப்பும் கிடைத்தது! பதின்மூன்று வயதே நிரம்பிய இவர் போன்றார் மாணவ ஆசிரியராக விளங்கினர் எவரையேனும் கேட்டதுண்டோ? ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்ட துரைமகனார் ஒருவர் தம்மினும் வேறாகிய

மொழியையும் சமயத்தையும் கொண்ட நாவலரைப் பாராட்டியது அற்புதமல்லவா? இப்படிப்பட்ட அற்புத நிகழ்ச்சிகள் பல அவர் வாழ்விலே நிகழ்ந்துள்ளன. அவர் அறிஞர்களாலும் தொழத்தக்க விழுமியராகிய தும் அந்நிகழ்ச்சிகளாலே யன்றோ?

இருமொழியும் கற்றுத் துறைபோகிய நாவலரவர்கள் பார்சிவல் துரைக்குத் தமிழாசிரியரானார். அத்துரைமகனார் கிறிஸ்தவ மறையாகிய விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்து வந்தார். அப்பணிக்குத் துணைபுரியும் தகுதியுடைய தமிழ்ப் புலவர் நாவலர் ஒருவரே எனத் தேர்ந்து சேர்த்துக் கொண்டார். நாவலரும் பலரால் எழுதிய விவிலிய நூல் உரைகளை யெல்லாம் ஆழ்ந்து பயின்றார். கிறிஸ்தவ சமயக் கொள்கைகளையும் நன்கு அறிந்து மனதிலே மறவாது அமைத்துக் கொண்டார். மொழிபெயர்ப்பில் இனிய எளிய தமிழ் நடையைக் கருத்துக்கள் சிறிதும் மாறுபடாதவாறு அமைத்துதவினார். சொல்லும் பொருளும் சுவைபட விளங்குதற்கு நாவலர் துணையே காரணம் என்பதைத் துரைமகனார் அறிந்து அகமிக மகிழ்ந்தார். எனினும், அதே சமயத்தில் சென்னையிலுள்ள கிறிஸ்து சபையாரும் கிறிஸ்தவ மறையை மொழிபெயர்க்க ஏற்பாடு செய்திருந்தனர். இதனால் பார்சிவல் துரை, தம் மொழிபெயர்ப்பு சென்னையிலுள்ள சபையாரால் ஏற்றுக் கொள்ளப் படுமோ என்ற ஐயமும் அச்சமும் கொண்டார். நாவலரையும் அழைத்துக் கொண்டு சென்னை யடைந்தார். சென்னையிலுள்ள சபையார் மொழிபெயர்ப்பே சிறந்தது எனச் சென்னையிலுள்ளோர் ஓரவழக்காடினர். ஆகையால், சபையார் அந்தக் காலத்தில் தமிழ்ப் புலமை மிகுந்து விளங்கிய வித்துவான் மகாலிங்க ஐயரை நடுநிலையாளராகத் தேர்ந்து, இரு மொழி பெயர்ப்புகளையும் ஒப்படைத்தனர். சென்னையில் பிறந்து வாழ்பவராயிருந்த ஐயரவர்கள் புலமை

யொன்றையே அளவுகோலாக வைத்து ஆராய்ந்து பார்த்துத் துரைமகனார் மொழிபெயர்ப்பையே சிறந்தது என்று தீர்ப்பளித்தார். காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்வது அறிவுடைப் பெருமக்கள் செயலல்லவா? அன்று முதல பார்சிவல் துரை நாவலர்பால் முன்னையினும பன்மடங்கு ஈடுபாடும் மதிப்பும் உடையவரானார். சென்னையில் நிகழும் கூட்டங்களில் நாவலர் வரின் அத்துரைமகனார் மதித்து வரவேற்பர் என்பர். இந்த மொழிபெயர்ப்பைப் படித்த வித்துவான் மகாலிங்க ஐயரவர்கள், "யாழ்ப்பாணத்தில் இவ்வளவு சிறந்த தமிழ் உளதோ" எனக் கூறி மகிழ்வெய்தினராம். இளமையில் செய்த முதல் முயற்சியே நாவலருக்குப் புகழைத் தந்து, சென்னையில் வாழ்ந்த பல தமிழ்ப்புலவர்களின் நட்பைப் பெறும் பேற்றையும் ஈந்தது. சென்னையினின்றும் தாயகமாகிய யாழ்ப்பாணம் போந்தார். ஆங்கிலத்தைத் தமிழாக்கலும், தமிழை ஆங்கிலத்திற்கு ஏற்றலும் ஆகிய பணியில் இவருக்கு இணையாவார் எவருமில்லை என்ற புகழ் யாழ்ப்பாணம் எங்கும் பரவியது! நாவலர் தம் சமயப்பற்றில் எள்ளளவும் குறையாது அம்மொழி பெயர்ப்பில் ஈடுபட்டு வந்ததும் அவர்தம் பேராற்றலே யன்றோ?

பார்சிவல் துரைமகனாரின் சமயத் தொண்டு நாவலரையும் தொண்டுணர்ச்சி பெறத் தூண்டிற்று. அவ்வுணர்ச்சியால் உந்தப் பெற்ற அவர் சித்தாந்த சாத்திரங்களை விரைந்து கற்க விழைந்தார். ஆசிரியர்கள் துணையின்றியே அனைத்தையும் நுணுகிப் படித்து முடித்தார் என அறிகின்றோம். இன்றும் எத்தனையோ அறிஞர்கள் சித்தாந்த சாத்திரங்களனைத்தையும் சற்றிருக்கின்றார்கள். ஐயந்திரிபின்றிக் கற்றவர் விரல்விட்டு எண்ணத் தகும் சிலரே. அவர்களும் நல்லாசிரியர் பலரின் துணை நாடி ஆண்டுக் கணக்காகப் பாடம்

கேட்டவரேயாவர். அவரும் சித்தாந்த சாத்திரங்களை மட்டுமே கற்றவராயிருப்பர். அல்லாவிட்டால், இலக்கண இலக்கியங்களை மட்டுமே கற்ற புலவராயிருப்பர். ஆனால், நம் நாவலரவர்களோ எந்த ஆசிரியரையும் நாடாது சில திங்களில் தானே கற்றுப் புலமை எய்தினார் என்றறிகிறோம். இலக்கண இலக்கியங்களும் சித்தாந்த சாத்திரங்களும் கற்ற அவர் அவற்றோடு அமைந்தாரா? இறைவனால் அருளிச்செய்யப்பட்ட ஆகமங்களையும் கற்க விழைந்தார். அவ்வாகமங்களுள் வேதம் பொது நூலாகவும், சிவாகமம் சிறப்பு நூலாகவும் விளங்குதலை அறிந்தார். சிவ சமயம் ஒன்றற்கேயுரிய சிவாகமத்தைப் படிப்பதற்குரிய முயற்சியில் ஈடுபட்டார். அவ்வாகமத்தைப் பயில்வதற்கு வடமொழிப்புலமை இன்றியமையாது வேண்டுவதாயிற்று. ஆகவே,வடமொழிநூல்களைப் பிறருதவியின்றிப் படித்து வருவாராயினர். இயற்கையறிவு சிறக்கப் பெற்ற அவருக்கு வடமொழிப் புலமையும் தானே அமைவதாயிற்று. அவர் வடமொழியைத் தானே கற்றதற்கு ஒரு காரணம் உண்டு. இந்தக் காலத்தைப் போன்று எவரும் எம் மொழியையும் விரும்பினால் கற்கமுடியும் என்ற உரிமை அக்காலத்தில் இல்லை. ஒருவர் பயில விரும்பினும் பயிற்றுவிக்கும் ஆசிரியர் விரும்பவில்லையானால் அவ்விருப்பம் நிறைவுறாது. இடைக்காலத்தே வாழ்ந்த வடமொழி தென்மொழிக் கடல்களை நிலைகண்டுணர்ந்த மாதவச் சிவஞான அடிகளார் இளமை வரலாற்றின் நிகழ்ச்சியினை ஈண்டு அறிய வேண்டுவதேயாம். பிறவியிலேயே மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்றவர் சிவஞான முனிவர். அவர் திருவாவடுதுறையாதீனத்திலே தமிழ்க் குன்றாக வீற்றிருந்தார். வடமொழி படித்துணர வேண்டுமென அவா மிக்கிருந்தது. தொண்டைநாட்டு வள்ளல் மணலி சின்னையா முதலியாரிடம் தம் விருப்பைத் தெரிவித்தார். முதலியாரவர்கள் முனிவர்தம் அவாவினைத் தாம் அறிந்த வட

மொழிவாணர்களிடம் அறிவித்தார். அவர்கள் கற்பிக்க மாட்டோம் என்று வெளிப்படையாகச் சொல்ல வியலாதவர்களாய் ஏதோ காரணங்களைக் கூறினர். முதலியாரவர்கள் முனிவரின் அவாவினை மேலும் வற்புறுத்தித் திருவருள் குறிப்பித்தால் தாங்கள் கற்பிக்கலாமன்றோ என வினவினர். திருவருள் குறிப்பு என்றதும் மறுக்கவியலாது இசைந்தனர். அவ் வடமொழி வாணர்கள் விருப்பின்படி ஒரு குடத்தில் நூற்றியொரு சீட்டு எழுதி இட்டனர். 'கற்பித்தல் கூடாது' என்று நூறு சீட்டும், 'கற்பித்தல் கூடும்' என்று ஒரு சீட்டும் எழுதியிருந்தனர். குடத்தினைக் குலுக்கித் திருவுளச் சீட்டை எடுத்தனர்! 'கற்பித் தல் கூடும்' என்ற ஒரே சீட்டு வந்தது! வடமொழி பெரும்பாலான மக்களால் பயிலாமைக்கும், உலக வழக்கு இழந்தமைக்கும் இதுவும் ஒரு காரணமாகும். பிறிதொரு காரணமும் உண்டென்பர். வேதாகமங்களைப் பெரிதும் போற்றி ஒழுகுபவர் வடபுலத்தினர். சிவாகமங்களைப் பெரிதும் போற்றியொழுகுபவர் தென்புலத்தினர். தென்புலத்தவர் சித்தாந்த சாத்திரங்களுடன் சிவாகமங்களும் கற்றுவிட்டால் சிவநெறியினையே மக்கள் போற்றுவர். பிறநெறி குன்றுதற் கேதுவாகும் . என்பதுவுமாம். இதனை நாவலரவர்கள் நன்குணர்ந்தே சிறப்புத் தன்மையுடைய சிவாகமங்களைப் பயிலப் போந்தனர். சிவாகமங்களின் தெளிந்த சாரமே நால்வர் அருளிய தேவாரத் திருவாசகங்கள் என்பதை உணர்ந்தார். அவற்றின் செழும் பாடல்களையும் அன்போடுருகி அகங்குழைந்து பயில்வாராயினர். அஞ்சல் என்றருள் செய்யும் ஆண்டவனைப் போற்றி வழிபட வேதத்தினும் சிறந்தது சிவாகமமே என்ற கருத்துடையவர் நாவலர். இக்கருத்து சிவநேசச் செல்வர் சிவப்பிரகாச அடிகளாருக்கும் உரியது. திருவாசகத் தேனினை மாந்தித் தம்மையும் மறந்து பாராட்டும் பாடலில்,

"வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே"

என வரும் அடிகளே சான்றாகும். "தமிழ்ப் பாட்டுக் குருகும் சொக்கநாதன்" என்ற பொருள் பொதிந்த சொற்றொடரும் ஈண்டு நினைந்து இன்புறத் தக்கதாகும்.

இவ்வாறு மும்மொழிப் புலமையும் செம்மையாகப் பெற்று யாவரும் வியக்கும் வண்ணம் நாவலர் சிறப் படைந்தார். தம்பால் வருவாரிடத்துப் பன்னூல் கருத்துக்களையும் அள்ளி அள்ளி வீசி முப்பொரு ளுண்மையைச் செப்பமுறக் காட்டுவர். கேட்டார் மயிர் சிலிர்த்து "இவரே நம் ஐந்தாங் குரவர்" என அடி பணிந்து ஏத்துவர். அவரைக் காண்டலே இம்மைப் பிறப்பின் பயன் என எண்ணினர். தமக்குத் தெரியா தென்று பிறரிடம் சென்று ஒன்றையுங் கேட்டறியாத நாவலர்பால் எண்ணிறந்த புலவர்கள் வந்து தங்கள் ஐயம் நீங்கித் தெளிவு பெற்றனர். இளைஞராயிருந்த போதே இந்தியாவிலும் இவருடைய பெருமை நிலவிற் றெனில் இவரை 'ஐந்தாங் குரவர்' என்று புகழ்தலில் தவறுமுளதோ?

4. இரு பெரும் பணிகள்

இளமையிலேயே புலமை நலம் சிறக்கப் பெற்ற நாவலரை யாழ்ப்பாணத்து மக்களெல்லாம் தம் சமய குரவராகப் போற்றி வரத் தலைப்பட்டனர் என்பதை முன்னர் அறிந்தோமல்லவா? அவர்கள எண்ணிய எண்ணம் பழுதாகாதபடி நாவலர் வாழ்க்கை இறுதி வரையிலும் சிறந்த பணியாற்றி விளங்கிற்று என்பது பின்வரும் செய்திகளால் உறுதியாகும்.

பார்சிவல் துரையினிடம் நாவலர் தமிழாசிரியராக இருந்து வந்தாரல்லவா? அப்பொழுது அத்துரைமகனார் தம் சமயத்திற்குச செய்துவரும் அரும் பெரும் தொண்டினைக் கண்டார். சிறுவர்களுக்குக் கல்வி புகட்டும் பள்ளிகள், ஆடவரும் பெண்டிரும் அன்புடன் சென்று வழிபாடு செய்வதற்குரிய கோவில்கள் அமைத்துச் சமய அறிவு வளர்ப்பதைக் கண்டார். குருமார்கள் ஊர்கள் தோறும் சென்று பணியாற்றுவதும், வேத நூலின் கருத்துக்களை ஒவ்வொருவரும் படித்துத் தம் சமய நெறி தவருது ஒழுகச் சிறுநூல் வடிவில் உதவி வருதலையுங் கண்டார். புத்த, இஸ்லாமிய சமயத்தவர்களும் தத்தம் சமயவொழுக்கங் குறையாதபடி தொண்டில் முனைந்து நிற்பதையுங் கண்டார். ஆனால், சிவ சமயத்தவர்கள் தம் மொழி சமயம் இரண்டையும் பற்றிக் கவலை கொள்ளாத இழிநிலையையும் கண்டார். தமிழும் சமயமும் தாழ்வுற்றுக் கிடக்கும் நிலைகண்டு இரங்கினர். அம்மக்களின் சூது நிறைந்த சுருங்கிய உள்ளத்தையும் அறிந்தார். இந்த நிலை நீடிக்குமானல் அழிவே வந்து சேரும். ஆகவே, இப்புல்லிய நிலையினை மாற்றிப் புதுநிலை தேடவேண்டுமென்று உறுதிகொண்டார்! அந்த உறுதியே பார்சிவல் துரையிடத்து அலுவல் பார்ப்பதின்றும் விலகக் காரணமாயிற்று. நாவலர்

இரண்டு பெரிய குறிக்கோள்களைத் தம் இளம் பருவத்திலே உருவாக்கிக்கொண்டார். தமிழன் என்ற பெருமையோடு தலை நிமிர்ந்து வாழவைக்கும் தாய் மொழி வளர்த்தலும், இம்மை மறுமைப் பயன்களை நல்கும் சமயத்தைக் காத்தலும் ஆகிய குறிக்கோள்கள் இரண்டுமேயாம். இவற்றைத் தவிர வேறொன்றையும் வைக்க அவருள்ளம் இடந்தரவில்லை. "**தமிழ், சமயம் ஆகிய இரண்டும் என இரு கண்கள்; அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப பயன் கொள்வதே என் கடன். அவை வாழப் பணிபுரிதலே என் வாழ்வின் குறிக்கோள்**" என்று தன்னைத் துறக்கும் முறுகிய நிலைக்கு வந்துவிட வேண்டியதாயிற்று! இவ்வாறு துணிவதற்குக் காரணமாயிருந்த காலநிலையினைக் காண்போம்.

நாவலர் வாழ்ந்த காலம் ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த காலமாகும். அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் புலமையுடைய புலவர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். சிவநெறி நின்றொழுகும் சமயப் பெரியார்களும் வாழ்ந்தனர். ஆனால், மொழி, சமயம் இரண்டையும் தனியுரிமையாக ஆக்கிக்கொண்டார்களே யல்லாமல் மக்கட்குப் பயன்படுத்தும் பெருநோக்கம் கொண்டார்களில்லை. தாம் கற்றவற்றையும் தம் மைந்தர்க்கும் சொல்லாது மறைத்து ஒழுகி வந்தவர் சிலர். கிடைத்தற்கரிய ஏட்டுச் சுவடிகளை இரவலாகப் பெற்று எழுதிக் கொள்வதும் பிழை படுத்தி அதன் தூய்மை கெடுத்து அறியாதார் போன்று திரும்பச் சேர்ப்பவர் சிலர். ஒருவர் தாம் கல்வி கற்ற காலத்தில் எழுதி வைத்திருந்த சிறந்த குறிப்புக்களைத் தாமொருவரே பயன்படுத்திக் கொண்டார். அதன்பின் அந்நூற் குறிப்புக்கள் யாவற்றையும் உறவினர்களால் கொணருமாறு பணித்தார். தாம் நோய்வாய்ப்பட்டிருந்ததால் அவற்றைத் தன் முன்னே குவிக்கச் செய்து எரியூட்டினார். அவ்

வேடுகள் முழுவதும் எரிந்து சாம்பலானதைக் கண்ட பின்னரே உயிர்துறந்தார். இந்த நிகழ்ச்சி யொன்றே நாவலர் காலத்து மக்களின் மனநிலையை அறியப் போதுமன்ருே? இந்நிலையில் மக்களிடத்தில் தமிழார் வமோ சமயவுணர்வோ எள்ளளவேனும் இருந் திருக்குமோ? இப்படிப்பட்ட காலமே நம் நாவலர் பெருமான் பிறந்து வாழ்ந்த காலம். ஆகவேதான், தம் வாழ்வைத் தமிழும் சைவமும் தழைத் தோங்கு வதற்குத் துறந்துவிட முடிவு செய்தார். அவ்வாறு செய்த முடிவு எவ்வாறு நிறைவேறியது ?

மொழி என்பது நாட்டின் வளர்ச்சியையும் மக் களின் நாகரிகத்தையும் உணர்த்தும் கருவியாகும். அந்த உண்மையை நன்கு அறிந்தவர் நம் நாவலராவர். அக் காலத்தே வீழ்ச்சியுற்றுக் கிடந்த யாழ்ப்பாண மக்களை எழுச்சிபெறச் செய்யவல்ல கருவி தமிழ்மொழியை யன்றி வேறில்லை எனத் தேர்ந்து தெளிந்தார். ஒவ் வொருவ ருள்ளத்திலும் தமிழ் ஆர்வம் எழச் செய்ய வேண்டுமென்ற கருத்துக் கொண்டார். மக்களிடம் மொழியுணர்ச்சியை யுண்டாக்கிவிட்டால், சமயக் கருத்துக்களைத் தூவி எளிதில் பயன்பெறச் செய்ய லாம் என்று பலகால் சிந்தித்து வந்தார். அச்சிந்தனை யின் முடிவே யாழ்ப்பாணமெங்கும் தமிழ்ப்பள்ளிகள் தோற்றுவிக்க வேண்டுமென்று கருதியதாம். அக் கருத்து அப்பொழுதிருந்த கால நிலையில் ஒன்றும் செய்ய வியலாதவாறு அடங்கிவிட்டது. ஆகவே, தாமே ஓரிடத்தில் சில மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்கினர். தன்பால் கல்வி பயில வரும் மாணவர் வசதியையே கருதி இரவு பகலாகப் பாடங்களைப் போதித்து வந்தார். கைம்மாருக எவ் வுதவியும் பெருமல் சில ஆண்டுகள் உழைத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சங்க நூல்களில் தலை சிறந்த திருக்குறளையும், நன்னூல், நிகண்டு முதலிய

இலக்கண நூல்களையும், பெரிய புராணம் முதலிய பக்தி நூல்களையும் தம்பால் பயின்ற மாணவர்கட்கு விளக்கமாகக் கற்பித்து வந்தார். அவர்பால் பயின்ற மாணவர்கள் சிலரேயாயினும், தமிழார்வ மிகுந்து, சமயவொழுக்கம் சிறந்து பெருந்தன்மையுடையவர்களாக விளங்குமாறு செய்தார். அதனை நினைக்கும் போது நாவலர்தம் தமிழார்வத்தை இனைத்தென்று சுட்டுதல் எளிதோ? அப் பேரார்வம் பழங்காலப் புலவர் பெருமக்களின் அடிச்சுவட்டிலேதான் வந்திருக்க முடியும் என்பதற்கு ஐயமுண்டோ?

பழங்கால மக்கள் மொழியிடத்தே மிகுந்த பற்றுடையவர்கள் என்பதைத் தமிழ்க் கருவூலங்களே காட்டுகின்றன. காலங் கடந்து விளங்கும் நம் தமிழ் மொழி உலக முதன் மொழியாக விளங்கியது. 'ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' இளங்கோவின் சிலம்பிலே பேசப்படுவதே சான்றாகும். உலக நாகரிகத்திற் சிறந்து விளங்கிய கிரேக்க நாட்டினர் மொழியிடத்தும் தமிழ் இணைந்து இலங்குதலை இன்றும் காணலாம். இவ்வாறு தொன்மையும் பெருமையும் வாய்ந்த தமிழ்மொழி பெற்ற நூல்கள் கணக்கில. அவற்றுள், கடல் கொண்டன சில; எரியுண்டன சில; செல்லரித்தன சில; ஒன்னார் கவர்ந்தன சில; மண்ணில் புதைந்தனவும் நீரில் விடுத்தனவும் பல. இங்ஙனம் பாழாயின போகவும், தமிழர் செல்வமாக விளங்கும் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு, புராண காப்பியங்கள், சமய வழிபாட்டு நூல்கள், சிற்றிலக்கியங்கள் முதலியவற்றை ஆராய்கின்ற பொழுது, பிற மொழிகள் யாவும் நம் தமிழுக்குத் தலை வணங்கிக் கிடந்தன என்பதை அறியலாம். இவற்றை யெல்லாம் நன்குணர்ந்த நாவலர்க்குத் தமிழார்வம் பிறக்காதிருக்குமோ?

புலவர் பெருமக்கள் போற்றும் சங்ககால நூல் புறநானூறு. அதன்கண் தமிழார்வ மூட்டும் ஒரு காட்சியினை அறியாதார் இரார். சேர வேந்தன் அரண்மனையிலே கிடந்தது முரசுகட்டில். முரசினைத் தூய்மைப் படுத்தக கொண்டுபோய்விட்டனர். அதுபோழ்து பலவிடம் சென்று களைப்புற்று வந்த புலவர் தம்மை மறந்து முரசுகட்டிலில் துயின்றார். அரண்மனை வந்த வேந்தன் வெகுண்டு வீரவாளை ஓங்கினான். புலவர் என அறிந்ததும் வாளினை உறையிற் செருகினான். தாம் இழைக்கத் துணிந்த பெரும் பழிக்கு நாணினான். இரு கையினும் வெண்கவரி தாங்கி நின்றபடியே நெடுநேரம் புலவர் பெருமானுக்கு வீசித் தம் தமிழார்வத்தைக் காட்டினான். இந்த வியப்புறு செயலை அறியாதிருப்பரோ? அழகுத் தெய்வமாய் நின்றாள் தமிழ் மகள். அவள் அழகிற்குத் தன்னை ஈந்தான் ஒரு தமிழ்த் தலைவன். மீண்டு வருகின்றபோது ஏற்பட்ட தோள் மெலிவைக் கண்டான் அவன் உயிர்த் தோழன். ‘உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ இறைவா’ என வினவுமுகத்தான் மணிவாசகர் காட்டும் தமிழார்வத்தை உணராதிருப்பரோ? காவியம் பாடினும் கன்னல் மொழி மறவாது போற்றல் கடமை என்பார் போல, ‘அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு’ என அருந் தமிழன்னையைக் காட்டி ஆர்வ மூட்டும் இராமகாதையைப் பயிலாதிருப்பரோ? “இருந் தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர் விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்” என இறுமாந்து கூறும் தமிழ்விடு தூதில் நுழையாதிருப்பரோ ? படிக்கும் நூல்களிலெல்லாம் வடித்துக் காட்டப்படும் கருத்துக்களுக்கு முன் காட்சி தருவது மொழியன்றோ? ஆகவே, மொழியிடத்திலே நாவலர் மிக்க அன்பும் ஆர்வமும் கொள்ளப் பழந் தமிழ் மக்களே காரணமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

நாவலர் தம் குறிக்கோள்களில் முதன்மையாகக் கொண்டது தமிழ்ப் பணி என்பதை முன்னர்க் கண்டோம். அந்த எண்ணம் பள்ளிப் பருவத்திலேயே கருக்கொண் டிருந்தது என்பதைக் காணலாம். தமிழ்க் கல்வி கற்று முடிந்தபின் நாவலர் பார்சிவல் துரைமகனாரின் ஆங்கிலப் பள்ளியில் பயிலச் சென்றார். அந் நாளில் யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் தமிழ்ப் பள்ளிகள் நடைபெற்றன. அவற்றின் நிலை மிகவும் இரங்குதற்குரியது. மாணவர்கள் தம் ஆசிரியர்களுக்குக் கற்பிப்பதற்குரிய சிறு தொகையாகிய ஊதியமும் கொடுக்க முடியாத பொருள் முட்டுப்பாடான காலம். ஆசிரியர்கள் தங்கள் புலமையை யாவருக்கும் பயன் படுத்தாது மறைத்து ஒழுகும் தன்மையும் நிலவிய காலம். மாணவர்கள் பயில்வதற்கும் தமிழ்ச் சுவடிகள் கிடைக்கப் பெறாது அலைந்து வருந்தும்படியான காலம். அத்தகைய காலத்துத் தமிழைக் கற்றவர்களும் சமயத் தலைவர்களும் வாழ்ந்தனர். எனினும், மேற்கண்ட குறைகளைப் போக்க முயலாது வாளா விருந்தனர். இந்நிலையில், அழகிய நூல்களை அச்சிட்டு மாணவர்க் களித்து, ஆசிரியர்களுக்குத் தக்க ஊதியம் ஈந்து உயர்ந்த பதவிகளில் அமரச் செய்துவரும் அத் துரைமகனாரையும் அவர்தம் சமயத் தொண்டர்களையும் கண்டார். அப்பொழுது நாவலர்க்குப் பதினாறு வயதும் நிரம்பவில்லை. தமிழும் சமயமும் காப்பாரில்லாமல் தாயிழந்த சேய்களைப்போல ஒளி குன்றிக் காணப்படும் நிலை அவருள்ளத்தைத் தொட்டது! என் செய்வார்! பள்ளியில் பயிலும் இளைஞர் இறைவனை நினைந்தார். தமிழும் சமயமும் தழைக்க அருள் செய்யுமாறு ஒரு வெண்பாப் புனைந்தார். அதனையே அன்புக் காணிக்கையாகப் படைத்தார். இந்த நிகழ்ச்சி அவரது இளமை யார்வத்தைப் புலப்படுத்துகின்றதன்றோ? இளமையுள்ளத்தில் முகிழ்க்கும் கருத்து உருப்பெற்று இன்பமே விளைக்கும் என்ற உண்மையைத் தமிழகத்திலே தோன்

றிய கவிஞர்கள் வரலாற்ருல் நாம் அறிந்திருக்கின்ரே மன்றே. இந்திய விடுதலைப் போராட்டத்திற்குப் புரட்சிப் பாடல்களை யாத்துத் தமிழ் மக்களை விழிப்பூட்டிய பாரதியார் வாழ்வினைச் சிந்தனை செய்யுங்கள். எட்டய புரத்திலே பிறந்து நெல்லை இந்துக் கல்லூரியிலே மாணவராக இருந்துவந்தார். அக்காலத்தில், தென் ஞட்டுத் திலகர் என்று புகழ் பெற்ற தீவிர அரசியல் தலைவரும், வழக்குரைஞரும், தமிழறிஞரும் ஆகிய சிதம்பரனரை அறியாதவர்கள் இல்லை. அவர்கள் அடிமைத் திரையைக் கிழித்துச் சுதந்தர ஒளியைக் காணும்பொருட்டுத் தம் சொல்லாலும் செயலாலும் தமிழகமெங்கும் அஞ்சாது முழக்கம் செய்து வந்தார். அவரைப்போல் வீரஞ் செறிந்த தனித் தமிழ்ப் பேச் சால் தமிழுணர்வை எழுப்பியவர் அக்காலத்து வேறு யாரும் இலலை என்றே சொல்லலாம்! பள்ளியில் பயின்றுகொண் டிருந்த பாரதியார் சிதம்பரனரின் விடுதலை முழக்கத்தைச் செந்தமிழில் கேட்டார். கல்லூரி களில் மிகக் குறைந்த அளவே பயிற்றுவிக்கும் தமிழின் நிலையையும் எண்ணத் தொடங்கினர். பிறமொழி வேட்கை மிகுந்து தாய மொழி மறந்த தமிழகத்தைக் கண்டார். இவ்வாறு கல்லூரியில் கற்பித்தால் தமிழ் மொழி ஒருபோதும் முன்னேற்றம் அடையாது. மொழி வளர்ச்சியின்றேல் நாட்டின் விடுதலையைக் கனவிலும் கருத முடியாது என்று கருதினர். தாய்மொழிக்காகத் தன்னையே துறக்கத் துணிந்துவிட்டார். "செலவு தந்தைக்கு ஓராயிரம் சென்றது; தீதெனக்குப் பல்லாயிரம் நேர்ந்தன; நலமோர் எட்டுணையுங் கண்டிலேன்: இதை நாற்பதினுயிரங் கோயிலிற் சொல்லுவேன்" என்று வருந்தி, இளமையிலே அரசியல் வாழ்விற் புகுந்தார் என்பதைப் பார்க் கின்ரேம். இளமையிற் கொண்ட கருத்துப் பொய்த்து விடுமோ? 'நான் தமிழன்; எனது மொழி தமிழ்; தமிழ் நாடு எனது கோயில்; நான் கொள்வது தமிழ் உணவு;

நான் உயிர்ப்பது தமிழ் மூச்சு; தமிழர்கள் என் சுற்றத் தார். நான் எங்கே சென்று வாழ நேர்ந்தாலும் என் தமிழையும் தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் ஒரு நாளும் மறவேன்' என்ற உணர்ச்சியாற் கிளர்ந் தெழுந்தார். மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணேன் எனத் தெளிந்தார். சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே; அதைத் தொழுது படித்திட வேண்டும் என உண்மையறியக் கூறினர். வள்ளுவர் தந்த மறையையும், நெஞ்சை அள்ளும் சிலம்பையும் உள்ளமுருகப் பயின்றார். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என விண்முட்ட வாழ்த்தினர். தன்னே ரிலாத தமிழ் தரணியாள வேண்டுமெனத் துடித்தார். கவிதைகள் ஊற்றெடுத்துப் பெருகின. உணர்ச்சி கொண்டனர் மக்கள். வீர சுதந்தரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ? தமிழ்விடுதலைக்கு மருந்தாகி இன்பம் பயந்தது என்பதை அறியாதார் யாவர்? ஆகவே, நாவலர் இளமையிற் கொண்ட கருத்தும் எவ்வாறு இன்பம் பயந்தது என்பதை நோக்குவோம்.

1845-ஆம் ஆண்டிலே நாவலர் இலவசமாகக் கற்றுக் கொடுக்கும் தமிழ்ப் பணியை மேற்கொண்டா ரல்லவா? அவ்வாறு மேற்கொண்ட முதல் முயற்சியி லேயே வெற்றி கண்டார் என்பதை அவர்பால் பயின்று புலமைபெற்ற மாணவர்களாலே அறியலாம். அதுவேயு மல்லாமல், அவர்களும் தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமுறும் கற்றறிந்தோராயினர் என்பதும் ஈண்டு கருதத் தக்கது. நாவலரிடத்து ஒன்றியிருப்பதே பெரும்பேறு எனக் கருதிய மாணவர் சதாசிவம் பிள்ளையவர்கள். தொண்டிற்காக இல்லற வாழ்வைத் துறந்தவர். நாவலரால் தோற்றுவிக்கப்பட்ட சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற கல்விக்கூடத்தை

வளர்த்துப் புகழ் கொண்டவர். நூல்கள் பலவற்றை அச்சேற்றித் தமிழகத்தில பரப்பியவர். நாவலர் மறைந்த பின்னும் முப்பதாண்டுகள் வாழ்ந்து ஒப்பிலாப் பணி யாற்றியவர். நாவலர்க்குச் செயல் வீரர் ஒருவர் உண் டெனில், அவர் இவரேயாம்! ஒரு மாணவர், சித்தாந்த நூல்களையும் வடமொழி நூல்களையும் ஒருங்கே கற்றுப் புலமையிற் சிறந்தவர். பின்னாளில் பல மாணவர்கட்குச் சித்தாந்தப் பயிற்சியும் யோகப் பயிற்சியும் அளிக்கும் புகழ்மிக்க பேராசிரியாக விளங்கினார். ஒருவர், திருவண்ணாமலை யாதீனத் தம்பிரானாகித் தொண்டர்கள் பெருமையைத் தண்டமிழ்ப் பாக்களால் விரித் துரைக்கும் சேக்கிழார் புராணத்திற்கு எவரும் வெளி யிடாத ஒரு சிறந்த உரை வரைந்து புகழ் கொண்டார். ஒருவர், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நுணுகி யாய்ந்து, புராண காவியங்களைப் பொது மக்கள் உள்ளங் கொள்ளுமாறு விளக்கிக் காட்டுவதில் நாவலருக்கு இணையாக விளங்கினார். நாவலரின் சொல்வன்மைத் திறனெலாம் எய்திய சொல்லின் செல்வர் என்னலாம். ஒருவர், யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற கல்வி நிலையத்தில் பல்லாண்டுகள் தலைமையாசிரியராக விருந்து புகழ் தேடிக்கொண்டவர். இப்படிப்பட்ட சிறந்த மாணாக்கர்களை உருவாக்கும் பொறுப்பை மேற் கொண்டவரன்றோ நம் நாவலர்? நாட்டினைக் காக்கும் கண்மணிகளாகிய மாணவர்களை உருவாக்கும் பொறுப்புடையார் யார்? அறிவு ஒழுக்கங்களிலே சிறந்து பயன் கருதாதுழைக்கும் பெருமக்களாகிய நல்லாசிரியர்களன்றோ? நல்லாசிரியர்கள் இல்லா நாடு நாடாகுமோ?

நாட்டின் மீது நாட்டங்கொண்ட நாவலர் சில மாணவர்களை உருவாக்கியதோடு நிற்பாரோ? இன்பத் தமிழ்க் கல்வி யாவருங் கற்றுள்ளார் என்று உரைக்கும்

நிலை எய்தல் வேண்டும். அவ்வாறு எய்துமேல் துன்பங்கள் நீங்கும்; நலம் பெருகும்; தூய்மை யுண்டாகும்; நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம என்ற வீரம் பிறக்கும். தமிழையும் சமயத்தையும் வளர்க்க முந்துவர் என்று கருதினார். " ஒருவர் கூடத் தமிழ்க் கல்வி பெறவில்லை என்ற நிலை இருத்தல் கூடாது. நம்மிலே ஒருவன் உயர்நிலை அடைகின்ற போது, அவ்வுயர்நிலையினைத் தாம் பெற்றதாகக் கருதி மகிழ்ந்து பாராட்டுகின்றோம். அப்படிப்பட்ட நாம், நம்மிலே ஒருவன் ஏழ்மை காரணமாகவோ பிற காரணத்தாலோ கல்வி பெறாமல் இருப்பின் நாம் அத்துணை பேரும் அதற்காகத் தலைகுனியும்படியான உணர்ச்சி ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். அந்த நிலையை உண்டாக்கும் நாள் எந்நாளோ? " எனச் சிந்தித்துக்கொண்டே யிருந்தார். அனைவருக்கும் கல்வியை ஒரே சமயத்தில் புகட்டும் கல்வி நிலையங்கள் எங்கும் தோற்றுவிக்க வேண்டும் என்னும் அவா மிக்கிருந்தது. ஆனால், அவா நிறைவேறுதற்குப் போதிய செல்வத்தை எங்கிருந்து பெறுவது? யாவர்க்கும் இலவசமாகக் கற்பிக்கும் ஆசிரியர்கள் வேண்டுமே. உணவும், உறையுளும், நூல்களும் இலவசமாக வழங்கினாலன்றோ எண்ணிய எண்ணம் முற்றுப் பெற்று எங்கும் தமிழைக் கற்றோரே காணுவர். அத்துணை வசதிகளும் செய்வதற்குரிய மனமிருந்ததே தவிர, பணம் இல்லையே! ஊக்கமிருந்ததே தவிர, உதவும் பொருள் இல்லையே! என் செய்வார்?

அந் நாளில் யாழ்ப்பாணத்தின்கண் கொட்டில் களில மாணவர் சிலரைக் கூட்டிப் படிப்பிக்கின்ற ஆசிரியர்கள் சிலர். தெருவின்கண்ணுள்ள திண்ணைகளிலே பயிற்றுவிக்கும் ஆசிரியருமுளர். இவர்கள் மாணவர்களால் கொடுக்கப் பெறும் குறைந்த தொகையினைக் கொண்டு வாழும் நிலையினர். இம்மை மறுமைக்

குரிய தமிழ்க்கல்வியும் சமயக்கல்வியும் ஒருங்கே கற்ற வருமல்லர். ஆகவே, சமயக்கல்வி எங்கும் கற்றுக் கொடுக்கப்படாதநிலைமையும்இவரை மேலும் தூண்டுவ தாயிற்று! "இருமைக்கும் இன்பம் பயக்கும் இரு வகைக் கல்வி நலமும் பெருதார் பிறந்தும் பிறவாதாரே. அவர்தம் வாணுள் வீணுளாவதே" என இரக்கங் கொண்டார். யாழ்ப்பாண மக்களையே துணையாகக் கொண்டு எவ்வாறேனும் ஒரு கல்வி நிலையமாவது தோற்றுவித்தேயாக வேண்டும் என்று உறுதி கொண் டார். அந்த உறுதியே 1848-ஆம் ஆண்டிலே, யாழ்ப் பாண வண்ணூர் பண்ணையிலே சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடன் ஒரு கல்வி நிலையம் அமைக்கக் காரணமாயிற்று. இக்கல்வி நிலையத்திற்கு ஆசிரியராகத் தம்பால் பயின்ற திரு. சதாசிவம் பிள்ளை யவர்களையே தொண்டாற்றப் பணித்தார். வித்தகம் பேசாது பணிசெய்யும் உத்தம ஆசிரியரன்றே அவர்! ஊதியமே பெருது உழைக்க ஒப்புக் கொண்ட பெருந் தகைமைதான் என்னே! அஃதன்றியும், இவரும் நாவலரும் இல்லந் தோறும் சென்று பிடியரிசி வாங்கி அதனுல் வரும் பொருளை மாணவர் கல்விக்குப் பயன் படுத்தினர். இனிய மலர்களும நறியகனிகளும் கொண்ட மரச் செறிவுடைய சோலைகளை அமைத்து அறந்தலை நின்ருர் வாழ்ந்தனர். நீர் வேட்கை தணித் தற்குரிய குளந்தொட்டு அறஞ் செய்தோர் இருந்தனர். பசிப்பிணி போக்கும் அன்ன சத்திரங்களைக் கட்டினேர் உறைந்தனர். ஆலயங்களை அழகுற எழுப்பிய அருள் வள்ளல்கள் நிலவினா. அவர்களெல்லாம் தலைசிறந்த அறமாகிய கல்விக் கோயில் நிறுவுதலைப் பற்றி நினைக்க வில்லை போலும்! ஆகவேதான், நாவலர் இரந்து அரிசி பெற வேண்டியதாயிற்று. சோலைகளும் சாலைகளும், குளங்களும் கோவில்களும் அமைப்பதைவிட, கோடி புண்ணியந் தருவது எழுத்தறியா மாக்களுக்குக் கல்வி யூட்டுவதல்லவா? இந்த உண்மையை நாவலர்

உணர்ந்ததாலேயே, வீடுதோறும் சென்று இரந்தார். இரத்தலை இழிவென்று எண்ணினாரல்லர். ஈயென இரத்தல் இழிந்தன்று என்று இடித்துரைக்கும் சங்க காலச் சான்றோர் பொன்னுரை அறியாதவரல்லர். பின், இரத்தலை மேற்கொண்டது ஏன்? ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதவனாய் இரந்துண்டு வாழ்தலே இனிதென்று கருதுவானாகில் அவன் மகன் அல்லன். ஆனால், தன்னலங்கருதாது பிறர்க்குற்ற இடர்களையச் செய்யும் எந்தச் செயலும் இழிவென்று கருதப்படாதன்றோ. இரத்தலின் இன்னாதது இல்லை என்ற இலக்கணம் இவர்களைக் கட்டுப் படுத்துமோ? புலவர் பெருமக்கள் இரந்துண்ணும் வாழ்க்கையே கொண்டிருந்தனர் என்பதை அறிவோமல்லவா? பொருள்தேடும் நாட்டமில்லாது அறிவையே தேடித் திரிவதே அவர்கள் வறுமைப்படும் காரணமாகும். அதுவுமன்றி, அரசர்கள், வள்ளல்கள் முதலியோ ரிடத்து இரந்து பெறும் சிறந்த பெருளையும் தமக்கே யுரியதென நினைக்காமல் யாவர்க்கும் கொடுத்து வாழும் இன்ப வாழ்வு மாகும். இறுதியாக, அவர்கள் நாட் டின்கண் வாழும் நல்லோர் புகழ் நானிலத்தில் என்றும் குன்றாதிருக்க முயன்று பாடுந் தொழிலிலே ஈடுபட் டிருத்தலுமன்றோ? இவை யாவும் இரத்தலை மேற் கொள்ளும் காரணங்கள் என்றாலும், அறிவுப் பசியை மக்களிடத்தே அறவே போககும் அருந்தொண்டை மேற்கொள்ளும் சிறந்த காரணமே அவர்கள் இரவல ராதற்குரிய அடிப்படையாகும். இதனை அவர்கள் இழிவென்று கருதினார் இல்லை. பாடினாரும் இல்லை. தன்னல வாழ்வை நினைந்து இரத்தலே இழிவுடைத்து என்பது அவர்தம் உள்ளக் கருத்தாம். இந்த எண்ணமே நாவலரை இரக்குமாறு உந்தியது என் பதற்கு ஐயமுளதோ?

இவ்வாறு வீடுதோறும் படி ஏறிப் பெறும் பிடி யரிசியால் பள்ளி நடை பெறுவதாயிற்று. யாழ்ப்பாணக் கல்வி நிலையத்தின் அணித்தேயுள்ளே ஒரு இடம் விற்பனைக்கு வந்தது. அந்த இடத்தை வாங்கினுல் கல்வி நிலையம் கட்டுவதற்குப் பொருத்தமாயிருக்கும் என்று நாவலர் எண்ணினுர். வித்தியாசாலை நடை பெறுவதே இயலாதபோது சொந்தமாக வாங்குதல் எங்ஙனம்? வாங்குதற்குப் பொருள் வேண்டுமல்லவா? ஆகவே, ஊர்மக்களிடத்தே தம் கருத்தைக் குறிப் பித்தார். தொகை சேர்க்கப் பலவாறு முயன்ருர். உரிய தொகை சேரவில்லை. செல்வம் மிகவுடைய சிலரிடம் வலியச் சென்று தம் கருத்தை அறிவித்தார். ஒருவர் கூட உதவி செய்ய முன்வரவில்லை. முயற்சி விழலுக் கிறைத்த நீராகியது. பொது நலத்திற்கும் உதவாத மக்களிடையே வாழ்வதினும் ஒழிதலே நன்று என வருத்தமிகப் பெற்ருர் 'இமயமலை போலுயர்ந்த ஒரு நாடும் தன் மொழியில் தாழ்ந்தால் வீழும்' எனும் உண்மையை உணராதவர்களாக இருக்கின்ருர்களே என்று உள்ளம் நைந்தார். 'எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள் இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னுல் தினையளவு நலமேனும் விளையுமென்ருல் செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும்' என்ற தமிழுக்கு உயிர் நீத்தோர் அமுதமொழியை அகத்தே பதித்தார் போலும்! தன் உயிரைப் போக்கிக்கொள் வதே தமிழும் சைவமும் வாழச் செய்த உண்மைப் பணியாகும் என்று கருதினுர். ஒரு நாள் காலைக் கடன்களையெல்லாம் முடித்துவிட்டுப் பூசைககுச் சென்ருர். வழக்கம்போல உடையவருக்குப் பூசை நிகழ்த்தினுர். வழிபாடு செய்கின்றபோது திருப் பாடல்களை மனமுருக இசையோடு பாடுவது இயல்பு. ஆனுல், அன்று உடையவரை நோக்கிப் பாடினுரில்லை. ஓவெனக் கதறிக் கண்ணீர் வார அழுதார். அழுது கொண்டே இறைவன்மீது ஒரு பாடலைப் பாடினுர்.

அப்பாடல் ஒன்றே அவர் தொண்டின் ஆர்வத்தை வெளிப்படுத்துவது காணலாம்.

"என்னெஞ் சற்பகல் துயருறல் அறிந்துமொரு சிறிதும்
அருளாத் திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யா னுயிர்
விடுதல் திண்ணம் நீ அறியாததோ
சிறியேன தன்பிலர்ச் சனைகொளழ கியதிருச் சிற்றம்
பலத்தெந் தையே"

தமிழின் மீதும் சைவத்தின்மீதும் எத்துணை காதல்! எவ்வளவு உறுதிப்பாடு! சாவிற்கும் அஞ்சாத சான்றோர் வரிசையில் எண்ணத்தக்க பெருமகனன்றோ நம் நாவலர்? இந்த உள்ளம் இளமையிலேயே எப்படி வந்தது?

"மதுரை வெள்ளிமன்றிலே நடம் புரியும் கூத்தப் பெருமானை நாள்தோறும் தவறாது வழிபடுபவன் பாண்டியமன்னன். இறைவன்பால் வைத்த இடையறா அன்பு அவனுக்கு இரக்கத்தை யுண்டாக்கியது. தில்லைப் பொன்மன்றிலே களிநடம்புரிந்த பெருமான் கால்மாறி ஆடியது மதுரையிலன்றோ? அந்த இறைவன் தில்லையில் ஆடுதல்போலவே மதுரையிலும் இடதுபாதம் தூக்கி ஆடி அருள் செய்து நின்றான். பன்னாளாக வழிபட்ட பாண்டிய மன்னன் நம் பொருட்டு இறைவன் எத்தனை நாட்களாக நிலத்தின்கண் வலக்காலை ஊன்றி ஆடிக்கொண்டிருக்கின்றனனே என்று மனம் கவன்றான். இறைவனைக் கால் மாறியாடுமாறு வேண்டினான். செவிசாய்க்காதிருந்த இறைவன்முன், வழக்கம்போல் வழிபடச் சென்ற பாண்டியன் வாளினை ஊன்றினான். கால்மாறியாட வில்லையேல யான் இவ்வாளிற் பாய்ந்து உயிர் நீப்பேன் என்று முனைந்து கண்ணீர் வடித்து நின்றனன். அப்பொழுது அவன் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கியதைக் கண்டு கால்மாறியாடினன். இன்றும்

வலது பாதம் தூக்கியாடிய தன்மையிலேயே காட்சி யளிக்கின்றான்" என்ற திருவிளையாடற் செய்தியை உணர்ந்தவரல்லவா? ஆகவே, நாவலரும், மொழி சமயம் இரண்டின் பொருட்டும் உயிர்விடத் துணிந்து அழுதாரன்றோ? அவ்வழுகையே அவர் கருத்தை முற்றுவித்தது! அற்றை நாளே, கொழும்பில் வாழும் தமிழ் வள்ளல் நன்னித் தம்பி முதலியாரவர் களால் மனமுவந்துய்த்த தொகை நானூறும் நாவ லர்க்கு வித்தியாசாலை நன்கொடையாக வந்து சேர்ந்தது. விறகு வெட்டிக்குப் பொற்குவியல் கிடைத் தாற்போன்று அளவிலா மகிழ்ச்சி எய்தினார். இறைவ னருளை நினைந்து வியந்தார். வீழ்ந்து வணங்கினார். அழுகையின் தத்துவத்தை யாரே அறிவார்? இவ்வாறு, நாவலர் அழுது முறையிட்டதும் பொருள் வந்து சேர்ந்ததும் காகதாலீய நியாயமாம் என்பர். எனினும், சமயத்துள் திளைத்த பேரடியார்களும், அனுபவமுடைய சான்றோர்களும் அழுகையின் தத்துவத்தைக் கண்டு வெற்றி பெற்றுள்ளமை அறியற்பாலதே.

சைவ சமயம் தழைத்தோங்கிய இடைக்காலத் திலே வாழ்ந்த மெய்யடியாராகிய மணிவாசகர் தம்மை நொந்து பாடுகின்றார். மாயை உலகில் உள்ள யாவும் பொய்யே. யானும் என் மனமும் என் மனத்தே தோன்றும் அன்பும் பொய்யே. ஆகலின், என் முயற்சியால் வினைக்கட்டினின்றும் நீங்கி உன்னை வந்துறுதல் இயலாததே. நின் அருளே பற்றுக்கோடாக நின் திருவடிகளை அடைதல் முடியும். நின் அருளைப் பெறும் ஒரே கருவி எது? மனத்தால் நினைந்து, மொழி யாற் புகழ்ந்து, மெய்யால் தொழுது, அலைகடல் போல் கண்ணீர் ஊற்றெடுத்து உடம்பெல்லாம் நனைந்தொழுக அழுவதேயாம். அஃது ஒன்றாலேயே உன்னையடைதல் முடியும் என்று உள்ளங் கரைந்து உருகி அழுது தொழுகின்றார்:

"யானே பொய்யென் னெஞ்சும் பொய்யென் னன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே யருளாய் அடியேன் உனைவந் துறுமாறே"

இங்கே அழுகையின் ஆற்றல் விளங்குவதைப் பார்க்கின்றோமல்லவா? கன்றின் குரல் கேட்டுக் கதறித் துடிக்கும் பசுவையும், சேயின் குரல் கேட்டுப் பாய்ந்து வரும் தாயையும், அடியவர் குரல் கேட்டு அருள் சுரக்க வரும் ஆண்டவனையும், மக்கள் குரல் கேட்டு முறை செய்யும் கொற்றவனையும் யாம் கேட்டுள்ளோமன்றோ? இவற்றின் அடிப்படைத் தத்துவம் என்ன? அழுகையல்லவா? நெஞ்சை நெகிழ்வித்துக் கேட்டாரை அருள் செய்யுமாறு தூண்டும் இதனிற் சிறந்த கருவி இவ்வுலகில் உண்டோ? இவ்வழுகை பிறப்பு முதல் இறப்பு வரை உயிர்கட்கு உடனிருந்து உதவுகின்றது. பெறுவதற் கரிய பொருளையும் பெறச் செயயும் ஆற்றல் அதற்கு உண்டு. ஆக்குவதும் அழிப்பதும் அதுவே. கொண்டான்பால் வேண்டும் பொருளை அவன் மறுத்த போதிலும் மனையாள் பெற்றுவிடுவதும் அழுகையாலேதான். மகன் தந்தையிடத்து விரும்பிய பொருளைப் பெறுவதற்கும் அவ்வழுகையே காரண மாம். அந்த அழுகைக்குப் பணியாதிருப்பின் அழிவே எய்துவர். அழுகை உண்மையாக எழுந்தால்தான் வெற்றி பயக்கும். அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரே பெருஞ் செல்வத்தையும் அழித்தொழிக்கும் படையாக மாறுகின்றது. உண்மை அன்பின்றி அழும் கண்ணீர் நன்மை பயப்பதில்லை. ஒன்னார் அழுத கண்ணீர் கண்டு அரசன் இரங்குதலில்லை. அது உண்மை அன்பிலே வந்த கண்ணீரன்று. அவ் வழுகைக்கு இரங்குவனாயின் இறந்து ஒழிய வேண்டிய நிலை உடனே எய்தும். இத்தகைய ஆக்கமும் அழிவும்

ஒருங்கேயுடைய அழுகை, நம் வாழ்க்கையிலேயே பிறந்து வளர்ந்து நம்மோடு எழுபிறப்பும தொடர்கிறது. இதன் பிறப்பை ஆராயின் வியப்பு ஏற்படும்.

அழுகையானது நாம் மண்ணிலே பிறக்கின்ற போதே உடன் பிறப்பது என முன்னர்க் கண்டோம். பிறந்தபோது அழுகின்றோம். வாழும் போது எத்தனையோ முறை அழுகின்றோம். இறக்கும்போதும் அழுகின்றோம. மீண்டும் பிறப்புண்டேல அழுகை யோடு பிறக்கின்றோம். ஆகவே, நம் உயிரோடு தொடர்புடைய தத்துவமே அழுகை என்பது தெளி வாகின்றதல்லவா ?

கருவுற்ற தாய் ஒருத்திக்குப் பத்துத் திங்கள் நிரம்புகிறது. தனியிடத்தே கருவுயிர்க்க லைவக் கின்றார்கள். அவளுக்குத் துணையாக மூதறிவுடைய பெண்டிர் சூழ்ந்து நிற்கிறார்கள். குழந்தை பிறக்கின்றது. பிறந்தவுடன் அவர்கள் என்ன எதிர்பார்க்கின்றார்கள் தெரியுமா ? குழந்தை மண்ணில் வீழ்ந்தவுடன் அழுகிறதா என்பதிலேயே நோக்கமாயிருப்பார்கள். வெளியே காத்து நிற்கும் மக்களும் என்ன கேள்வியை முதலில் எழுப்புகின்றார்கள்? 'என்ன குழந்தை? அழுததா?' என்றுதான் கேட்கிறார்கள். குழந்தை சிரித்ததா என்று யாரேனும் கேட்டதுண்டா? அழுவதைக் காண்பதே தீச்சகுனம் என்று கருதும் மக்கள் அதனை எதிர்பார்ப்பது எத்துணை வியப்பை அளிக்கின்றது. இதன் கருத்து என்ன ?

ஐயிரண்டு திங்களாய் அன்னையின் கருவிலே வளர்ந்துவரும் குழந்தை வெளியில் வந்தவுடன் வாயைத் திறந்துதான் ஆக வேண்டும். வாய் திறந்து அழவில்லையேல், அக்குழவிக்கு அற்ப ஆயுள் என்று முடிவு கட்டுவர். இழவு வீடாகிவிடும் ! ஒரு குழவியின் அழுகையைப் பெருததால் அத்தனை பேரும் வருந்தி அழவேண்டி வருகின்றதல்லவா? அழுகைக்கு

எவ்வளவு வரவேற்பு! ஏன்? அழுகையே உயிரை நிலைத் திருக்கச் செய்கிறது; உயிரை வாழ்விக்கின்றது என்பதைத் தமிழ்ச் சான்றோர் அறிந்திருந்தனர் என்பது பொய்யாமோ? அவ்வழுகையோடு பிறக்கும் ஒலியின் வடிவமே தமிழ் நெடுங்கணக்கின் முதற்கண் நிற்கும் அகரம் என்ற எழுத்தாம். கருவிலே பிறக்கின்ற எழுத்துத் தமிழ் எழுத்து என்றால், அம் மொழியின் மாண்பை என்னென்பது! 'கருவுற்ற நாள் முதலாக உன் பாதமே காண்பதற்கு உருகிற்று என் உள்ளம் எனச் சமயப் பெரியார் பாடுவதும் உண்மையன்றோ? 'அ ஆ அங்காப்புடைய' என எழுத்துக்களின் பிறப்பிற்கு இலக்கணங் கண்ட தொல்லாசிரியர் கருத்தும் பொய்த்து விடவில்லையே. வள்ளுவப் பெருந்தகையும் நீதிநூல் வகுக்க முற்பட்ட போதும் அழுகையிலே பிறந்த அகரம் முதல் என்பதை உணர்த்த மறந்தாரிலர். இறுதி எழுத்தையும் மறவாது அமைத்த மாண்பு வியக்கத்தக்கது.

> 'அகர முதல வெழுத்தெல்லா மாதி
> பகவன் முதற்றே யுலகு.' (குறள்-1)

> 'ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
> கூடி முயங்கப் பெறின்.' (குறள்-1330)

கடவுள் வாழ்த்து முதற் குறளிலே அகரத்தைத் தொடங்கி, கடைசி அதிகாரமாகிய ஊடலுவகையின் இறுதிக் குறளிலே னகரத்தைக் கூறித் தமிழ் நெடுங் கணக்கினைக் குறிப்பால் உணர்த்திப் போந்ததும் இதனை வலியுறுத்துகின்றதன்றோ? தவிரவும், மேனாட்டறிஞரும் இவ் வழுகையின் சிறப்பைக் கண்டுள்ளனர். "மிக்க துன்பமும் மிக்க இன்பமும் சாவினைப் பயந்தே விடும்" என்பது அவர் கண்ட கருத்துடை மொழி. நம் நாட்டில் பண்டு தொட்டே இந்தக் கருத்தை உணர்ந்து, ஆற்றாமை மீதூரப் பெற்ற போது ஆற்றி வரும் முறையைக் கைக்கொண்

டிருந்தனர். இன்றும் ஒரு வீட்டில் இறப்பு நிகழ்ந்தால், கையற்று வருந்தும் மக்களிடம் சென்று நிலையாமையைக் கூறி அவர்களை ஆற்றி, ஆற்றுமையைக் குறைப்பதைக் காண்கின்றோம். துக்கம் மிகுதிப்பட்ட விடத்துத் தொண்டை யடைத்தலும் நெஞ்சு வெடித்தலும் ஏற்பட்டு உயிர் பிரிதலும் உண்டு. அவ்வாறு நிகழாமல் நம் தமிழ்ப் பெண்டிர கையற்று அழும் வீட்டாரோடு தாமும் அழுது, அவர்தம் துன்பத்தில் பங்குகொண்டு குறைக்கின்றனர். புலவர் பெருமக்கள் கையறு நிலை பாடித் தேற்றுவதும் உண்டு. துன்பம் குறையக் குறைய உயிர் நிலைக்க முடிகிறது. ஆகவே, அழுகையால்தான் உயிர்வாழ முடியும் என்பது தெளிவாகின்றது. மிகுந்த இன்பம் ஏற்பட்டபோதும் ஆனந்தக் கண்ணீர் பெருக் கெடுப்பதால் இன்பம் குறைந்து அளவிற்கு வருகின்றது. அதுவே உயிரை நிலைபெறச் செய்கின்றது. அளவுக்கு மீறினல் அமுதமும் நஞ்சல்லவா? இந்த உயர்ந்த அழுகைத் தத்துவத்தை நாவலர் தம் வாழ்விலே மும்முறை கையாண் டிருக்கின்றார். வெற்றியும் பெற்றுள்ளார். அவர் அழுதது எற்றுக்கு? இம்மை இன்பம் எய்துதற்கா அன்றி மறுமையில் நல்விருந்தாய் வானத்து விளங்குதற்கா? தம் மொழியும் சமயமும் அழியாது நிலைத்து யாவர்க்கும் உதவவேண்டும் என்றல்லவா அழுதார்? பிறர் வாழ அழுத பெருமானுக்குத் தமிழகம் செய்த கைம்மாறு யாதோ?

இறைவன்பால் அழுது முறையிட்ட அன்று கொழும்பிலிருந்து வள்ளல் ஒருவர் தொகை நானூறு அனுப்பி உதவினரல்லவா? அதனைத் திருவருளால் பெற்றதாக எண்ணி மகிழ்ந்த நாவலர், விற்பனைக்கு வந்த இடமொன்றை யாழ்ப்பாணக கல்வி நிலையத்திற்காக வாங்கினர். தம் மாணவர் சதாசிவம் பிள்ளையவர்களையே பொறுப்பாக வைத்து நடத்தி

வந்தார். மாணவர்களுக்காக அப்பொருளின் ஒரு சிறு பகுதியைக் கொண்டு நிகண்டு, பாலபாடம், சைவசமய சாரம் முதலிய நூல்களை அச்சிட்டு வழங்கினர். தமிழ்க் கல்வியும் சமயக் கல்வியும் பயிற்றுவிக்கும் பள்ளி இஃதொன்றே. ஆதலால்; இங்கு பயின்ற மாணவர்கள் சிறந்த புலமையும் உயர்ந்த ஒழுக்கமும் உடையவராய் விளங்கினர். ஒருவர் சென்னை அரசினரால் தேர்வு அதிகாரியாக அமைக்கப்பட்டார். சில மாணவர்கள் தமிழாசிரியர்களாகப் பணிபுரிந்தனர். அரசாங்க அலுவலாளர்களாக ஆயினர் சிலர். நாவலர் இத்துடன் தம் கருத்து முற்றிற்று என நினைந்தாரா? ஆயிர மாயிரமாக மாணவர்களை அறிவுச் சுடர்களாக நாடெங்கும் அனுப்ப வேண்டும். செல்லுமிடந்தோறும் அவர்களும் தொண்டு செய்ய வேண்டுமென்று கருதினர். ஆகவே, கூத்துடையான் கோயில் கொண்டிருக்கும் சிதம்பர நகரில் ஒரு பெரிய வித்தியா சாலை ஏற்படுத்தும் எண்ணங்கொண்டார். முயற்சியில் ஈடுபட்டார். நல்ல பல திட்டங்களை வகுத்து மக்களிடையே தெரிவிக்க விரும்பினர். தமிழரனை வரையும் அறச் செயலில் ஈடுபட வேண்டித் தீட்டிய திட்டங்களை அறிக்கையாக வெளியிட்டுப் பரப்பினர். அவர்தம் அளவுகடந்த தொண்டின் ஆர்வத்தை இன்றும் யாவரும் அறியக் காட்டுவது அவ் அறிக்கை யன்றோ?

1860-ஆம் ஆண்டிலே சிதம்பரத்திலே சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடைய கல்விக் கூடம் ஒன்றை நிறுவும் எண்ணத்தை ஒரு வேண்டு கோள் வாயிலாக விளக்கியிருந்தார். அதன்கண் சமய வொழுக்கத்தை மிகவும் வற்புறுத்திக் காட்டிய அறி வுரைகள் பாராட்டுதற்குரியன. அவருடைய இளமைப் பருவ முதலாகப் பதிந்திருந்த தொண்டின் ஆர்வமும் அதன்கண் கண்டு போற்றற் குரியது.

"யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கமில்லாதபோது பயன்பெருன். அந்தச் சமயத்திற்குரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும், விலக்கப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுக துக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினலே பெறப்படும் நன்மையும் ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபோது, அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குருமுகமாக விதிப்படி பெறப்படும் சமய நூற்கல்வி கேள்விகள் இல்லாத பொழுது, அந்த அறிவு உதியாது. ஆதலால், கல்வியும், அறிவும், ஒழுக்கமுமாகிய மூன்றும் வேண்டும். கல்வி கேள்வியில்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டுய்யமாட்டார்கள் என்பது, 'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' என்றும், 'கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவா' என்றும், 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை மற்றவரறியா மாணிக்க மலையை' என்றும் வரும் திருவாக்குக்களான் அறிக."

இவ்வறிவுரை மக்களாய்ப் பிறந்தார் எவரும் மேற்கொள்ள வேண்டிய பொதுத் தன்மையதே. உலகியல் நடத்தற்கு வேண்டிய நூற்கல்வி யாவரும் கற்க வேண்டுவதல்லவா? பிறவியென்னும் பெருங் கடலிலே மூழ்கிவிடாது துணைநின்று கரை சேர்க்கவல்லதாகிய சமயக் கல்வியும் மக்களனைவரும் கற்க வேண்டுவதல்லவா? கற்பதை ஒழிவரேல் வாழ்விலே அமைதிக்கு வழியேது? சமயம் என்பது ஆன்மாவை இறைவற்குப் படைப்பதுதானே. அமைதி நிலவாத போது ஆன்மாவைப் படைத்தல் இயலுமோ? ஆகவே, சமயக் கல்வியும் ஒவ்வொருவருக்கும் வேண்டும் என்பதாயிற்று. இதனைக் கற்ற வழியே அதற்குத் தக ஒழுகும்

ஒழுக்கம் பிறக்கும். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் விழுப்பந் தரும் செல்வம் ஒழுக்கமன்றோ? அதனாலே தான், நாவலர் சமய வொழுக்கம் எத்துணை இன்றி யமையாதது என்பதை அழகுற வற்புறுத்தியுள்ளார். அவர்தம் உரைகளை மேலும் காணுங்கள்:

"வேதாகமங்களை ஓதுதலும், அறிவு நூல்களைப் பிறருக்கு விரித்து உணர்த்துதலும், தருமங்களை எடுத்துப் போதித்தலும், பள்ளிக்கூடங்கட்டுதலும் பெரும் புண்ணியங்கள் என்பது ஞானாமிர்தம் எனும் நூலில் வகுத்துச் சொல்லப்பட்டது. எல்லாத் தருமங்களையும் அறிந்து பயன் பெறுவதற்குச் சமய நூல் உணர்ச்சியே ஏதுவாதலால், சமய நூலுணர்ச்சி யை வளர்த்தலாகிய தருமமே எல்லாத் தருமங்களினும் மேலானது. ஆதலால், நமது தமிழ் நாடெங்கும் பாட சாலைகளை நிறுவிப் பிள்ளைகளுக்குச் சமய நூல்களையும், பொருளீட்டுதற்கு வேண்டும் உலகியல் நூல்களையும் கற்பித்தலும், திருக்கோயில்தோறும் மக்களுக்குச் சமய நெறியைப் போதித்தலும் மிக மேலாகிய புண்ணியங் களாம். இச்சிவ தருமம் நமது தமிழ் நாடெங்கும் தழைத்தோங்கல் வேண்டும் என்னும் பேராசை யானது என் சிறுவயதிலே என் உள்ளத்திலே தோன்றி நாடோறும் பெருகிப் பெருகி இப்பொழுது அவ்வுள்ளத்தை விழுங்கித் தான் மேற்கொண்டு நிற்றலான், என் மென்மையை நினைந்து தடைப் படாமல் திருவருளை முன்னிட்டு நின்று எல்லார்க்கும் பொதுவாயுள்ள சிதம்பரத்திலே சில முயற்சிகள் செய்யக் கருதுகின்றேன்."

மேலே வரைந்த நன்மொழிகள் தமிழர்களை அறச் செயலிலே உடனே ஈடுபடத் தூண்டுவதையும், இளமையிலேயே சமயப் பணி புரிய மிக்க அவா வுடையராயிருந்ததையும் தெள்ளிதிற் காட்டுகின்றன. எல்லா அறங்களிலும் சிவ தருமமே சிறந்தது என்று

துணிய வேண்டுமாயின், எவ்வளவு அழுந்திய சிவப் பற்று உடையவராக இருந்திருத்தல் வேண்டும்? அவர் தம் இளமைப் பருவ வாழ்வினைத் துருவி யாய்கின்ற பொழுது சில நிகழ்ச்சிகளை அறியமுடியும். அவை யாவும் அவருடைய சமயப் பற்றினை விளக்குவனவாம்.

பார்சிவல் துரைமகனாரின் ஆங்கிலப் பள்ளியில் நாவலர் பயின்று வந்தாரல்லவா? அப்பொழுது அவருக்குப் பதின்மூன்று வயதே நிரம்பியிருந்தது. அத் துரைமகனாரும் அவர்தம் சமயத் தொண்டர்களும் பணியாற்றும் ஆர்வத்தையும் தம் சமய மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் ஈடுபட்டுக் கிடக்கும் இழிவினையும் ஒப்பு நோக்கிக் கண்டார். தம் சமயம் வளர்க்கத் தக்கார் இல்லையே என ஏங்கினார். சமயப்பற்று மிகுந்த உணர்ச்சியால், அப் பள்ளிப் பருவத்திலே, ஒரு வெண்பாப் புனைந்து, இறைவன் முன் படைத்து "எம் சமயம் அழியா வண்ணம் பாதுகாத்தல் உம் கடன் இறைவா" என முறையிட்டு வழிபட்டார் என்பர். மாணவப் பருவத்திலேயே அவருக்கிருந்த ஆர்வம் எத்தகையது என்பதைக் காணுங்கள்!

இவரது இளமை வாழ்வில் நிகழ்ந்த பிறிதொரு செயலைக் குறிப்பிடுவோம். மாணவர்களுக்கு இலவச மாகக் கல்வி கற்பித்து வந்தார். அப்பொழுது முதன் முதலாக மாணவர்களுக்கு நாவலர் கற்பிக்கும் நூல் சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணமேயாம். சேக்கிழாரைத் தம் தெய்வமாகப் போற்றினார். சேக்கிழார்பால் பித்துடையார் என்றே அறிந்தோர் அனைவரும் கருதுவர். சிவனடியார்களாகிய அறுபத்து மூன்று அடியார்களிடமும் அளவிலா அன்பு கொண்டார். உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த 'சேக்கிழார் புராணம்' என்ற நூலைத் தேடி அரிதிற் பெற்றார். அதனைப் பயின்று பயின்று உள்ளம் உருகினார். உண்ணும் போதும் உறங்கும் போதும்கூட

சேக்கிழாரைப் பற்றியே நினைப்பதும் பேசுவதும் அவர் இயல்பு. இந்த உண்மையை நன்கு தெரிந்தவர் நாவலர் தம் உடன்பிறந்தார் தியாகராசனூர். இவர் நாவலரின் பெரிய புராண பக்தியைச் சோதித்தறிய விருப்பங் கொண்டார். தம்பியுடன் விளையாடுவதிலே மகிழ்வு போலும்! நாவலரின் உழுவலன்பர் ஒருவரை அழைத்தார். தம் கருத்தைத் குறிப்பித்துப், "பெரிய புராணத்திலுள்ள கதைகளெல்லாம் கட்டுக் கதை' என்று யான் கூறியதாக அவன்பால் தெரிவிக்க. அவன் என்ன செய்கிருன் என்று பார்ப்போம்" என விளையாட்டாகச் சொல்ல, அவரும் இசைந்தார். விளையாட்டு வினையாதலும் உண்டல்லவா? நண்பர் நாவலர்பால சென்றுர். அவர் தமயனூர் உரைத்த சொற்களில் ஒன்றுங் குறையாமல் அவர் சொல்லிய வாறே இகழ்ச்சியும் தோன்றக் கூறினுர். அச்சொற்கள் நாவலர்தம் செவியில் வீழ்ந்ததும் உள்ளம் வெதும்பியது. உடல் துடித்தது. கண்கள் சிவநதன. கரத்திலே கத்தியை எடுத்தார். காலினும் கடுகிச் சென்றுர். பசித்து வரும் புலிபோன்று சினக்கனல் தெறிக்கவரும் தம்பியை அவர் தமயன் கண்டார். கோபத்திற்குக் கண்ணில்லை என்பார்களல்லவா? அம்முதுமொழி யறிந்த அவர் புன்னகை செய்து கொண்டே தம் வீட்டினுட் சென்று விட்டார். இக்காட்சியைக் கண்ட ஏனையோர் நாவலரை நெருங்குதற்கும் அஞ்சினுர்கள். எனினும் ஒருவாறு தீமை நிகழாவண்ணம் நாவலரைத் தடுத்து நிறுத்தினர். ஒரு தாய்வயிற்றில் பிறந்தவர் என்ற குருதி உறவையுங் கூட மறைத்துக் கொலை செய்யவும் தூண்டியது எது? அவர்தம் அழுந்திய சமயவுணர்வன்றே? தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்று முந்தும் தமிழ் மரபில் வந்தவரல்லவா? அன்று முதல் தம் தமயனேடு பேசுவதையும் அறவே நிறுத்தி விட்டார். விளையாட்டாகவும் தம் சமயத்தை

இகழப் பொறுக்காத திண்ணிய உள்ளம் இளமையிலேயே அமைந்தது வியக்கத்தக்கதே.

'பெரிய புராணம் கட்டுக்கதை' என்று அன்று சொல்லிய சொற்கள் வெந்த புண்ணில் வேல் பாய்ந்ததைப் போல வருத்திக் கொண்டேயிருந்தது. அவருக்குண்டாகிய சினம் தணிவதற்கே வழியில்லை. சினத்தை உடனே மாற்றுவதோ அல்லது ஆற்றுவதோ முடியாதன்றே. அது, தானே ஆறிவரவேண்டிய தொன்று என்று கருதியே, 'ஆறுவது சினம்' என்றார் ஆன்றோர். ஆதலால், அவர் சினம் ஆறித் தமயனாருடன் மீண்டும் பேசத்துணிந்தாரில்லை. பல ஆண்டுகள் கடந்தும் அவர் சினம் ஆறாதது ஏன்? அடியார்களின் அருமை பெருமைகளையும் உறுதிப்பாடுகளையும் பயின்று பயின்று பெரிய புராணப் பித்தரானார். 'பித்தா' என்று தொடங்கிப் பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றிலே நாவலர் பித்துடையராயிருந்திருத்தல் கூடும் என ஊகிக்கலாம். சுந்தரமுர்த்தி சுவாமிகள் பரவையின்பால் இறைவனைத் தூதுவிடுத்தார் என்ற செய்தியைச் சிவபக்தியிற் சிறந்த கலிக்காமர் என்பார் கேள்வியுற்றார். ஒரு பெண்ணின் பொருட்டு இறைவன் திருவடிகள் கன்ற இரவு முழுவதும் தூது செல்ல ஏவிய அவனைக் காணப் பெறுவேனாயின் என்ன நிகழுமோ என்று இயம்பிச் செற்றங் கொண்டிருந்தார். இதனை யறிந்த நம்பியாரூரர் பெருமானிடம் விண்ணப்பித்தார். இருவரையும் ஒன்றுபடுத்தக் கருதிய இறைவன் கலிக்காமருக்குச் சூலை நோயை ஏவி யருளினார். குடரைத் துடக்கி முடக்கி வருத்தும் சூலைநோய் பொறுக்க முடியாதவராய் இறைவனை நினைந்தார். 'இந்நோய் வன்றொண்டனாலன்றி ஒழியாது' என இறைவன் கூற, அவனால் தீர்ப்பதினும் நோயால் வருந்துதலே நன்று என மறுத்துரைத்தார். இறைவன் ஆணைப்படி வன்றொண்டர் நோய் தீர்க்க வருவதை அறிந்தார். இறைவனை இழிசெயற்குப் பயன்படுத்திய

அவன் தீர்ப்பதற்கு முன், அவன் முகத்தில் விழிக்காதே இச்சூலை நோயை வயிற்றொடுங் கிழிப்பேன் என்று உடைவாளை யெடுத்துக் கிழித்துக் கொண்டார். உயிருடன் சூலையும் ஒழிந்தது! இந்த நிகழ்ச்சி எவரையும் நடுங்கச் செய்யுமன்றோ ? இத்தகைய உறுதிப்பாடுடைய அடியாரைப் பன்முறை பயின்று உருவேற்றிய நாவலர், கலிக்காமராகவே ஆயினர். தம் தமயன் முகத்தைப் பார்க்காதும் பேசாதும் பல்லாண்டுகள் இருந்ததற்கு இதுவே காரணமாம் என்பதில எட்டுணையும் ஐயமின்று! ஆனால், தம் தமயன் மிகுந்த நோய்வாய்ப்பட்டு இறக்கும் நிலையில் தம்பியைக் காண ஆவலோடு அழைத்தார். பிறவித் தொடர்பு விடுமா? மனம் இரங்கி அண்ணல் இருக்குமிடம் சென்றார். 'யான் செய்த பிழையினைப் பொறுப்பாயாக' என்று தமயன் கூறிய உரைகள் அவருள்ளத்தைத் தொட்டு அசைத்து விட்டன. தமயனார் தலையினைத் தன் மடிமீதமர்த்தித் தம் அன்பைப் புலப்படுத்தினார். பூசையினின்றும் கொணர்ந்த நீற்றையணிவித்துக் கங்கை நீரும் பெய்து அருட்பாவோதி நற்கதி யடைவித்தார். அவருடைய ஆன்மா நாவலர் தொடர்பை நினைந்து மகிழ்ந்து அமைதியுற்றிருக்குமன்றோ?

பள்ளிப் பருவத்தே தொடங்கிய சமய வுணர்ச்சி கொழுந்து விட்டு எரிந்ததை அவர்தம் பின்னைய வாழ்நாட்களில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளாலும் காண முடியும். அவர் வாழ்வில் எங்கெங்கே நோக்கினும் அங்கங்கே தோன்றுவ தெல்லாம் தமிழோடியைந்த சமயவுணர்ச்சிகளே. தன்னல வாழ்வினைக் காட்டும் ஒரு சிறு குறிப்பும் நாம் காண்பதரிது.

தொண்டின்பால் உறைத்துக் கல்வி கற்பித்து வந்த நாவலர், தமக்கு மணப் பருவம் எட்டியதை

அறியவே இல்லை. உள்ளத்தை ஒருவழிப் படுத்தி ஒன்றிலே எண்ணம் வைத்தோர் வேறொன்றைக் கருதுவரோ? ஆகவே, தமயனார் அவரை இல்லறத்தில் புகுத்த எண்ணித் தம் கருத்தை அறிவித்தனர். அது அவர் செவியில் பட்டதாகவே தெரியவில்லை. பன்முறையும் சென்று வற்புறுத்தினர். தமக்கும் திரு மணத்திற்கும் இயைபு உண்டு என்பதாகவே அவர் எண்ணவில்லை. உடன் பிறந்தார் ஒன்றும் செய்ய இய லாதவர்களாய் வருந்தினர். நாவலரின் குருவாகிய வேதக்குட்டிக் குருக்களிடம் சென்றனர். திருமணத்திற்கு இணங்கும்படி அறிவுரை கூற வேண்டும் எனப் பணி வுடன் கூறினர். நாவலர்பால் அன்பும் உரிமையுங் கொண்ட வேதக் குட்டிக் குருக்கள் அதற்கு இசைந் தனர். அவர் இசைந்ததே தம் முயற்சி வெற்றியுற்றதாக எண்ணி இறும்பூதெய்தினர் நாவலர் தம் தமயனார். அதற்குக் காரணம் குருக்கள் சொல்லை ஒரு போதும் ஒதுக்க மாட்டார் என்ற துணிவே. ஒரு நாள், குருக்கள் நாவலர்பால் சென்றனர். அவரும் அன்புடன் வணங்கி வரவேற்றனர். இல்லறத்தின் மாண்பைக் கூறி, திரு மணம் இன்றியமையாதது எனக் குறிப்பித்தார். அக் கூற்றுக்கு இணங்க முடியாமைக்கு வருத்தந் தெரி வித்து, 'இந்த ஒரு பேச்சு மட்டும் வேண்டாம்' எனப் பணிவுடன் உரைத்தனர். உள்ளம் விரும்பாத செயலைச் செய்து உலகிலே துன்புறுபவர் பலர் என்பதைக் குருக் கள் உணர்ந்தவர். ஆதலால், அவர் கருத்தை ஒப்புக் கொண்டவர் போல அமைந்திருந்தார். தமயனாரிடம் அவர் விரும்பாத ஒன்றைச் செய்தல் பெருந்தவறாகும். அவ்வாறு செய்யின் யாவரும் துன்புற்றுப் பழியேற்க நேரும் என அறிவுரை கூறி அகன்றார். நாவலரின் தன் னலத் துறவை அறிந்த அனைவரும் மகிழ்ந்தனர். மணம் வேண்டாம் என்று கூறிவிட்டு மதிமயங்கி ஒழுக் கந் தளர்பவர் உளர். அவர்கள் உள்ளத்தைக் கட்டுப் படுத்தும் வலிமையை அறியாது கூறிப் பின்னர் வாழ்க்

கையிலே பழியேற்பவராவர். ஆனால், நாவலரோ நைட்டிகபிரமசரியவிரதத்தை மேற்கொண்டு வழுவாது உலகோர் போற்றுமாறு விளங்கினார். அவர் வாழ்வில் ஒரு சிறு தவறு நிகழ்ந்திருப்பினும், அகன்ற வானிலே ஒளியுடன் விளங்கும் திங்களிற் களங்கம் போன்று எவ்விடததும் பரவுமன்றே. துறவு வாழ்வினையுடையோர் வேட்டுவன் புதரிடத்திலே மறைந்து புள்ளினை அகப்படுத்துதல் போல மறைந்தொழுகின், எத்தனை காலத்திற்கு வெளிப்படாநிற்கும்? அவ்வாறு ஒழுகுபவர் காவியுடுத்துக் கானகம் சென்று, கந்தமூலமுண்டு கடுந்தவம் புரியினும் துறவியாவரோ? உலகமாகிய நாடகமன்றிலே நடிகரும் பொய் வேடரேயாவர். நம் நாவலரோ, வாழ்க்கையில் பெறும் இன்பமெல்லாம் துறந்து காவியுடுத்தாத் தமிழ்த் துறவியாய் வாழ்ந்தவராவர். இம்மைச் செய்தது மறுமைக்கு உதவும் என எண்ணிப் பணி செய்தவருமல்லர். ஞானிகளைப் போன்று தம் ஆன்மா நன்னிலையுற வேண்டுமெனக் கருதியவருமல்லர். தன்னலங் கருதியிருப்பின் வீடும், விளை நிலமும் தோட்டமும் அணிகளும் கொடுத்துப் பெண்ணையும் மண முடித்துக் கொடுப்பதாக வந்த நல்ல வாய்ப்பினை வேண்டாமென்பரோ? பார்சிவல் துரை பன்முறை அழைத்து மிக்க பொருளை ஊதியமாகத் தருவேன்; எனக்குத் தமிழ்ப் புலவராயிருந்து வருக என்று வேண்டிக் கொண்ட சிறந்த நிலையினை வெறுப்பரோ? தமிழ்ப் புலமையும் ஆங்கிலப் புலமையும் ஒருங்கே எய்தினார்க்கு அக்காலத்து அரசாங்கத்தில் உயர்ந்த பதவி கிடைக்கும் என்ற நிலையிருந்தும் அதனைப் பயன் படுத்தாது விடுவரோ? ஆகவே, மண், பெண், பொன், பதவி முதலியவைகளைக் கருத்திலும் கொள்ளாத தன்னலமற்றவர் என்பது தெளிவாகின்றது.

தன்னல மற்ற தமிழ்த் துறவியாகிய நாவலர், இம்மையிற் பெறும் புகழையும் விரும்பவில்லை என்பது

அவர் வாக்கால் உய்த்துணரக் கிடக்கின்றது. ஆயின், அவர் விரும்பியது என்னை? சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் காரணமாகிய தமிழ்க் கல்வியையும் வளர்க்க வேண்டும் என்னும் பேரவாவேயாம். இந்த உண்மையை அவர் தமிழகத்திற்கு விடுதத வேண்டு கோள்கள் மூன்றினாலும் உணரலாம்.

1860 - ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிறுவியது போன்று தமிழ் மக்களின் உயிர்நிலை என்று போற்று கின்ற சிதம்பரத்திலும் ஒரு பெரிய கல்வி நிலையம் நிறுவும் பொருட்டு அறிக்கையொன்றை வெளியிட்டார். அவ்வறிக்கையில் தமிழ் மக்களை அறச்செயலில் ஈடுபட்டுத் தமிழையும் சமயத்தையும் காக்க வருமாறு அறிவுரை கூறியிருந்தார். பல நாட்கள் சிந்தனை செய்து பதினான்கு திட்டங்களை விளக்கி நிறைவேற்றவேண்டிய வழிகளையும் தெரிவித்திருந்தார். அத்திட்டங்கள் அவர் தம் ஆர்வத்தையும் அறிவுத்திறனையும் புலப்படுத்துவன என்பதும், தன்னலஞ் சாராப் பொதுநலமே கருதியவை என்பதும் குறிக்கத்தக்கன. அவைகள் செயற் படுவதைப் பொறுத்தே, இந்தியா, இலங்கை முதலிய நாடுகளின் பல்லிடங்களிலும் கல்வி நிலையங்கள் தோற்றுவிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடையவ ராகவும் இருந்தார். தலைமைக் கல்வி நிலையம் ஒன்றைச் சிதம்பரத்திலே அமைக்க எண்ணங்கொண்டது அங்கு எழுந்தருளிய இறைவன்மீது கொண்ட அன்பேயாகும். தமிழ் மக்களின் உயிர்நிலையாகத் தில்லைக் கோயில் விளங்குகின்றதல்லவா? அது போலவே கல்வி நிலையங்களின் தலைமை நிலையமும் தில்லையிலே இருக்க வேண்டுமென்ற அவாவினர் எனக் கருதலாம். அவர் விடுத்த முதல் அறிக்கையில் குறிக்கப்பட்ட திட்டங் களைக் காண்போம்.

சிதம்பர நகரின் திருவீதியில் பரப்புள்ள நிலம் ஒன்று விலைக்கு வாங்கவேண்டும். இந்த நிலத்திலே

ஒரு பெரிய கல்வி நிலையம் எழுப்பவேண்டும். அதனைச் சார்ந்து பூசைக்கட்டு, சாத்திரக்கட்டு, சமயற்கட்டு என மூன்றுகட்டுள்ள திருமடம் ஒன்றும் கட்டவேண்டும். சிவபூசை செய்வதற்கு இன்றியமையாது வேண்டுவதாகிய திருநந்தனவனம் ஒன்றும் உண்டாக்க வேண்டும். அதன்பின், கல்வியறிவொழுக்கங்களிலே சிறந்த ஆசிரியப் பெருமக்களை அமைத்து மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்கள், நீதி நூல்கள், சிவ புராணங்கள், சமய நூல்கள், கணிதம், தருக்கம், நிலநூல், மருத்துவம், சோதிடம், வேளாண்மை நூல், வணிக நூல், அரசநீதி, சிற்ப நூல் முதலாய எல்லா அறிவியற கலைகளையும் பயிற்றுவிக்க வேண்டும். குரல் இனிமையும் இசையார்வமுங்கொண்ட மாணவர்களைத் தேர்ந்து கொள்ளவேண்டும். தமிழிசைவாணர்களாகிய ஓதுவார்களை அமைத்துத் தேவார திருவாசகச் செழும் பாடல்களைப் பண்ணோடு ஓதவும், பிறர் மனம் நெகிழுமாறு தாளமறுத்துப் பாடவும் பயிற்சி யளிக்க வேண்டும். திருக்கோயில்களிலும் திருமடத்திலும் தக்க ஆசிரியர்களைக் கொண்டு கேட்போர் பயன்படும் பொருட்டுச் சிவபுராணங்களையும், சிவதருமோத்தரத்தையும் இராக்காலங்களில் படித்துப்பொருளுணர்த்த வேண்டும். மாலைக்காலங்களில் வழிபாடு செய்ய வரும் மக்களுக்குச் சிவப்பற்று உண்டாகுமாறு ஓதுவார்களை அமைத்து இறைவன் திருமுன்னின்று திருமுறைப் பாடல்களை உருக்கமாகப் பாடச் செய்தல் வேண்டும். திருமடத்திலே ஆண்டுதோறும் தமிழ் வேதம் செய்தருளிய ஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர் நால்வருக்கும், பெரியபுராணம் செய்தருளிய சேக்கிழார் நாயனுருக்கும், தமிழ்ச் சித்தாந்தம் செய்தருளிய மெய் கண்ட தேவர் முதலிய சந்தான குரவர் நால்வருக்கும் திருநாள் குறித்துக் குருபூசை விழா நடத்தி, அவர்கள் வழிகாட்டிய தன்மையையும், தொண்டாற்றிய பெருமையையும் யாவரும் அறியச் செய்தல் வேண்டும். இந்தக்

கல்வி நிலையத்திலே கற்ற பரிபக்குவர்கட்குச் சைவாச்சாரியரைக் கொண்டு தீக்கை செய்வித்துத் திருமடத்திலே சித்தாந்த சாத்திரங்களைப் பயிற்றுவிக்க வேண்டும். சிதம்பரத்திலே கட்டளைவைத்திருக்கும் மடாதிபதிகள், செல்வர்கள், தங்கள் கட்டளை அன்னத்திலிருந்து சிறிது உதவினால், படிக்கின்ற துறவிகளுக்கும் வறிய மாணவர்கட்கும் பெரிதும் பயன் படும். இங்கே பயில்கின்ற மாணவர்களை மடாதிபதிகள், வித்துவான்கள் கூடிய அவையிலே சோதனை செய்ய வேண்டும். ஆண்டுதோறும் இந்த அறச் செயல் நடத்தும் கணக்கினை அவையிலே படித்து அச்சிற் பதித்து வழங்கவேண்டும். ஆங்கிலங் கற்பவர்களுக்கும், அலுவல்களை மேற்கொண்டுள்ளார்க்கும் கற்குங் காலத்தையுண்டாக்கிச் சமயக் கல்வி அளிக்கவேண்டும். கற்றுத் தேர்ந்த மாணாக்கர்கட்குத் தகுதியறிந்து பட்டமும் பரிசும் வழங்கி ஊக்குவிக்க வேண்டும். பட்டம் பெற்றவர்களுள் யாரேனும் தங்கள் வாணாளைப் பிறர்க்குப் பயன்படுத்த முன்வரின், அவரைச் சிதம்பரநாதர் முன்வைத்துச் சிறப்புச் செயது தமிழ் நாடெங்கும் சமயப்பணி புரியும் விரிவுரைத் தொண்டராய்ச் செய்தல் வேண்டும்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுதற்குப் பொருள் எண்பதினாயிரம் வேண்டும். நீர்வளமுள்ள நல்ல சிற்றூரை எழுபதினாயிரத்திற்கு வாங்கி வைத்துக் கொள்ளவேண்டும். எஞ்சிய பதினாயிரத்தைக் கொண்டு கல்வி நிலையமும் திருமடமும் கட்டி முடித்தல் வேண்டும். இந்த அறச்செயலை நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் எஞ்சா ஒழுக்கமும் உடைய எவரும் பொறுப்பேற்று நடத்தலாம். தமிழ்நாடெங்கும் தமிழும் சமயமும் வளர்ந்தோங்கி மக்கள் உய்வதற்குரிய. திட்டங்கள் இவற்றினும் சிறந்தன உண்டோ? 'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது

பொன்றுங்கால் பொன்றுத் துணை' என்ற வள்ளுவர் வலியுறுத்திய அறப்பெருமையை நினைப்பூட்டினர். 'இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார் கரப்பவர் தங்கட்கெல்லாம் கடு நரகங்கள் வைத்தார்' என்ற வாக்கின் வேந்தர் அருளிய பொருள் மொழிகளைச் சொன்னர். நல்லவரைப் போற்றாத பொல்லாவுலகம் நாவலர் ஆர்வ மொழிகளையும் பொருட்படுத்த வில்லை. ஆனால், யாழ்ப்பாணத்திலே உள்ள சிலர் தம்மால் ஒல்லும் பொருளை உதவினர். அதனைக்கொண்டு 1865-ஆம் ஆண்டிலே சிதம்பர நகரின்கண் ஒரு சிறிய கல்வி நிலையத்தைச் ''சைவப்பிரகாச வித்தியாசாலை'' என்னும் பெயரால் தோற்றுவித்தார். கிடைத்த பொருளைக் கொண்டு மாணவர்க்கு உதவியும் பாடஞ்சொல்லியும் வந்தனர். ஊதியம் பெருமல் இலவசமாகக் கற்றுக் கொடுக்கவும், தமிழ் ஏடுகளை அச்சிற் பதித்து யாவரும் பயன்பட வழங்கவும் எண்ணினர். அந்த எண்ணம் குறையாமல் பொருள் சேர்க்கு முயற்சியில் மீண்டும் ஈடுபட்டார். சிறிய கல்வி நிலையமாக நிறுவியதைப் பெரிய தலைமைக் கல்வி நிலையமாக ஆக்க வேண்டும் என்னும் அவாவும் நீங்கவில்லை. 1869, 1870-ஆம் ஆண்டுகளில், மாயூரம் என்ற மயிலாடுதுறையிலும், வேதாரண்யம் என்ற திருமறைக்காட்டிலும் தனித் தனிக் கல்வி நிலையம் அமைக்கக் கருதி இரண்டு அறிக்கைகள் வெளியிட்டார். அவற்றில் காணும் ஒவ்வொரு சொல்லும் நாவலர் தமிழகத்திற்காக ஒவ்வொரு விஞடியும் உள்ளம் நைந்துருகி வாடியதை உரைத்துக் கண்ணீர் மல்கச் செய்யும். அதன் உண்மையைக் கீழே காணும் அவர் வாக்கால் அறிக:

"தன் இம்மைப் பயன்களெல்லாம் இழந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபது வருடகாலம் சுவ சமய விருத்தியின் பொருட்டு முயற்சி செய்பவன்

ஒருவன் மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானாயின், அவன் எடுத்த முயற்சிகளுள் யாது சித்தி பெறாது? நம்முடைய சைவசமயிகள் தங்கள் சமயமும் மொழியும் விருத்தியடையும் பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதியபும் இடையூறுமே செய்கின்றார்கள். இதனால் எனக்கு யாதாயினும் ஓர் குறைவுண்டு என்னும் கவலை எனக்குச் சிறிதுமில்லை. எனக்குச் செய்யப்படுவன வற்றைக் காணுந்தோறும் கேட்குந்தோறும் பிறருக்குத் தமிழ் கற்றலின்கண்ணும் தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின்கண்ணும் ஊக்கங் கிளரா வண்ணம் தடை விளைக்கின்றதே என்னும் கவலை எனக்குப் பெரிதுமுண்டு. **நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக் கருத்து இது: தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் வளர்ச்சி யடைவதற்குக் கருவிகள் முக்கிய தலந்தோறும் வித்தியாசாலை தோற்று வித்தலும், சைவப்பிரச்சாரம் செய்வித்தலுமே யாம்.**"

தமிழகத்தை நினைந்து நினைந்து எவ்வளவு மன முடைந்தார் என்பதும் தமிழும் சைவமும் ஆகிய இரண்டுமே தம் வாழ்வு எனும் எண்ணமுடையாராய் இருந்தார் என்பதும் விளங்குகின்றதன்றோ? பல ஆண்டுகளும் இடைவிடாது உழைத்து உருக்குலைந்து உயிர் நீத்த நாவலர் தம் கனவை நனவிற்காண முடியாமற் போயினமை இரங்குதற்குரியதே. தமிழக மெங்கணும் மொழியும் சமயமும் தழைக்குமாறு பாடுபட்ட நாவலரைக் கண்ட பார்சிவல் துரை மகனார் இடையறாமல் இடித்துக் கூறியதை எண்ணிப் பாருங்கள்: "புலவரீர்! நீவிர் தலைக்குமேலே கைகாட்டித் தமிழருக்காகக் கதறிக் கதறி மண்டை

வெடித்துத்தான் சாவீர்கள்" என்பதே அம் மொழிகள். இவை உணர்த்தும் உண்மை யாது? நாவலர் பிறந்தது முதல தமிழே நினைந்து தமிழே பேசி தமிழே உயிர்த்துத் தமிழருக்காகத் தம் வாழ்வைத் துறந்த தண்டமிழ்த் துறவி — தொண்டர்தம் தலைவர் என்பதன்றோ?

நாவலர் விடுத்த வேண்டுகோள்களைச் செவிடன் காதில் ஊதிய சங்கெனப் பயன்படுத்தாது போயினர் தமிழ் மக்கள். யாழ்ப்பாணத் தமிழ்மக்கள் விழிப் புற்றுச் சில இடங்களில் அவர் சொல்லிற்கு மதிப்புத் தந்தனர். அவருடைய தூண்டுதலால் கொழும்புத் துறை, கந்தமடம், பருத்தித்துறை, மாதகல், இணுவில் முதலிய இடங்களில் கல்வி நிலையங்கள் அமைத்தனர். நாவலர் முயற்சி வீண்போகாது காத்த யாழ்ப்பாணத்து மக்கள் என்றும் பாராட்டிற்குரியவராவர்!

கல்வி நிலயங்களில் மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து வருபவர் பலர். கடினமான செய்யுட்களையும் எளிதிலே உளங்கொளத் தெளிவுபடுத்து முறைமையும், இலக்கணத்தையும் இலக்கியத்தையும் பொருத்திக் காட்டும் வன்மையும் நாவலர் ஒருவருக்கே வாய்த் திருந்தது என்று சொல்லலாம்! பண்களையும் பண்ணின் திறங்களையும் நன்குணர்ந்து இனிமையாகப் பாடும் திறமையும் பெற்றிருந்தார். அது பொன் மலர் நாற்றமும் பெற்றாற் போன்றாயிற்று! தமிழில் இயல், இசை ஆகிய இருதுறைகளிலும் புலமை பெற்ற இவர், மாணாக்கர்கட்கும் இசைப் பயிற்சி அளிக்கக் கருதினார். யாழ்ப்பாணத்திலுள்ள கோவில்களில் தேவாரப் பாடசாலை அமைக்க எண்ணினார். சமய குரவர்கள், பண்ணிடைத் தமிழும், பழத்தினிற் சுவையும், கண்ணிடை மணியும், கடுவிருட் சுடரும் போன்று விளங்குபவன் இறைவன் என்று உவமித்தனர்.

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி வந்தனர். ஆகவே, அவர்கள் காட்டிய வழியில் இசையை வளர்க்கக் கருதினர். திருவாவடுதுறை ஆதீனத்தி லிருந்து ஓதுவார்களை அழைத்து மாணவர்களுக்குப் பயிற்சி யளித்தார். தமிழிசை கோவிலிலே முழங்க வேண்டும். 'தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்' என்று அப்பர் அகங்கரைந்தாரன்றே! ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் விளங்கும் இறைவனை இன்பத தமிழால் ஏத்தின் உள்ளங் குளிர்ந்து வெள்ளம் போல் அருள் பொழிவான். முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் பெம்மான் கோவிலிலே பண்ணோடு பாடி வழிபாடாற்றும் முறைமையைப் புகுத்தினர். **"ஒவ்வொரு கோவில்களிலும் சைவ சமயத்தை மக்களுக்குத் தாய் மொழியிலேயே போதித் தல் வேண்டும் என்று காமிகாகமத்திலே இறைவனால் விதிக்கப்பட்டிருக்கின்றது"** என்று தாம் விடுத்த அறிக்கையில்எடுத்துக்காட்டியுள்ளார். தமிழ்மக்கள் தம் முதல்வனைத் தம்மொழியால வழிபடும்நாளே தமிழகம் உய்யுநாள் எனக் கருதினர் போலும்! முத்தமிழ் விரகராம் நாவலர் கருத்து முற்றுப் பெற்றதா?

நாவலர் இவ்வாறு கல்வி வளர்ச்சிக்கும் சமய எழுச்சிக்கும் செய்த முயற்சிகள் பல. அவற்றுள் வெற்றியுற்றவை சில. எனினும், உள்ளந்தளராது முனைந்து நின்று பணியாற்றி வந்தார். இவருடைய ஆண்மை அறிவாற்றலின் முன் மற்றையோர் முயற்சி கள் யாவும் கற்றூணில் எறிந்த கண்ணாடிக் கலங்க ளாயின. சிவசின்னங்கள் அணிய வெட்கியிருந்தோர் அணியத் தலைப்பட்டனர். அவர்தம் மக்களையும் பள்ளிக்குச் செல்லுமுன் இறைவணக்கம் செய்து திரு முறைப் பாடல்கள் ஓதுமாறு வழக்கப்படுத்தினர். யாழ்ப்பாணத்திலுள்ள வெஸ்லியன் ஆங்கிலப் பள்ளியில் சிவசமயத்தைச் சார்ந்த மாணவர்களும் பயின்று வந்தனர். அப்பொழுதிருந்த சூழ்நிலையில்

பள்ளித் தலைவரின் சீற்றத்திற்குத் தமிழ் மாணவர்கள் ஆட்பட்டனர். நாவலருக்கு மாணவர்கள்பால் மிக இரக்கமுண்டாகியது. மாண வர்களையோ பள்ளித் தலைவரையோ குற்றமாக எண்ணுவது தவறு என்றும், காலமே குற்றத்திற்குக் காரணம் என்றும் நன்கு சூழ்ந்து கண்டார். ஆகவே, ஆங்கிலப்பள்ளி ஒன்றும் தொடங்கவேண்டிய நிலை வந்தது. அதற்குரிய பொருள் போதுமான அளவு சேரவுமில்லை. எனினும் மாணவர்கள் தரும் ஊதியத் தைக் கொண்டு அரசாங்கத்தார் உதவிப் பொருள் கிடைக்கும் என்ற துணிவுடன் 1872-ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண வண்ணார்பண்ணையிலே 'சைவ ஆங்கில வித்தியாசாலை' என்ற பெயருடன் ஒரு கல்வி நிலையம் தோற்றுவித்தார். எவ்வளவு துணிவு! தமிழார்வமும் சமயவுணர்வும் அன்றோ இவர்தம் துணிவிற்குக் காரணம்? ஆங்கிலப்பள்ளி நான்கு ஆண்டுகள் செம்மையாக நடைபெற்று வந்தது. அரசாங்கத்தார் சில காரணங்களைக் காட்டி உதவித்தொகை அளிப்பதை நிறுத்தினர். அரசாங்கத் தேர்வு இப்பள்ளியில் நடை பெற முடியாததால் மாணவர்கள் தொகை அருகி வந்தது. வருமானமும் சுருங்கியது. இந்த நிலையில் ஆங்கிலப் பள்ளியில் வைத்த ஊக்கத்தைக் கைவிடாது என்ன செய்ய முடியும்? எல்லாம் நன்மைக்குத்தான் என்று எண்ணி அமைந்திருந்தார்! நாவலர் மொழியும் சமயமும் வாழச்செய்த அருந்தொண்டை வியந்தோர் எண்ணற்றவர். இரு பெரும் பணிகளையும் இடைவிடா முயற்சியுடன் செய்த அவர் தொண்டின் பெருமையை,

> "மும்மொழியில் வல்லுநராய் மூதறிவு மிக்கவராய்
> நம்மொழியும் சிவநெறியும் நன்முறையில் தழைத்திடவே
> செம்மைநெறி தவறாத துறவுநெறி தாம்மேவி
> அம்மம்ம! அவர்செய்த அருந்தொண்டை என்னென்பேன்!"

எனப் புலவர் கீரனார் பின்னாளில் பாராட்டியுள்ளமை காண்க.

இதுகாறும் கூறியவாற்ருல், நாவலர் தமிழ் நாடெங்கும் கல்விச்சாலைகள் நிறுவிப் பல்லாயிரக் கணக்கில் மாணவர்களை உருவாககித், தமிழும் சைவமும் வளர்ந்தோங்கப் பாடுபடுவதே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார் என்பதும், அவற்றிற் காகத் தம் வாழ்வையே துறந்த தமிழ்த் துறவியாகிப் பல்லிடங்களிலும் கல்விக் கூடங்களைத் தோற்றுவித்துத் தொண்டின்பங் கண்டார் என்பதும், தம் வாழ்வின் ஒவ்வொரு பொழுதையும் உண்ணுதும் உறங்காதும் மக்கள் நலம் பேணுவதே இறைபணி எனும் உயர்ந்த கொள்கையுடன் வாழ்ந்து காட்டினர் என்பதும், எத்துணை இடுக்கண்கள் அடுக்கிவரினும் அஞ்சாது எதிர்த்து நின்று வெற்றியில் இனபங்கண்டார் என்பதும் அறியக்கிடக்கின்றன. ஒவ்வொரு தமிழ் மகனும் நாவலர்போல் குறிக்கோள் உடையராய்த் தமிழும் சமயமும் பேணிப் பிறர் நலன் கருதி வாழ வேண்டும் என்பதை அவர் வாழ்வு உணர்த்துகின்ற தன்றே? திருமூலர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் கூறிய நல்லுரையைக் கடைப்பிடித்த பிற்காலத் தமிழர்களுள் நாவலர் ஒருவரே, அவர் பாடலுககு இலக்கியமாக இலங்கிஞர் என்பது ஒருதலை. அத்திருப் பாடல் மக்களாய்ப் பிறந்தார் யாவரும் உள்ளத்தே கொண்டொழுக வேண்டிய தொன்ரும்.

> "படமாடுங் கோயிற் பரமர்க்கொன் றீயின்
> நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் ருகா
> நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில்
> படமாடுங் கோயில் பரமர்க்கங் காமே"

நடமாடுங் கோயிலாம் உயிர்க்கூட்டங்களுக்கு உதவி வாழும் அருள்வாழ்வே உயிர்களின் தலைவனுகிய இறைவனுக்குச் செய்யும் உண்மை வழிபாடாகும். அல்லாக்கால் அது உண்மையான இறைபணியாகாது என்பதாம். இப்பேருண்மையைக் கண்ட பெருமகனும் திருமூலர் நெறியை இனியேனும் உலகம் பின்பற்றி ஒழுகி உய்யுமோ?

5. உரையாசிரியரும் பதிப்பாசிரியரும்

இந்தியா, இலங்கை முதலிய நாடுகளின் பல சிறந்த பகுதிகளில் தமிழும் சமயமும் ஒருங்கு கறபிக்கும் கல்விக்கூடங்களைத் தோற்றுவித்து ஒரு பெரும் பல்கலைக் கழகம் காணும் வேட்கையுடையரா யிருந்தாரல்லவா? அதே போன்று தமிழ் ஏடுகளையெலலாம் பிழை நீக்கி, மக்களனைவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் பான்மையில் அச்சேற்றி வெளிப்படுத்த விரும்பினுர். தமிழர் ஒவ்வொருவர் இல்லத்திலும் தமிழர் செல்வங்க ளாகிய நூல்கள் இலங்க வேண்டுமென்ற நற்கருத்தும் உடையவராயிருந்தார். ஏட்டிலே உள்ள பாக்களையும் உரைகளையும் ஐயந்திரிபறக் கற்குமாறு அழகுமிளிரப் பதிப்பித்தல் வேண்டும் என்னும் அவாவும் உள்ளத்தே அரும்பிற்று. பன்னூல் புலமையும் நினைவாற்றலும், தமிழார்வமும் சமயவுணர்வும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற நாவலர் தம் முயற்சியில் வெற்றியே கண்டார். நூல் வெளியிடும் பணியில் இவருக்கு வழிகாட்டி யவர்கள் கிறிஸ்தவப் பெருமக்கள். அவர்களே முதன் முதலில் நூல்களை அச்சிற் பதித்து அழகுடன் வெளிப் படுத்தும் பணியினை மேற்கொண்டவர்கள். ஆகவே, நாவலர் நூல்களுக்கு உரைகாணும் முயற்சியில் சிறந்த வெற்றிகண்டதால், தமிழகம் அவரை **'உரை வேந்தர்'** என்றும், **'வசனநடை கைவந்த வல்லாளர்'** என்றும் போற்றிப் புகழலாயிற்று. அவர் உரையாசிரியராக மட்டுமன்றிப், பதிப்பாசிரியராகவும் விளங்கும் பெரு மதிப்பும் பெற்றுர். இவர் சிறந்த உரையாசிரியராக இலங்குவதற்கு வழிகாட்டியவர்கள் யாவர்? பண்டைத் தமிழ்ப் பெரும்புலவர் மணிகளன்ரே?

பண்டைப் பெருமக்கள் தம் வாழ்விற் கண்ட பயன்களைப் பின்னுள்ளாரும் கண்டு இன்பந்துய்க்க வேண்டுமென்று கருதினர். அவைகளைப் பாக்களாக வடித்து நூல்களாக ஆக்கியுதவினர். பயில்வாரையும் கேட்பாரையும் விரைவிலே கவர்ந்து நல்வழிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தாலே அறிவுச் சுரங்கத்தி லிருந்து அகழ்ந்தெடுத்த கருத்துக் குவியல்களை இன்னோசை ததும்பும் பாக்களாகச் செய்து திரட்டினர். பழந்தமிழர்தம் பரந்த உள்ளத்தை இன்று நாம் பாக்க ளாகக் காணும் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளுகின்றோமன்றோ? பாக்களனைத்தும் பலவேறு இடத்திலே பிறந்தோரால் பாடப்பட்டுள்ளன. ஆண்களேயன்றிப் பெண்களும் தம்கருத்தினைப் பாடும் உரிமையும் புலமையும் பெற்றிருந்தனர். புலவர் பெரு மக்களேயன்றி அரசர்களும் கவிபுனையும் உள்ளம் படைத்தவர்களாய் விளங்கினர். பாண்டியருள் கவியரங்கேறினோர் ஐவர் வரலாறே இவ்வுண்மையை வலியுறுத்துவதாகும். சுருங்கக் கூறுமிடத்துத் தமிழர் வாழ்வு இசையோடியைந்த இன்பவாழ்வு என்னலாம். பிறக்கும்போதே தாலாட்டைப் பெற்று இறக்கும் போதும் ஒப்பாரியுடன் இவ்வுலகைவிட்டு நீங்கும் ஒவ்வொரு தமிழ் மகனும் இசையோடு பொருந்திய தமிழ்ப் பாக்களைத் தம் வாழ்விற் கொண்டிருந்தான் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. இதனால் அறியப்படு வது யாதெனில்,பண்டைத் தமிழ்நாட்டில் பெரும்பாலும் பாக்களாலே பேசியும் எழுதியும், பாடியும் ஆடியும் வாழ்ந்தனர் என்பதும், அவ்வின்பத்தைப் பிறரும் நுகரும் பொருட்டு இலக்கியங்களைப் பாக்களாகவே ஆக்கிப் போந்தனர் என்பதும் உய்த்துணரக் கிடக் கின்றது. அவ்வாறாயின் பண்டைநாளில் உரைநடையில் ஒரு நூலேனும் வரையப்படவில்லையோ என வினவ லாம். ஒன்றும் இல்லை என்று கூறின், தமிழர்க்கு உரை நடை எழுதத் தெரியாது போலும் என்று கருத இட

னுண்டாகும். அதுவுமன்றி, உரைநடையில் எழுதும் முறையினைப் பிறமொழியாளரிடமிருந்து இரவல் பெற்றிருக்கலாமோ என ஐயுறவும் தோன்றும். இவ்வாறன எண்ணங்கட்கு இடந்தராமல் உரைநடையில் எழுதும் ஆற்றல் உண்டு என்பதை ஆங்காங்கே காட்டியுள்ளனர் நம் புலவர் பெருமக்கள். ஆனல்,பாக்களாலாகிய இலக்கியங்களைப்போல உரைநடையாலாகிய இலக்கியங்கள் மிகுதியாக ஆக்கப்படவில்லை என்பது மட்டும் உண்மை. என்றபோதிலும் அந்த நாள் எழுதிய உரைநடையின் முறைக்கு ஒப்பாகச் சொல்லக் கூடியது இந்நாள்காறும் எழவில்லை என்றுதான் கூறவேண்டும்! பாக்கள் புனைவதேயன்றி உரைநடை வரைவதும் பண்டைத் தமிழ்ப் புலவர்களுக்கு நன்கு வாய்த்திருந்தது என்பதைப் பழந்தமிழிலக்கியங்கள் காட்டுகின்றன. தமிழர்க்கு உரைநடை எழுதல் புதுமையன்று; தொன்மையதே என்பதையும் ஆராய்ந்தறிதல் இவண் இன்றியமையாததல்லவா?

நாவலர் மும்மொழிப் புலமையுடையவராக விளங்கிஞரல்லவா? அவர் தமிழ்ப் புலமையில் மிகவும் விஞ்சியிருந்தார். அதனைப் பாவலர் தலைவராகிய **திரிசிரபுரம் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை**யவர்கள் வியந்து,

'அகத்தியந்தொல் காப்பியமுன் ஞயபல விலக்கணமுஞ்
சகத்தியல்பல் விலக்கியமுஞ் சாற்றுபர மதநூலும்
மகத்துவமெய்ப் பொருணூலு மதியமையப் பயின்றுணர்ந்து
சகத்தியலு மனுபூதித் தோன்றலாய் அமர்பெரியோன்.'

எனப் பாராட்டியுள்ளார். இதனல், நாவலர் ஒவ்வொரு நூலையும் நுணுகிக் கற்றுள்ளார் என்பது புலனுகின்றது. தொல்காப்பியம், சிலப்பதிகாரம், திருக்குறள், இறையனர் களவியல் முதலிய நூல்கட்கு உரிய உரைகளையும் ஏட்டிலே வரைந்திருந்த காலத்தில் வருந்திக் கற்றறிந்தவ

ராவர். பல்வேறு உரையாசிரியர்களின் உரை வளத்தையும் தானே கற்று இன்புற்றவர் என்பதும் அவர்கள் உரையாசிரியர் எனப் புகழப்பெற்ற காரணத்தால் தெரிய வருகின்றது. தொல்காப்பியத்திலுள்ள நூற்பாக்களையும், வெவ்வேறு உரைகளையும் கற்குங்காலத்தில், தமிழின்கண் பண்டு தொட்டே உரைநடை உண்டு என்பதை அறிந்து மகிழ்ந்திருப்பரன்றோ? தொல்காப்பியம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பழந்தமிழ் இலக்கண நூலாகக் கருதப் படுகின்றது. அந்த நூலிலே உரை நடையைப் பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் உரைத்திருக்கின்றாரெனில், அதற்கும் எத்தனை நூற்றாண்டுகட்கு முன் உரைநடை தோன்றியிருக்க வேண்டுமென்பதை அறிஞர்எண்ணிப் பார்க்க வேண்டும். தொல்காப்பியத்திலுள்ள செய்யுளியலில்,

'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில்
நாற்பெயர் எல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்.'

என யாப்பின் வழியவாகிய ஏழுவகைப்பட்ட செய்யுளின் பெயர் மரபினைக் கூறுமிடத்து, 'உரை' என்று குறித்திருப்பதும், 'என்மனார் புலவர்' என்று முடித்திருப்பதும்தமிழர்க்கு வரையறுத்துக் கூறமுடியாத காலத்திருந்தே உரைநடை இருந்து வந்தது என்பது பெறப் படுகின்றது. இந்த நூற்பாவில் பொதுவாக 'உரை' என்று கூறிய தொல்காப்பியனார் அதன் வகைகளையும் கூற மறந்தாரிலர். செய்யுளியலின் பிறிதொரு நூற்பாவினுல் உரை என்று கூறியதனை வகைப்படுத்தி, அவற்றின் வேறுபாட்டையும் தெளிவுபடுத்துமாற்றைக் கீழ்க்காணும் அடிகளில் காணலாம்.

'பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
உரை வகை நடையே நான்கென மொழிப.'

தமிழர்கள் தொன்மைக் காலத்திலேயே உரைநடையில் வளர்ச்சியுற்றிருந்தனர் என்பதற்கு இவ்வொரு நூற்பாவே போதுமன்றோ? பாட்டும் உரையும் கலந்து வரும வகை ஒன்று இருந்தது என்பதற்குச் சிலப்பதிகாரம், தகடூர் யாத்திரை என்ற நூல்களே சான்றும். இவற்றின்கண் பாடல் மிகுதியாகவும் உரைப்பகுதி குறைவாகவும் அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்துள்ள வாழ்த்துக் காதையுள் ஆசிரியர் உரைப்பாட்டுமடை என்று குறித்திருப்பது இவண் கருதத் தக்கதாம். இரண்டாவது உரைநடை வகையாவது, சூத்திரப் பொருள் எழுதுவதும் பாடல்களுக்குப் பொருள் எழுதுவதும் ஆகும். இதற்குச் சான்றுக, பாரதம் முதலிய நூல்களைக் குறித்துள்ளார் பேராசிரியர். மூன்றுவது வகையாவது, பொருளொன்றுமில்லாது புனைந்து எழுதும் தொடர்ந்த கட்டுரை. இதற்குச் சான்றுக, ஒரு யானையும் குருவியும் தம்முள் நட்புக்கொண்டு, இன்னவாறு சென்று இன்னவாறு செய்தன வென்று அவைகளுக்குப் பொருந்தாத பொருள்படுமாறு தொடர்ச்சியாக ஒருவனிடம் மற்றொருவன் கற்று வரலாற்று முறையால் கூறுவனவாம். இன்று புதுவது புனைந்து எழுதும் நூல்களும் அவ்வகையைச் சார்ந்ததேயாம். நான்காவது வகையாவது, கேட்பவர் பொய்யென்று கருதாமல் உண்மையெனக் கொண்டு நகைச் சுவை பயந்து நீதியுரைக்கும் சிறுகதைகளாகும். இதற்குச் சான்றுக, சிறுகுருவியுரையும், தந்திர வாக்கியமும் போன்ற நூல்களைப் பேராசிரியர் குறித்துள்ளார். எனவே, பண்டைத் தமிழகத்தில் உரைகலந்த பாட்டும், பாட்டே கலவா உரையும், கற்பித்தெழுதிய கதையும்,

நகைச்சுவை ததும்பும் சிறுகதையும் ஆகிய வகைகள் உண்டு என்பது உண்மையாகிறது. இந் நான்குவகை உரைநடைகளும் புலவர்களால் ஆக்கப்பெற்று மக்களுக்குப் பயனளித்து வந்தன என்பதை அறிவார் தமிழில் உரைநடை பண்டைநாளில் இல்லை என்று எண்ணிய கருத்தினை மாற்றிக் கொள்வரன்றோ? பாக்களைப் போன்று உரைநடையில் இயன்ற நூல்களும் எண்ணிலவாயிருந்து இறந்துபட்டனவோ என ஐயுறுதற்கும் இடனுகின்றது. இவ்விருபதாம் நூற்றாண்டிலே தமிழில் உரைநடை நூல்கள், சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் பல்க வேண்டும் என்று குரல் எழுப்பும் இன்றைய தமிழகத்தின் நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள்! தமிழுக்கு எங்கெந்தத் துறைகளிலெல்லாம் புகுந்து பண்டைப் பெருமக்கள் தொண்டாற்றிவந்தனர் என்பதை எண்ணும்போது நம் நெஞ்சம் சிறிது அஞ்சத் தான் செய்யும்! இடைக்காலத்திலே உரைநடை ஓரளவிற்கு வளர்ந்தது எனினும், பண்டை உரைநூல்கள் யாவும் அழிந்தொழிந்தன என்பதை நினைக்கும்போது வருத்தம் அளவிறந்து செல்லுகின்றது. ஆகவே, ஆசிரியர் தொல்காப்பியனர் காலத்தும் அதற்கு முன்னரும் எத்தனையோ உரைநடை நூல்கள் புலவர் பெருமக்களால் செய்யப்பட்டன என்பதுமறுக்கமுடியாததாகிறது. எக்காரணங்களாலோ உரைநூல்கள் எல்லாம் அழிவுற்றுப் பாட்டுநூல்கள் மட்டும் உலவிய காலம் ஒன்றிருந்திருக்க வேண்டும். அக்காலத்து மக்கள் பலர் பாக்களாலாகிய இலக்கியங்களை வருத்தமின்றிப் பயின்று பயன்பெற முடியாமல் துன்புற்றிருக்க வேண்டும். அந்த நிலையினைக் கண்ட அருளாளர்கள் சிலர் தமிழகத்தின்மீது கொண்ட கடப்பாட்டுணர்ச்சியால் இலக்கண இலக்கியங்கட்கு உரையெழுத முன்வந்திருக்க வேண்டும். இல்லையேல், உரையாசிரியர்கள் யாவரும் இடைக்காலத்தில் தோன்றியவர்களாகக் குறிப்பிடக் காரணமில்லை யல்லவா?

இருட்டறையில் மருட்சியுற்றுக் கிடந்த மகனொருவனை விடுவித்து ஒளிகாட்டிய தன்மைபோல உரையாசிரியர்கள் இருளிற் புதைபட்டுக்கிடந்ததமிழ்க்கருவூலங்கட்கு ஒளியூட்டிச் சிறப்படையச் செய்தனர். தொல்காப்பியம் எனும் பழம் பெரும் இலக்கணநூல் முழுவதையும் உற்று உணர்ந்து உரைவகுத்த முதல் உரையாசிரியர் இளம்பூரணர் என்பார். அவருக்குப் பின்வந்த நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச் சிலையார், கல்லாடனார், பேராசிரியர் முதலிய உரையாசிரியர்கள் அவர் அடிச்சுவட்டைப்பற்றி உரை எழுதி மேலும் விளக்கமுறச் செய்தனர். பின் வந்தவர்களுள் நச்சினார்க்கினியர் ஒருவரே தொல்காப்பியம் முழுவதற்கும் உரை வரைந்து சிறப்படைந்தவர். பேராசிரியர், தொல்காப்பியம் முழுவதற்கும் உரை எழுதியதாகக் கூறுவர். ஆனால், பொருளதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களாகிய உவமவியல், மெய்ப்பாட்டியல், செய்யுளியல், மரபியல் என்பவற்றிற்கே வியத்தகு உரை செய்து புகழ்கொண்டார் என்பர். இன்றும் இந்நான்கு இயல்களுக்கே உரை கிடைக்கப்பெற்றுள்ளது. தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் உரை எழுதியதைத் தொடர்ந்து தெய்வச்சிலையாரும், சேனாவரையரும் உரை வகுத்துள்ளனர். சேனாவரையருக்கு இணையாகச் சொல்லதிகாரத்திற்கு எவ்வுரையும் நிற்கமுடியாது என்று சொல்லத்தக்க பெருமையடைந்துள்ளார். தெய்வச்சிலையார் எழுதிய உரையும் பலவிடங்களில் நுண்ணிய கருத்துக்களைக் கொண்டு தமிழர் நெறிக்கு மாறுபடாது செல்லுகின்றது. இலக்கியங்களுக்கு உரை கண்டவர்களில் தலைமை வகிப்பவர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரே. அவர்தம் பரந்த நூற்புலமையும், இடையறா உழைப்பும், புதுமை வழியிற் செல்லும் அருமையும், பிறர் கருத்தோடு முரண்பட்டு அழகுபெற எழுதும் மாண்பும் உரையிடையே ஒன்றிக் கலந்து விளங்குதலை

அறியலாம். அவருடைய உரையினிடையே காலமாறு பாட்டால் கருத்து வேறுபாடு நிகழ்ந்துள வென்பதைப் பிற்கால ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்கள். எனினும், அந்தக் காலத்தில் உரை வகுப்பவருள்ளே உரைவேந்தராக விளங்கினுர் என்பது மறுக்க முடியாததே. அவர் எந்தெந்த நூல்களுக்கெல்லாம் உரை வரைந்துளார் என்பதை,

'பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக்குறுந் தொகையுள் ஐஞ்ஞான்கும் – சாரத்
திருத்தக்க மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய முமே.'

என்ற வெண்பாவால் அறிகின்றபோது அவர் தமிழுக்காகச் செய்த பெரும்பணியை மறக்க முடியுமோ? பேராசிரியர் திருக்கோவையாருக்கு எழுதிய உரையினை ஊன்றிப் பயில்வார் அவரைத் தெய்வப்புலவர் என்றே தொழுவர் என்பதில் ஐயமில்லை. சிந்தை கவரும் சிலம்பிற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் என்பாரின் முத்தமிழ்அறிவின் ஆழத்தை அளந்து காண்பது அரிதேயாம். இத்தகு வித்தக ஆசிரியர்கள் அவரவர் விரும்பிய இலக்கண இலக்கியங்கட்கு உரை வரைந்து தமிழுலகிற்கு அளித்தனரன்றே. அம்முறையில் தமிழ்மறையாம் திருவள்ளுவப் பயனை உலகிற்குத் தரும் உயர் நோக்கத்தோடு முதன் முதலில் உரைகண்டவர் மணக்குடவராவர். தமிழ் ஒழுக்க முழுதும் அறிந்து சுருக்கமான உரை எழுதியவர். அவரது உரையைத் துணையாகக் கொண்டு பலர் விரிவுரை எழுதினர். அவ்வாறு எழுதிய உரையாசிரியர்களுள் உரை மன்னராகத் திகழ்ந்தவர் பரிமேலழகராவர். இன்றும் அவருடைய உரையே பல்லோராலும் பாராட்டிப் பயிலப் பெற்று வருகின்றது. சில விடங்களில் வடமொழி நெறி பற்றி உரைவகுத்த கருத்துக்கள் அறிஞர்களாலே ஆராயப்பட்டுள்ளன. எனினும், அவ்வுரையில் அவர்தம் பரந்த நூற்

புலமையும், மறுத்துரைக்கும் நயமும் வன்மையும், பிறமொழியொடு ஒப்பிடும் தன்மையும், இலக்கணக் குறிப்பும் பெரிதும் பாராட்டுதற்குரியன. திருக்குறட்கு எவ்வெவர் உரை கண்டார்கள் என்பதை,

'தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமே லழகர் - திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கன் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்.'

என்ற பாடலால் அறிகின்றோம். இதனால் திருக்குறட் பெருமை விளங்குவது காணலாம். ஒரு நூலிற்கு எத்தனை யுரைகள் தோன்றுகின்றனவோ, அப்பொழுது தான் அந்நூல் செய்த புலவர்க்குப் பெருமதிப்புண் டாகும். அந்தப் பெருமை திருக்குறள் ஒன்றற்குமட்டுமே கிடைத்தது என்றால், அதற்குப் பரிமேலழகரின் சிறந்த உரையும் காரணமாகும். அதனைத் தொண்டைமண்டல சதகத்தார், "திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன் வள்ளுவ னார்க்கு வழிகாட்டினான் தொண்டைமண்டலமே" எனக் கூறுவதால் தெரியலாம். மேலே காட்டிய உரையாசிரி யர்களைப் போன்று பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூற்கு உரைகண்டவர் மயிலைநாதரும், சங்கர நமச்சிவாயரும், சிவஞானசுவாமிகளும் ஆவர். சிவஞானமுனிவர் இலக்கணம், சாத்திரம், தருக்கம் முதலியவற்றிற்கு உரைவரைந்து இமயமன்ன புகழ் நிறுவினார்கள். சிவஞான மாபாடியமும், தொல்காப்பியப் பாயிர முதற் சூத்திர விருத்தியும் அவருடைய பிறவிப் புலமையை உணர்த்தும். அவர் காலத்தில் அவரே உரை வேந்தராக வெற்றிக்கொடி நாட்டினர். காஞ்சிப் புராணப் பாக்களை யுணர்வார் அவரைப் பாவேந்தர் என்று பாராட்டாமலிரார். இப்பெருமகனார் உரையினை நம் நாவலரவர்கள் கருத்தூன்றிப் பயின்றார் என்பதை அவர் உரை எழுதும் முறையாற் காண லாம். பேராசிரியர், சேனாவரையர், பரிமேலழகர்

முதலியோர்பால் மிக்க மதிப்புக்கொண்டிருந்தமையும் புலனாகின்றது. ஒவ்வொருவரிடத்தும் காணப்படும் சிறப்பியல்புகளைத் தழுவியும் தம் அறிவினை அவர்களின் உரையாகிய கல்லிலே தீட்டியும் புதுமையும் ஒளியும் உடைய கல்லுரை கண்டவர் நாவலர். அவர் ஆங்கிலக் கல்வியும் சிறப்புடன் கற்றுள்ளார் என முன்னர்க் குறித்தோ மல்லவா? தாமறிந்த கவிஞர்களுடைய உணர்ச்சிகளையும் உரைநடை வல்லுநர்கள் வன்மையை யும் தமிழ் மொழிக்குப் பயன்படுத்தி இருத்தல் வேண் டும். ஆங்கில நாட்டு மக்களின் கலைத் தெய்வமாகிய செகசிற்பியரின் நாடகக் காப்பியங்களில் அமைந்த வாழ்வு கலையையும் அறிந்து மகிழ்ந்திருப்பர். மில்டன் என்பார்பால் காணப்படும் பழமை பாராட்டும் உணர்ச் சியையும், ஷெல்லியினிடம் காணப்படும் கற்பனைத் திறனையும், கீட்ஸிடம் காணப்படும் அழகுணர்ச்சியையும், வேட்ஸ் வொர்த்திடம் காணப்படும் இயற்கை ஈடுபாட் டையும் நாவலர் அறிந்து இன்புற்றவராதல் வேண்டும். அஃதன்றி, ஆங்கிலஉரைநடை கைவந்த வல்லாளராகிய அடிசன் நூல்களையும், செம்மாந்து செல்லும் உரைநடை வல்லுநராகிய கோல்டுசுமித் நூல்களையும், அழகுடன் நகைச்சுவையும் தருக்கவன்மையும் கொண்ட உரை நடை எழுதும் ஜான்சன் நூல்களையும் ஓரளவு பயின் றவர் என்றே கருதலாம். ஏனெனில், நாவலர் புதிதாக நூல் இயற்றும்போதும், பழமையைப் புதுப்பிக்கும் போதும், நூல்கட்கு உரைகாணப் புகுந்தபோதும் ஆங் காங்கே அழகும் உணர்ச்சியும், உண்மையும் தன்மை யும் பயின்று மிளிருமாறு அமைத்துள்ளார். சிலப்பதி காரத்துள் காணும் இளங்கோவின் உரைநடையையும், இறையனார் களவியலில் காணும் புலவர்கோமான் நக்கிரர்தம் உள்ளங்கவர் உரையினையும் தோய்ந்து கற்றுத் தெளிந்தவர் என்பதும் அறியக் கிடக்கின்றது. அவர் வாழ்ந்த காலத்தில் உரைமன்னராக விளங்கும் தகுதி நாவலர் ஒருவருக்கே இருந்தது என்னலாம்

இவ்வளவு உரைநடை நூல்களையும் நன்கு கற்ற நாவலர் யாவரும் புரிந்துகொள்ளும் தன்மையில் உரை எழுதி, ஒரு புதிய பாதையை வகுத்துவிட்டார். அவ்வழியில் நாவலர் ஆற்றிய அருஞ் செயல்களை அறிவோம்.

யாழ்ப்பாணம் பல சமயச் சார்புடைய மக்கள் வாழும் பகுதியாகும். சைவம், புத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய சமயங்கள் குறிப்பிடத் தக்கன. பெரும்பாலான மக்கள் சிவநெறிபற்றி ஒழுகுபவர். ஒவ்வொரு சமயத்தவரும் தங்கள் சமய வளர்ச்சியிலே கருத்துக்கொள்வது இயல்பல்லவா? அதன்படி கிறிஸ்தவ சமயத்தினர் மானிப்பாய் என்னும் இடத்தில் அச்சகம் அமைத்து நூல்களும், அறிக்கைகளும் வெளியிட்டுச் சமயத்தொண்டு புரிந்துவந்தனர். நாவலரும் சைவசமயத்தை நூல்கள், அறிக்கைகள் முதலியன அச்சிட்டு மக்கட்கு வழங்கிப் பரப்பவேண்டுமென்ற கருத்துக்கொண்டிருந்தார். அதற்காகப் பொருள் சேர்த்துச் சென்னையினின்றும் அச்சுப்பொறி ஒன்றை வாங்கி வந்தார். 1849-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே உள்ள வண்ணார்பண்ணையிலே '**வித்தியாநுபாலன யந்திரசாலை**' என்னும் பெயரால் அச்சகம் அமைத்தார். முதன் முதலில் சைவ வித்தியாசாலை மாணவர்களுக்கு வேண்டிய நூல்களை அச்சிட்டுதவினர். தாமே புதிதாக எழுதிய பால பாடங்கள், சைவ வினாவிடைகள், இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், குரு சிஷ்ய கிரமம், நித்திய கருமவிதி, சிரார்த்த தருப்பண விதி மொழிபெயர்ப்பு, திருவிளையாடல் வசனம், பெரிய புராண வசனம், பெரிய புராணச் சுருக்கம் முதலிய வற்றை அச்சிட்டுவெளிப்படுத்தினர். கோயிற்புராணம், சைவ சமய நெறி, நன்னூற் காண்டிகை, சிவதருமோத்தரம், மருதூரந்தாதி, திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதி, திருமுருகாற்றுப்படை முதலிய இலக்கண, இலக்கிய, சமய நூல்களுக்கு உரை எழுதி அச்சிட்டு

வெளியிட்டார். இவர் செய்த உரைகள் யாவும் ஒரு சிறு குறையும் சொல்ல முடியாத தன்மையில் அமைந்து செறிந்த கருத்துக்களைக் கொண்டுள்ளன. இவரைப் போன்று வசன நூல்கள் ஒருவரும் செய்யவில்லை என்னலாம். வசன கருத்தா எனப் போற்றப்படும் பெருமையும் பெற்றுவிட்டார். தமிழ் நூல்களில் பெரிய புராண வசனம்போல் ஒன்றும் இதுகாறும் பிறக்கவில்லை என்பதும் நாவலரின் புகழுக்கு அற்குறியாகும். பெரிய புராணத்தின்மீது நாவலர் எத்துணை பக்தியுடையார் என்பதை முன்னொரு நிகழ்ச்சியால் அறிந்தோம். அன்றியும், நாவலர் மாணுக்கர்கட்கு முதன் முதலில் கற்பிப்பதும் அந்நூலே என்பதும் கண்டோம். ஆகவே, பெரிய புராணத்தின்பால் கொண்ட பக்தி உள்ளத்திலே ஊறிப் பொங்கித் ததும்பியது என்பதற்கு அவருடைய வசனமே சான்ருகும். பெரிய புராணத்தை அச்சில் பதிப்பித்த செயலே பெருவியப்பைத் தருவதாகும். நாவலர் அச்சுக்கூடம் சென்று எழுத்துக்களை அடுக்கும் தொழிலாளியின் பக்கத்தே நின்றுகொள்வார். பெரிய புராண ஏட்டுச் சுவடியைக் கையிலே பிடித்துக் கொள்வார். ஒவ்வொரு பாடலாகப் பார்த்து உரையினை மனத்திலே அமைத்துக் கொள்வார். அதன்பின், அச்சுக்கோப்பவரிடம் ஒவ்வொரு சொல்லாகச் சொல்ல, அவர் எழுத்துக்களை அடுக்குவர். இவ்வாறே அறுபத்துமூன்று அடியவர் பெருமையைச் சிறப்பிக்கும் சேக்கிழார் அருளிய பெரிய புராணத்தை அச்சிடச் செய்தார். அங்ஙனம் செய்த வசனத்தில் ஒருமை-பன்மை வேறுபாடோ, எழுவாய்-பயனிலை பொருந்தாமையோ, கருத்துக்கள் மாறுபாடோ, பிற குற்றங்களோ ஓரிடத்தும் காணமுடியாது. இனிய ஒலியமைதியோடு ஆற்ளெழுக்காக அமைந்து விளங்கியதை அறிந்த அனைவரும் உவகையில் ஆழ்ந்தனர்! ஆகவே, அந்நூலைக் கற்க விழையாதார் ஒருவரும் இல்லை எனலாம். அவருடைய அறிவின் தெளிவும்.

உரைநடைச் சிறப்புமே அதற்குக் காரணமென்பதை யாரே அறியார். ஆங்காங்கே இன்றியமையாதன வாய்ப் பயன்படுத்தும் சில வடசொற்களையும் செந் தமிழ் ஒலிக்கு முரண்பட்டு இனிமை குறையாமல் தமிழ் மரபிறகேற்ப ஆக்கியுள்ளார். பழங்காலப் புல வர்களும், உரையாசிரியர்களும் கருத்துக்களையே குறி யாகக் கொண்டிருப்பர். அதுபோன்றே நாவலரும் கருத் துக்களை விடாது எழுதும் நோக்கமுடையவர். வெற்று அடைமொழிச் சொற்களைச் சேர்ப்பதோ, சொல்லின் பம் ஒன்றே கருதுவதோ உரைநடையை வளம்படுத் தாது என்ற உண்மையை உணர்ந்தவர். வேண்டுமிடங் களில் அவற்றைப் பயன்படுத்த ஒருநாளும் தவறார். சொல்லின் வளமும், தெள்ளிய நடையும், கருத்துச் செறிவும், இன்னோசையும் அமைய எழுதுவதே உரை நடை என்ற கொள்கையுடையவர். தருக்க முறையிலும், சிலேடையிலும் எழுதும் ஆறறல் அவருக்கே உரியது. பிறர் கொள்கைகளை மறுத்தெழுதும்போது இவர் மிடுக் கான நடையுடன் தருக்க நெறி தவழ்ந்து இன்புறுத்து வதைக் காணலாம். இடைக்காலத்திலே சமயப் பூசல் களும், மத வாதங்களும் தமிழகத்தில் நிகழ்ந்ததை இன் றும் வரலாற்றால் அறிகின்றோம். சமண சைவ சமயத் தவர்கள் நடத்திய அனல் வாதமும் புனல் வாதமும் யாவரும் அறிந்ததே.இந்து மகமதிய அரசர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் மதப் பூசல்களில் மிகுந்த கருத்துச் செலுத்தியதும் அறிவோமன்றே. அது போன்றே யாழ்ப்பாணத்திலும் நாவலர் காலத்தில் சமயப் பூசல் தலைகாட்டியது. எழுத்தாலும், சொல்லாலும் ஒரு சம யத்தவர் மற்ற சமயத்தவருடன் வாது புரிந்தனர். பழிப்பு நூல்களும், கண்டன நூல்களும் எழுந்தன. நீதிமன்றம் வரையிலும் சமயத்தின் பேரால் வழக்காடும் நிலையும் ஏற்பட்டது என்றால் அப்பொழுதிருந்த சமய நிலையை உய்த்துணர்ந்து கொள்ளுங்கள்! சமயம் அன்பினை அடிப்படையாகக் கொண்டது என்பது மறக்

கப்பட்டது போலும்! தத்தம் சமயத்தின்பால் கொண்ட ஈடுபாட்டால் உண்டாயதே மேற்கூறிய சமயப்பூசல்கள். ஆனால், மேடைகளிலும், நூல்களிலும் அவர்கள் பூசல்கள் நின்றதே ஒழிய, எந்தவிதமான கொடுமையை விளைக்கவில்லை என்பது கருதத்தக்கது. காரணம் கருத்தோடு கருத்து மோதுதலே அறிவுடைமை என்பதை நன்கு அறிந்திருந்தனர். இந்தச்சூழ்நிலையில் நாவலருக்கு மிகுந்த உதவியாக இருந்தவர்கள் சுன்னாகம் முத்துக்குமார கவிராயரும், சங்கர பண்டிதரும் ஆவர். நாவலர் பிறர் கொள்கைகளை நயம்படவும், காரணத்தோடும், அன்பு நெறி பிறழாமலும் மறுத்துரைக்கும் ஆற்றல் அவர் வெளிப்படுத்திய சைவ தூடண பரிகாரம் என்ற நூலால் அறியக் கிடக்கின்றது. இந்நூலினைப் பார்சிவல் துரை மகனார்க்கு அடுத்து அப்பதவிக்கு வந்த ஜான் வால்டன் என்பார் பெற்றுப் படித்தார். நாவலருக்கு அக்கருத்துககளைக் குறித்துக் கடிதம் வரைந்ததாகவும், அதற்கு நாவலர் ஐயம் நிகழுமிடங்களை விளக்கிக்காட்ட இசைந்து மறுமொழி விடுத்ததாகவும் அறிகின்றோம். இந்தச் செய்தி யாழ்ப்பாணம் எங்கும் பரவியது. நாவலர் அச்சிடுவித்த நூல்கள் தமிழகமெங்கும் வியப்பை யுண்டாக்கின. நூல்களைப் பதிப்பிப்பதிலும் ஒரு புதிய முறையைக் கண்டாரன்றோ? அதுவே அவ் வியப்பிற்குக் காரணம் ஆம்.

நாவலர் நூல்களை அச்சிடுங் காலத்து, ஏட்டுச் சுவடிகளில் இல்லாதது ஒன்றைத் தாமே சேர்க்க மாட்டார்; திருத்தவுமாட்டார். பாட பேதங்கள் நூல்களில் அச்சிடுவது வழக்கமாயிருந்து வந்தது. அம் முறையை அறவே நீக்கிவிட்டார். தம் அறிவிற்கு எது பொருத்தமாகப் பட்டதோ அதனையே பாடமாகக் கொள்வர். தமக்கு முன்னிருந்த நல்லாசிரியர்கள் துணையின்றித் தமது கொள்கையாக ஒன்றையும் எழுதிப் பதிப்பிக்க மாட்டார். மேனாட்டார் பதிப்பிக்கும் நூல்

களில் எளிமையும், இனிமையும், தெளிவும், பிழை யின்மையும் ஒருங்கே காண்பதை அறிந்தவரல்லவா? ஆதலால், தாம் பதிப்பிக்கும் நூல்களில் எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை முதலிய இல்லாமலும், கருத்துக்களை நிறுத்திக் காட்டும் குறியீடுகள் அமைத்தும், பயில்வார்க்கு விருப்பூட்டுமாறு பகுதி பகுதியாகப் பிரித்தும் அச்சிடுவர். குறியீடுகளைச் செம்மையாக அமைத்து முதன் முதலில் தமிழ் நூல்கள் வெளி யிட்டவர் நாவலரே. நூல்களில் பிழை கண்டதாக யாரேனும் மறதியாகக் கூறிவிட்டாலும் தம் உயிர்க்கு வந்த துன்பம் போல் கருதுவர். உடனே சென்று அவ்வையந் தெளிந்தாலொழிய மனவமைதி கொள்ள மாட்டார். செய்வன வற்றைத் திருந்திய முறையில் செய்ய வேண்டும் என்ற கடமையுணர்வே அதற்குக் காரணம்.

ஒரு நாள், நாவலர் போசனவிதி பற்றிய நூல் வெளியிட நினைந்தார். தம் மாணவர் கைலாசம் பிள்ளையை எழுதுவதற்காக அழைத்தார். நாவலர் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டே வர, அவர் ஏட்டில் எழுதிக் கொண்டே வருவார். இங்ஙனம் எழுதி வரும் போது **'பரிகா முத்திரை'** என்ற சொல் ஒன்று வந்தது. அதை ஏட்டில் மாணவர் எழுதி முடித்ததும், சைவ சமய நெறி என்ற நூலிற்கு எழுதிய உரையில் 'பரிகார முத்திரை' என்று குறித்திருப்பதாக நினைவுளது என நாவலர்பால் மெதுவாகக் கூறினர். அதனைக் கேட்ட நாவலர் திடுக்கிட்டார். உடல் வியர்த் தார். சைவ சமய நெறியுரையை 'இன்னே கொண்டு வருக' எனப் பணித்தார். அதனைப் பெற்றுப் பார்த்த போது 'பரிகா முத்திரை' என்றே காணப்படவும் அமைதியுற்றுர். இதனுல், நூல்களை அச்சிடும்போது ஒரு சிறு பிழையும் வருவது குறித்து நாவலர் எவ்வளவு கவலை கொண்டிருந்தார் என்பது விளங்குகின்ற

தல்லவா? பிறிதொரு சமயம், ஏட்டிலே இருந்த வில்லி பாரதம், சூடாமணி நிகண்டு முதலியவற்றைச் சென்னைப் புலவரொருவர் அச்சிடக் கருதியிருந்தார். ஏட்டிலேயுள்ள பல இடங்களைத் தம் விருப்பப்படி மாற்றிப் பதிப்பிக்க முயன்று கொண்டிருந்தார். இதை யறிந்த நாவலர் இவ்வாறு செய்வது தமிழுக்கு ஊறு விளைப்பதாகும் என எண்ணி உள்ளம் நைந்தார். பிழை மலிந்த 'பாரதம் வெளிவருமுனனே, தாமே முயன்று ஏட்டிலேயுள்ள பாக்களையெல்லாம் பன்முறை படித்துப் பார்த்து அவற்றை அச்சிட்டார். பாரதமும், நிகண்டும் நாவலரால் தமிழகத்திற்குப் பிழையின்றிக் கிடைக்கும் வாய்ப்புண்டாயிற்று! பண்டை நாளில் பாடல்கள் இயற்றுபவர் சிலர். தொகுப்பவர் சிலர். வெளியிடுபவர் வேந்தராயிருப்பர். அல்லாக்கால் வள்ளல்களாயிருப்பர். பாடுபவரும் வெளியிடுவாரும் ஒருவராக இருந்ததில்லை. அதுபோலவே உரை எழுதுபவர் சிலர். உரை நூல் வெளியிடுபவர் சிலர். இரண்டையும் ஒருவரே செய்தார் என்பதற்குச் சான்றில்லை. ஆனால், நம் நாவலரோ, உரையாசிரிய ராகவும், நூலாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் விளங்கினர் ஆவர். அவர் காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களுக்கெல்லாம் மேல்வரிச் சட்டம் அவரே! ஐயந் தெளிவிக்கும் முத்தமிழ் விரகரும் அவரே! அவர் கண்ட முடிபே யாவரும் ஒப்ப முடிந்த முடிபாகக் கொண்டனர். ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியரே மீண்டும் தமிழகம் உய்யத் தோன்றினரோ என வியந்து வாழ்த்தினர்!

நாவலர் உரையாசிரியராகவும் விளங்கித் தமிழ்ப் பணி புரிவதை யாழ்ப்பாணத்து மக்களும் போற்றிப் புகழ்ந்தனர். தமிழகத்திலுள்ள பெருமக்களும் கண்டும் கேட்டும் பலபடப் பாராட்டலானார்கள். பழந்தமிழ் மரபு விளங்கத் தோன்றிய இராமநாதபுரம் பொன்னு

சாமித் தேவர் புதுமுறையில் அச்சிடும் திறமையைப் புகழ்ந்தார். திருக்குறள் முதலிய நூல்களின் உரைகளைச் சோதித்து வெளியிட வேண்டினார். அதற்கு இசைந்த நாவலர், திருக்குறள் பரிமேலழகர் உரை, திருச்சிற்றம்பலக்கோவை யுரை, தருக்க சங்கிரக உரை, சேதுபுராணம் முதலிய சுவடிகளைக் கூர்ந்து பார்த்துச் சோதனை செய்து அச்சிட்டார். பரிமேலழகர் உரையைத் தமிழகத்திற்குத் தெளிவுபெறக் கொணர்ந்த புலமையையும் பதிப்புத் திறமையையும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மதித்துப் பாராட்டுரை வழங்கியுள்ளனர். தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சிறந்த உரை வரைந்தவர் சேனாவரையரல்லவா? புதுவை நீதிபதியும் தமிழவேளுமாகிய தாமோதரம் பிள்ளையவர்கள் வேண்டுகோட் கிணங்க அவ்வுரையைச் சோதித்து அச்சிடச் செய்தார். முச்சங்கம் தோற்றி வளர்த்த மூவேந்தருக்குப் பின் சங்கங் கண்ட துங்கன் தமிழ்ப் பாண்டித்துரைத் தேவர். அவர் மதுரையிலே நான்காம் சங்கம் நிறுவித் தமிழ்காக்கும் தண்ணளியுடையாராய் விளங்கி வந்தார். அந்நாளில், சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், தாம் பேசும் அவைகளிலும் நாவலரின் உரைச் சிறப்பையும், பதிப்பிக்கும் புதுமையையும் பாராட்டி வருவாராயினர். நாவலர் நூல்கள் பல வெளியிடுவதற்கு, முன் வாங்கிய அச்சுப்பொறி போதாமையால், அதனை மாற்றிவிடக் கருதினார். கடல் கடந்து சென்னைக்குப் போந்து, புதிய அச்சியந்திரம் பெற்றுக்கொண்டு சென்று யாழ்ப்பாணத்திலே அமைத்தார். நூல்கள் பல பதிப்புக்களாக வெளியிடும் அளவிற்கு இலங்கையிலும், தமிழகத்திலும் விலையாயின. மீண்டும் ஒரு முறை சென்னைக்கு வர நேர்ந்தது. அம்முறை சில திங்கள் தமிழகத்திலே சுற்றுப்பயணம் செய்து வந்தார். அதனைக் கேள்வியுற்ற திருவாவடு

துறை மகாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிகர் தம மடத்திற்கு அழைக்க விரும்பினார். நாவலரை அழைக்குந் தகுதிக்குரியார் தம் ஆதீனத்துப் பாவலராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களே எனத் தேர்ந்தார். ஓதுவார்களையும் அவருடன் உய்த்துக் குடந்தையில் தங்கியிருந்த ஆறுமுக நாவலரை அழைத்துவரப் பணித்தார். பணியைத் தலைமேற்றாங்கிய பாவலர்கோன், நாவலர் கோனை அன்போடழைத்து ஆதீனம் உய்த்தார். ஆதீனத் தலைவர், நாவலரின் அருட்புலமையை உரையாடல், சொற்பொழிவு வாயிலாக அறிந்து வியந்தார். அவரை மடத்திலே சிலகாலயாவது தங்கி யிருக்க வேண்டினார். இலக்கணக்கொத்து, தொல் காப்பியச் சூத்திர விருத்தி முதலிய ஏடுகளை நுணுகி ஆய்ந்து பதிப்பிக்கச் செய்தனர். நாவலர் வெளிப் படுத்திய நூல்களின் அருமைப்பாட்டைக் காணுந் தோறும் மகிழ்ச்சி எய்தும் ஆதீனத் தலைவர், தம்முடன் வைத்து உணவுண்ணுங் காலத்திலும் அவர் அச்சேற்றும் திறத்தை வாய்மணக்கப் புகழ்வது வழக்கமாம். யாவராலும் போற்றிப் புகழும் தன்மையில், உரைமன்னரும் பதிப்பாளரும் ஆக விளங்கியவர் நாவலரையன்றி வேறு யாரேனும் உளரோ?

நாவலர் எழுதிய உரைகளும், பதிப்பித்த நூல்களும் தமிழர்களால் விரும்பிப் படிக்கப்பட்டன அல்லவா? அவைகளுள் சிவநெறியைச் சார்ந்த மக்களால் பெரிதும் போற்றப்பட்டது பெரிய புராண வசனமாகும். உள்ளம் ஈடுபட்டு உருக்கமுடன் எழுதிய அந்த உரையினைப் போன்று படிப்பாரை நீராயுருக்கி நெஞ்சம் நெகிழ்த்துக் கண்ணீர் பெருக் கெடுக்கச் செய்வது வேறொன்றும் இல்லை என்னலாம். அடியார்கள்பால் எத்துணை அன்பிருந்தால் இத்தகு

உரை எழும் என்பதை யாரே அறிவார்? அவ்வுரையின் மாண்பை, இளங்கோவடிகள், நக்கீரர் முதலிய பெரும் புலவர்களின் உரைநடையோடு ஒருங்கு வைத்துப் பார்த்தல் நலம் பயப்பதாகும்.

இளங்கோ முத்தமிழ்க் காப்பியமாகிய **சிலப்பதிகாரத்தின்** வஞ்சிக் காண்ட வாழ்த்துக் காதையிலே பின்வரும் உரைநடையைக் காட்டியுள்ளார்:

"குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன்மக ளீன்ற மைந்தன் கொங்கர்செங் களம் வேட்டுக் கங்கைப் பேரியாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன் சினஞ்செருக்கி வஞ்சியுள் வந்திருந்த காலை, வடவாரிய மன்னர் அங்கோர் மடவரலை மாலை சூட்டி உடனுறைந்த இருக்கை தன்னில் ஒன்று மொழி நகையினராய்த் தென்றமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து மின்றவழும் இமய நெற்றியில் விளங்கு வில்புலிகயல் பொறித்த நாள் எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும் என்ற வார்த்தை அங்குவாழு மாதவர்வந் தறிவுறுத்த விடத்தாங்கண் உருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு துரநதது போல் இமயமால்வரைக் கற்கடவுளா மென்றவார்த்தை இடந்துரப்ப, ஆரியநாட் டரசோட்டி அவர் முடித்தலை யணங்காகிய பேரிமயக் கல்சுமத்திப் பெயர்ந்து போந்து நயந்த கொள்கையிற் கங்கைப்பேர் யாற்றிருந்து நங்கைதன்னை நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி வஞ்சிமாநகர் புகுந்து.........கோமகடன் கோயில் புக்கு நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவன்."

இரண்டாயிரம் ஆண்டிற்குமுன் தமிழ் உரைநடை இவ்வாறு இருந்ததா என்று வியந்து கேட்கத்

தோன்றும். இமயம் சென்று கல் கொணரச் சென்ற செங்குட்டுவன் கனக விசயரை வெற்றிகண்டு வீர நடையிட்டு வருவதுபோல் பீடு நடையுடன் செல்லுகின்றது. எதுகையும் மோனையும் எண்ணாதே நடம்புரிகின்றன. சொற்கள் இளங்கோவின் ஏவல் கேட்டுத் துள்ளிக் குதிக்கின்றன. பாட்டோ உரையோ எனப் பகரும் வண்ணம் பைந்தமிழ் ஓசை தவழ்ந்து விளையாடுகிறது. இஃதன்றோ, இளங்கோவின் உரை நடைச் சித்திரம்!

இனி, சங்க கால உரைநடை நூலாக நமக்கு இன்றும் கிடைக்கப்பெறும் ஒரே நூல் **இறையனார் களவியல்** என்பது. இந்நூல் எழுந்த வரலாறும், உரை கண்ட வரலாறும் மிக வியப்பிற்குரியதாகக் காணப்படு கின்றன. இவ்விரு வரலாறுகளும் கற்பிக்கப்பட்டன என்பதுதானே போதருமெனினும் சில உண்மைகளை உணர்த்தா நிற்கின்றன என்பதை ஊன்றி நோக்குவார் அறிந்து மகிழ்வர். மதுரை ஆலவாயிற் பெருமானடி களால் செய்யப்பட்ட நூற்கு **நக்கீரனாரால்** உரைகண்டு குமாரசாமியால் கேட்கப்பட்டது என்ப. அவ்வுரையின் ஒரு பகுதியினை இவண் வரைந்து காண்பாம்.

"இவனும் பதினாறாட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்த பண்பும் ஒத்த நலனும் ஒத்த அன்பும் ஒத்த செல்வமும் ஒத்த கல்வியு முடையாராய்ப் பிறிதொன்றிற்கு ஊன மின்றிப் போகந்துய்ப்பர் என்று காட்டப்பட்டது. என் போலவோ எனின் கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு போலவும், கலங்கற் சின்னீர் தெரு ளாமையான் உண்பானை அறிவுடையான் ஒருவன் பேய்த்தேரைக் காட்டி உதுக் காணாய் நல்லதொரு நீர் தோன்றுகின்றது; அந்நீர் பருகாய்; இச் சேற்று நீர் பருகி என் செய்தி என்று கொண்டுபோய் கன்னீர் காட்டி ஊட்டியது போலவும் தான் ஒழுகாநின்ற இனை

விழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கங் காட்டினுன். காட்டவே, கண்டு 'இது பெறுமாறு என்னை கொல்லோ' என்னும். எனவே, மக்கட் பாட்டினுனும் வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவது அன்று. தவஞ்செய்தாற் பெறல் ஆம். என்னை? 'வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ மீண்டு முயலப்படும்' என்பதாகலான் என்பது. அதுகேட்டு, இனி யானும் தவஞ்செய்து இதனைப் பெறுவல் என்று, அதன்மாட்டு வேட்கையால் தவஞ்செய்யும்; செய்யா நின்றுனைப் 'பாவீ! இதன் பரத்ததோ வீடுபேற் றின்பம்' என்று வீடுபேற்றின்பத்தை விரித்துரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட்டு அவலக் கவலைக் கையாற்றின் நீங்கி, மணியினது ஒளியும், மலரினது நாற்றமும், சந்தனத்தது தட்பமும்போல உண்ணின்று எழுதரும் ஒரு பேரின்ப வெள்ளத்தது என்பது கேட்டு, அதனை விட்டு, வீடு பேற்றின் கண்ணே அவாவி நின்று, தவமும் ஞானமும் புரிந்து, வீடுபெறுவானும் என்பது. அவனை வஞ்சித்துக் கொண்டு சென்று, நன்னெறிக்கண் நிறீஇனமையின் களவியல் என்னுங் குறிபெற்றது."

களவியல் என்பதன் பெயர்க்காரணம் கூற வேண்டிய இடத்தில் உரைவேந்தர் நக்கீரனுர் கையாண்டிருக்கும் உரைநடை ஓவியம் இது. களவு என்ற சொல்லைக் கேட்டவளவிலேயே வெறுப்படை வாரும் இவ் வுரைநடைக்கண் உள்ளம் செலுத்தி உவகையுறுமாறு செய்த மாண்பு விளங்குகின்ற தன்றே? உரைநடை நம்முடன் நேரிலே பேசுவது போன்ற நிலையிலுள்ளது. உவமைகள் உவகைக் கடலுள் ஆழ்த்துமாறு செப்பமுற அமைந்து உரை நடைக்கு ஒரு தனிச்சிறப்பை ஊட்டா நிற்கின்றன. கவின்பெறு சொற்கள் நக்கீரரின் கரங்களிலே இன்பக் கூத்தாடின போலும்! உருத்திரசன்மன் என்பான் ஐந்

தாண்டு நிரம்பிய ஊமைப்பிள்ளையாய், இருக்கையில் அமர்ந்து, நக்கீரர் உரை கேட்டுப் பதந்தோறும் கண்ணீர் வார்த்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப வீற்றிருந்தான் என்று காணப்படுகின்ற நிகழ்ச்சியும், பாண்டியன் உக்கிரப் பெருவழுதி உவகைப் பெருக்கெடுப்பப் பாராட்டி யமையும் இறையனார் களவியற்கு உரைகண்ட நக்கீரர் பெருமானை உரைவேந்தர் என உணர்த்துகின்றன வன்றோ? தமிழ்மொழி பண்டை நாளிலேயே உரை வளம் பொருந்திய தென்பதற்கு இதனினும் சான்று வேண்டுங்கொல்?

இடைக்காலத்தில் இயற்றப்பட்ட உரைநடை நூல்கள் கிடைக்கப் பெருவிடினும், உரையாசிரியர் களின் உரைச்சிறப்பை அறிய முடிகிறது. தொல் காப்பிய இலக்கண நூலுக்கு முதன் முதல் உரைகண்ட இளம்பூரணர், அவருக்குப் பின்வந்த நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பேராசிரியர் முதலியோர் அனைவரது உரைப் போக் கினையும் நாவலர் உரையோடு ஒப்பு நோக்கி யுணர் தலும் இன்பந்தருவதாகும். அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்றாரின் இலக்கியவுரை செல்லும் பாங்கினையும் ஒப்பு நோக்குதலும் நலமேயாம். ஈண்டு விரிவஞ்சி அவற்றை விடுக்க வேண்டியதாயிற்று என்பதறிக.

இலக்கணம், மாணவர்களுக்குப் புலவர்கள் ஊட்டும் வேப்பெண்ணெய் என்றும், இருப்புக் கடலை என்றும், ஆசிரியர் மாணவர் இருசாரார்க்குமே விளங் காத புதிர் என்றும்கூறி, இலக்கணம் வேண்டாம் என்று கருதிய காலம் இருந்தது. அதற்குக் காரணம் தொல் காப்பியம், நன்னூல் முதலிய தமிழ் இலக்கணங்க ளெல்லாம் பேருரைகளைக் கொண்டு ஏட்டுச்சுவடி களிலே உலவிய காலமாகும். அந்த நிலையை உணர்ந்த நாவலர் நன்னூற் காண்டிகையுரையும், இலக்கண

வினா விடையும், இலக்கணச் சுருக்கமும் எழுதித் தெளிவு பெற அச்சிட்டு வெளிப்படுத்தினர். ஆசிரியர்கள் உதவியின்றியே யாவரும் படித்துணரும் பான்மையில் எளிமையாக்கி யுதவினர். அந்த **இலக்கணச் சுருக்க நூலின்**கண் காட்டிய தெள்ளிய உரைநடையினை ஈண்டுக் குறிக்கின்றாம்.

"பொன்னன் கரியன் முதலானவை எட்டு வேற்றுமைகளுள் ஒன்றை ஏற்கும்போது பெயர்ப் பகுபதங்களாம். முக்காலங்களுள் ஒன்றைக் குறிப் பாகக் காட்டும்போது குறிப்பு வினைமுற்றுப் பகுபதங்களாம். காலங் காட்டுதலோடு வேற்றுமை ஏற்கும்போது குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதங்களாம். இவையே இம்மூன்றுக்கும் வேறு பாடாம்."

பதவியலில், பெயர்ப் பகுபதம், குறிப்புவினைப் பகுபதம், குறிப்பு வினையாலணையும் பெயர்ப் பகுபதம் என்ற மூன்று. ஒன்று, வேற்றுமை யுருபு ஏற்பது; இன்னொன்று, குறிப்பாகக் காலங்காட்டுவது. பிறிதொன்று, காலங்காட்டி வேற்றுமையுருபும் ஏற்பது. மூன்றுக்கும் வேறுபாடு அறியாது மயங்கும் நிலை ஆசிரியராயினோர்க்கும் வருவதுண்டு. ஆகலின், அம் மயக்கம் களையும் பொருட்டு எவ்வளவு எளிமையாகப் பகுத்து எழுதியுள்ளார் என்பதை நினைக்கும்போது, எவ்வாறு அவரைப் பாராட்டுவது என்பதே தெரியவில்லை. கல்லையும் கனிவிக்கும் ஆற்றல் நாவலருக்கு உண்டுபோலும்! என்னே அவர்தம் தெளிவு!

இலக்கணப் பகுதிக்கு எழுதிய உரை எவ்வளவு தெளிவாக அமைந்துள்ளதோ, அதனினும் தெளி வாகவும், சுருக்கமாகவும் அழகுடனும் உரை விளங்குவது **பெரிய புராண** காப்பியத்திலாம். இன்று வரையும் அவ்வளவு அருமையான உரை கண்டவர்

இல்லையென்றே துணிந்து கூறலாம். அதன் உண்மையைப் பின்வரும் பகுதியால் உணர்வாம்.

"உலகை வென்ற உத்தமச் சிறுத்தொண்டர் திருத்தொண்டரை யூட்டவேண்டி யுண்ணப்புகலும் வைரவர் அவரைத் தடுத்து, 'ஆறுமாதத்திற் கொரு முறை அன்னம் உண்ணும் யாம் உண்ணுமளவும் பொறுக்காது தினந்தோறும் அன்னம் உண்ணும் நீவிர் எமக்குமுன் உண்ணப் புகுதல் என்னை? நம்மோடு அமுது செய்ய உமக்குப் புத்திரனிருப்பின் அழையும்' என்றார். அதற்கு நாயனார் பெருமான், 'என் புதல்வன் இப்போது உதவான்' என்று சொன்னார். வைரவர், 'அவன் வந்தாலன்றி நாம் உண்ணோம். தேடி அழைத்து வாரும்' என்றார். அது கேட்டுச் சிறுத் தொண்டரும், மனைவியாரும் வருத்தமுற்று வெளியே போய், 'மைந்தா வாராய்; செய்ய மணியே வாராய்; சீராளா வாராய்; வைரவர் உன்னோடு அமுது செய்ய அழைக்கின்றார். வாராய், வாராய்' என்று ஓலமிட்டு அழைத்தார்கள். அதுகாலை அம்பலத்தில் ஆனந்த நடம்புரியும் அருட்பிரகாசரது திருவருளால் சீராள தேவர் பள்ளியினின்றும் ஓடிவருபவரைப் போல் வந்தார். அனைத்துலகையும் ஈன்ற அன்னையைப்போன்ற அன்னையார் அருமைப் புதல்வனை அணைத்தெடுத்து நாயகர்பால் அளித்தார். அன்பர் பெருமான் 'அடியவர் அமுது செய்யப் பெற்றோம்' என்று ஆனந்தமடைந்து விரைவாக அழைத்துக் கொண்டு வீட்டிற்குள்ளே வந்தார். அதற்கு முன்னே வைரவர் மறைந்தருளினார். சிறுத்தொண்டர் அடியவரைக் காணாமல் திகைத்தார்; வீழ்ந்தார்; மயங்கினார்; 'யாங்கள் உய்யத் திருவமுது செய்யாது வைரவர் எங்கே ஒளித்தனரோ' என்று மையல் கொண்டு வெளியே வந்தார். சிறுத் தொண்டரும், தேவியாரும், புத்திரரும், தாதியாரும் சிவமூர்த்திகளைத் தரிசித்துத் தங்களை மறந்து தாங்களே

அறியாதவர்களாய் விழுந்து வணங்கித் துதி செய்து கொண்டு சிவமாகவே நின்றார்கள்."

இப்பகுதி சிறுத்தொண்டர் வரலாற்றைச் சார்ந்தது. திருவெண்காட்டு நம்பியும் திருவெண்காட்டு நங்கையும் அடியவர் பொருட்டுத் தம் ஒரே மகவை அரிந்து கறிசமைத்து அமுதூட்டத் துணிந்த திடுக்கிடும் செயலை அறியாதார் யாரே ? அவர்கள்பால் வந்து அடியவராம் வைரவர் சிறுத்தொண்டரையும் உடனுண்ணுமாறு வேண்டினார் என்பது இப்பகுதிக்கு முந்திய நிகழ்ச்சி யாம். நாவலர் 'பெரிய புராணப் பித்தர்' என்பது அவர் இளமை வாழ்வில் நடந்த நிகழ்ச்சியால் அறிந்தோம். அத்துடன் மாணவர்கட்கு முதன் முதலில் பயிற்றுவிக்கும் இலக்கியமும் பெரிய புராண மென்றும் கண்டோம். ஏட்டிலே உள்ள பாடல்களை அச்சிடுங் காலத்து முதலிலே உரை எழுதிக் கொள்ளாமல், கையிலே ஏட்டினைத் தாங்கி, ஒவ்வொரு பாடலாகப் படித்து உரை செய்து அச்சுக் கோப்பவரிடம் கூற அவர் கோத்து அச்சிடுவர் என்ற வியப்புறு செயலையும் முன்னர்க் குறிப்பிட்டோம். இவற்றை யெல்லாம் மனதில் அமைத்து மேலே காட்டிய உரை நடைப் பகுதியை எண்ணிப் பாருங்கள்! பல ஆண்டுகள் எழுதி எழுதிப் பலரிடம் கொடுத்துத் திருத்தம் செய்து உரை எழுதும் பேரறிஞர் என்பாரின் உரையும் இதன்முன் னிற்குமோ ? சேக்கிழார் பாடல் களை ஏட்டிலே படித்து உணர்ந்து அவர் கருத்தினையும் சொல்லினையும் பொன்னேபோல் போற்றி இம்மியும் கருத்தை விடாமலும், மாறுபடாமலும், அவர் உருகிப் பாடியதுபோல் உருக்கமும் அமைய எத்துணை தெளி வாகத் தமிழ் மரபு வழுவாது அமைக்கப்பட்டுள்ளது அவ்வுரை! எத்தகையோரும் பிறர் துணையின்றிப் படித்து ஒழுகும் பான்மையும் அவ்வுரையிலே மிளிர் கின்றதன்றோ ? நாவலர் வரைந்துள்ள அவ்வுரையின்

கண் ஓரிடத்திலேனும் ஒரு சிறு குறையும் காண முடியாத தன்மையில் உள்ளது என்பதைப் பாடலோடு இயைத்து உரையினைப் பயில்வார் அறிவர். மேலே காட்டிய உரைப் பகுதிக்குரிய பெரிய புராணப் பாக்களை ஒப்புநோக்குமுகத்தான் ஈண்டு வரைகின்றும்.

" வைய நிகழுஞ் சிறுத்தொண்டர்
மைந்தா வருவா யெனவழைத்தார்
தைய லாருந் தலைவர்பணி
தலைநிற் பாராய்த் தாமழைப்பார்
செய்ய மணியே சீராளா
வாராய் சிவனு ரடியார்தாம்
உய்ய வகையா லுடனுண்ண
வழைக்கின் றாரென் றோலமிட.

பரம ரருளாற் பள்ளியினின்
றோடி வருவான் போல்வந்
தரமில் வனப்பிற் றனிப்புதல்வன்
தன்னை யெடுத்துத் தழுவித்தங்
கரமுன் னணைத்துக் கணவனார்
கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்
புரமுன் றெரித்தார் திருத்தொண்ட
ருண்ணப் பெற்றோ மெனும்பொலிவால்.

வந்த மகனைக் கடிதிற்கொண்
டமுது செய்விப் பான்வந்தார்
முந்த வேயப் பயிரவரா
முதல்வ ரங்கண் மறைந்தருளச்
சிந்தை கலங்கிக் காணாது
திகைத்தார் வீழ்ந்தார் தெருமந்தார்
வெந்த விறைச்சிக் கறியமுதுங்
கலத்திற்காணார் வெருவுற்றார் "

இப் பாடல்களின் கருத்துக்களை உருக்கமுடன் உரைநடையில் முன்னரே எழுதிக் கொள்ளாமல் மனத்திலே அமைத்து ஆக்கிய நாவலரின் பேரறிவுக்கு எல்லையுண்டோ? யாவரும் அவரை 'உரை வேந்தர்'

எனப் புகழ்வதும் பொருத்தமேயாம். உரை வேந்தராக மட்டுமன்றி, ஒப்பில்லாப் பதிப்பாளராகவும் திகழ்ந்தது கண்டு தமிழகம் பெருமை கொண்டது! அவர் காலத்தே வாழ்ந்த குறுநில மன்னர்களும், வள்ளல்களும், திருமடத் தலைவர்களும், அரசாங்க ஊழியர்களும் புகழ்ந்த புகழ்ச்சிக்கு அளவில்லை. 1913-ஆம் ஆண்டிலே நடைபெற்ற சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடைய கல்வி நிலையத்தின் விழாவிலே பங்குகொண்ட சென்னை உயர்நீதி மன்றத் தலைவரா யிலங்கிய திரு. சதாசிவ ஐயரவர்கள் நாவலரைப் பற்றிப் பாராட்டிய உரைகள் பொற்றகட்டிலே பதிக்கப்பட்ட இரத்தின மணிகள் என்று சொல்லத்தக்க பெருமையுடையன. நாவலர் பெருமையை இன்றும் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் அச்சொற்களைச் சிந்தையிற் கொள்ளுங்கள்:

"நாவலரைப் போல முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்கள் இல்லை. ஒருவேளை இருந்தாலும் அவரைப் போலத் தமிழ் மொழியையும், நல்லொழுக்கத்தையும், சைவ சமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசன நடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டாருக்கு உதவி செய்தவர் வேறொருவரும் இல்லை. பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப்போல் ஒருவரும் இல்லை."

6. சொல்லின் செல்வர்

நாவலர் உரையாசிரியராகவும் பதிப்பாசிரிய ராகவும் விளங்கித் தொண்டில் தலைசிறந்து நின்றதை முந்திய பகுதியில் அறிந்தோமல்லவா? அவர்கள் எழுத்தால் மட்டும் அமையாது தம் சொல்லாலும் அரிய பணியாற்றிப் பெருநாவலராகப் புகழ் பெற்றதை அறிய வேண்டுவது இன்றியமையாததாம். இந்நூலின் குறிக்கோளும் அதுவேயாகலின் சிறிது விளக்கமாகக் கூறிக் காண்பாம்.

நாவன்மையிலே சிறந்தோர் நாவலர்கள் எனப் படுவர். அவர்கள் சொல்லும் கருத்தும் சுவைபட அமைந்து உணர்ச்சியூட்டிக் கேட்டாரைப் பிணித்துத் தம் வயப்படுத்துவதாகும். ஆகவே, அவர்கள் சொல் ஒருவகை ஆற்றலையுடையது எனக் கருத வேண்டி யுள்ளது. தங்கள் சொல்லின் வன்மையினாலே எவரை யும் வெல்லுந் தரமுடையராகின்றனர். அவர்களே சொல்லின் செல்வர் எனப் பாராட்டப்படுதற் குரியர். அத்தகைய புகழை யடைகின்றவர்களே பேச்சுக்கலை அறிந்தோர். அந்தக் கலை நந்தம் தமிழகத்திலே இருந் ததா என்பதை ஆராய்பவர் சிலரே. தமிழகத்திற்கு ஆங்கிலேயர் போந்தபின்னரே அப் பேச்சுக்கலை கருக்கொள்வதாயிற்று என மயங்குவோரே பல ராயினர். ஆராயுமிடத்து உண்மை அதுவன்று. பேச்சுக் கலை தொன்று தொட்டு நம் நாட்டின்கண் முகிழ்த் திருந்தது என்பதும், ஆங்கில ஆட்சிக் காலத்தில் வளர்ந்தோங்கத் தலைப்பட்டது என்பதும் நடுவுநிலைக் கொள்கையுடையார் காணும் உண்மையாம். அதற் குரிய சான்றுகள் தமிழிலக்கியங்களில் சிற்சில இடங்

களில் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் காணக் கிடக்கின்றன.

சங்கம் மருவிய நூல்களில் ஒன்ருகிய பத்துப் பாட்டு நாவன்மை மிக்க புலவர் பெருமக்களால் யாத்தது. சோழன் கரிகாற் பெருவளத்தானைத் தலைவஞகக் கொண்டு விளங்குகின்ற பட்டினப் பாலை என்பது காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப் பினைக் கூறுவதாகும். புலவர் உருத்திரங்கண்ணனார் அப் பட்டினத்தின் தெருக்களை விரித்து அழகுபடக் கூறுகின்றபொழுது ஒரு பகுதியில் பேச்சுக்கலை நிகழுமிடத்தைக் குறிப்பிட்டு, அதனை அறிவிக்கும் கொடி கட்டப்பட்டிருத்தலைச் சுட்டுகின்ருர். அதாவது, பல இலக்கண இலக்கியங்களைக் கல்வி கேள்வி வாயிலாகக் கரைகண்ட நல்லொழுக்கமுடைய ஆசிரி யர்கள் ஓரிடத்தில் குழுமுவர். பல்வேறு பொருள் களைக் குறித்து வாதம் நிகழ்த்துவர். அப்பேச்சு அறிவு, செறிவு, தெளிவு, உணர்ச்சி, தருக்கம் முதலிய குணங்களைக் கொண்டு கேட்டாரைப் பிணிக்கவல்லது. அந்த இடத்தில் கட்டப்பட்டுப் பறக்கும் கொடியின் அடையாளங் கண்டு ஆர்வமுள்ளோர் அவ்விடம் போந்து குழுமுவர். இதனை இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னரே தாம் யாத்த பாடலில், "பல் கேள்வித் துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர் உறழ் குறித் தெடுத்த உருகெழு கொடியும்" எனக் குறித் துள்ளமை நினைத்தற் குரியது. பேச்சுக்கலை சிறந்து விளங்குவது வாதம் நிகழ்த்தும்போதுதான் என்பதை இன்றைய நாளில் கண்கூடாகக் காண்கின்ரேமன்ரே? மணிமேகலைக் காப்பியத்தில் சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதையுள், வஞ்சிமாநகர்க்கண் இருந்து சமயவாதிகளைக் கண்டு அவரவர் சமயப் பொருட்களைக் கேட்க, அவர்கள் தத்தம் சமயக் கருத்துக்களை வாத முகத்தான் மணிமேகலைக்கு உரைத்தனர் என்பதும்,

அவர்கள் அளவைவாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிகண்ட வாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி எனப் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தலானும் பேச்சுக்கலை வாதம் நிகழ்த்தும்போது சிறந்து விளங்கும் என்பது உறுதி யாகிறது. அன்றியும், சொல்வன்மை ஓர் ஒப்பற்ற கலை எனபதும் அதனைப் பெற்றோர் இவ்வுலகையே ஆட்டிப் படைக்கும் ஆற்றலுடையராவர் என்பதும் வள்ளுவனார் தெள்ளிதிற் கண்ட உண்மையாம். அவர் அருளிப் போந்த திருக்குறளில், பேச்சுக் கலையினைக் குறித்து வெளிப்படையாக ஒரு அதிகாரமும், குறிப்பாகச் சில அதிகாரங்களும் அமைந்து கிடக்கின் றன. திருக்குறட் பொருட்பால் அங்கவியலில், சொல் வன்மை என்றே பெயருள்ள அதிகாரத்தை நோக்கும் பொழுது அப்பத்துக் குறட்பாக்களும் பேச்சுக்கலையில் சிறந்து விளங்கும் வழியினை வகுத்துக் காட்டுதலைக் காணலாம. 'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும வேட்ப மொழிவதாஞ் சொல்' என்ற ஒரு குறளே தக்க எடுத்துக்காட்டாகும். பரிமேலழகர் அதிகார அடைவு கூறுங்கால், அமைச்சு என்ற அதி காரத்தின் பின்னர், சொல்வன்மை என்ற அதிகார மும் அமைந்திருப்பதால் அமைச்சர்க்கே சொல் வன்மை வேண்டுமென ஆசிரியர் வள்ளுவர் கருதிய தாக உரை வரைந்துள்ளார். எனினும், உலகப் பொதுநூலாம் திருக்குறளில் சொல்லிய யாவும் மக்களனைவருக்கும் பொதுவேயாதலால், ஈண்டு அவ் வதிகாரமும் யாவர்க்கும் பயன்படக் கூறியதேயாம். அன்றியும், பகைத்திறந்தெரிதல் என்ற அதிகாரத்துள், 'வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க சொல் லேருழவர் பகை' என்ற குறட்பாவால், நாவன்மை யிற் சிறந்த புலவர் பெருமக்களின் ஆற்றலும் குறிப்பா லுணரத்தகும். சொல்லேருழவர் என்பார் நீதி நூல் களைக் கற்றுத் துறைபோகிய அமைச்சர் எனக்

கொண்டாலும் சொல்வன்மை மிக்க எவருடைய பகை யையும் தேடிக் கொள்ளுதல் கூடாது என்பதே உண்மைக் கருத்தாம். ஏனெனில், 'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்குமரிது' என வள்ளுவர் கூறியிருப்பதே போது மன்றோ? தவிரவும், அவையறிதல், அவையஞ்சாமை என்ற இரண்டு அதிகாரங்களும், அரசனுடைய அவையைமட்டும் குறிப்பன எனக் கொள்ளாமல் எந்த அவைக்கண்ணும் நடக்கும் தன்மையைக் குறிப்பன வாகவே கொள்ளுதல் சாலச் சிறப்புடைத்தாம். தம் மினும் அறிவால் மிக்காரும் ஒப்பாரும் குழுமிய அவை யின்கண் தம் நூலறிவும் சொல்வன்மையும் தோன்றச் சொற்பொழிவாற்ற வேண்டும்; ஏனை வெள்ளை களவைக்கண், அவர்கள் மதிக்கும் வகை அவரினும் வெண்மையுடையராகப் பேசுதல் வேண்டும் என்று அவையறியுந் திறத்தைக் கூறியுள்ளார். அக் கருத் தமைந்த 'ஒளியார்முன் ஒள்ளியராதல் வெளியார் முன் வான்சுதை வண்ணங் கொளல்' என்ற குறளைக் காண்க. மேலும், அவையஞ்சாமை என்ற அதிகாரத்தின்கண், 'பகையகத்துச் சாவார் எளியர் அரியர் அவையகத்து அஞ்சாதவர்' என்ற பாவால் பேச்சுக்கலை வல்லுநர் உலகத்து மிக அரியர் என வெளிப்படையாகக் குறித்துள்ளமை காணலாம். இனி, சொல்வன்மைக் கலை சிறக்கக் கேட்போர் வேண்டும். கேட்டபின் மகிழ்வதோடல்லாமல் அவர் கள் வழங்கும் பாராட்டுரைகளே ஒருவனைச் சிறந்த பேச்சாளன் என உலகறியச் செய்யும். அதனை யுணர்ந்த வள்ளுவர், 'கற்றிலனாயினும் கேட்க' என்றும், 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' என்றும், 'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்' என்றும் பலவாறாகக் குறிப்பவை கேள்விச் செல்வம் எத்துணை உயர்ந்தது என்பதை வெளிப்படையாகக் காட்டுவதோடு, பேச்சுக் கலையின் பயனையும் குறிப்பாக

உணர்த்துதலையும் அறியலாம். பேசுசினைக் கேட்குங் கால் எவ்வாறு அறிவினைச் செலுத்த வேண்டுமென்று கூறவந்த வள்ளுவர் அறிவுடைமை என்ற அதி காரத்தில், 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு' என வழிகாட்டுதல் இன்புறற்பாலதாம். ஒருவன் தனி யாகப் பேசுமிடத்தும், அவைக்கண் பேசுமிடத்தும் அவன்தன் உயர்வு தாழ்வு, சிறுமை, பெருமை முதலியன நோக்காது, பேசுங்கால் மிளிர்ந்து பயன் விளைக்கும் இனிய கருத்துக்களைக் கொள்ளவேண்டு வதே அறிவுடைமையாம். பேச்சு, ஒரு கலை யெனினும் அதன் சொற்சுவை, பொருட்சுவைகளிலே மயங்கி விடாது ஆய்ந்து பார்க்கும் நுண்மாண் நுழைபுலம் இன்றியமையாது வேண்டப்படுவது என்பதை அறி வுறுத்துகின்றாரன்றோ? இவை யாவும், சொல வன்மைக் கலை வள்ளுவரால் எத்துணை ஆர்வத்துடன் குறளிலக்கியத்திலே மறவாது அமைக்கப்பட்டுள்ளது என்பதை உணர்த்துகின்றன.

சொல்வன்மைக் கலை இடைக்காலத்திலும் சிறிது வளர்ச்சியுற்றிருந்தது என்பதும் உண்மையே. கி. பி. ஏழாவது நூற்றாண்டிலே சமயவுணர்வு மிகுந்து விளங்கியது. சைவ சமண சமயங்களுக்குள் நிகழ்ந்த வாதங்கள் கணக்கில. சமயகுரவர் நால்வருள் நாவன்மை மிக்க நாவுக்கரசர் சமண சமயம் புகுந்து தருமசேனர் என்ற பட்டம் பெற்று விளங்கியது சொல்வன்மையாலன்றோ? அவர் மீண்டும் சைவ சமயம் போந்து எண்ணற்ற பாடல்களை இறைவன்பால் பாடிப் பேச்சுத் திறத்தால் சைவ சமயத்தை ஓங்கச் செய்தமையும் சொல்வன்மையாலேயாம். அதனாலேயே, நாவரசர், சொல்லரசர், வாக்கின் மன்னர் என்று பலவாறு புகழப்பெற்றனர் என்பதை அறியாதார் யாவர்? பெரிய புராண இலக்கியத்துள்

சேக்கிழார் அவரை நினைந்து நினைந்து வணங்கி வாழ்த்தியிருப்பதே தக்க சான்றும். கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலும், கவியரசர் கம்பர் தம் காப்பியத்துள் சொல்வன்மைக் கலையின் உருவாக மாருதி மைந்தனைக் கற்பித்துள்ளமையும், அவன் வாக்கின் வன்மையால் சொல்லின் செல்வன் எனப் புகழ் பெற்றதும் பேச்சுக்கலை நாட்டிலே உலவி யிருந்தமைக்குச் சான்றாகுமன்றோ? கம்ப ராமாயணம் கிட்கிந்தா காண்டத்தில், சுக்கிரீவன் என்னும் வானர வேந்தன் சீதையைத் தேடிச்சென்ற இராம லக்குமணர் களைக் கண்டு முதலிலே ஐயுற்றான். அதன்பின் அனுமனை உண்மை தெரிய விடுத்தனன். அனுமன் இராம லக்குவர்களைக் கூர்ந்து பார்த்தபின் அவர்கள் பகைநாட்டினர் அல்லர் என்று முடிவுசெய்தான். அவர்கள் தோற்றங் கண்டான். முத்தியின்பந் தரும் தேவர்களோ என வியந்தான். 'என்பு உருகுகின்றது. காதல் பெருகுகின்றது. அன்பிற்கு எல்லை காணேன். யாது காரணமோ அறியேன்' என இராமன்முன் சென்று பணிவுடன் நின்றான். இராகவன் யாரென வினவினான். வினவியாற்குத் தன் நாமமும் பெயரும் பிறவும் சுருங்கிய சொல்லால் விளங்க உரைத்து வீரனென நின்றான். அதுபோழ்து, அவ்விருவரும் தூய ஒழுக்கினனாகக் காணப்பட்ட வாயு மைந்தன் தோற்றம் கண்டனர். கல்லாத கலைகளையும், வேத மாகிய கலைக் கடலினையும் சொல்லாமற் சொல்லி நின்றது அவ்வனுமன் காட்சி. அக்காட்சிதானே அவனைக் கலைக்களஞ்சியம் என்பதை உணர்த்திற்று. வியந்த இராமன்,

> 'இல்லாத வுலகத் தெங்கும்
> ஈங்கிவன் இசைகள் கூரக்
> கல்லாத கலையும் வேதக்
> கடலுமே யென்னுங் காட்சி

சொல்லாலே தோன்றிற் றன்றே
யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார்தோ ளிளைய வீர
விரிஞ்சனோ விடைவல் லானோ'

என்று இளவல்பால் வினவுவதாகக் கம்பர்தம் செஞ்சொற்கள் கணீர் என்று ஒலித்துக் காட்டுகின்றன. கம்பர் காலத்தும் சொல்லின் செல்வர்கள் நிலவினர்கள் என்பது பொய்யோ?

பிறவிக் குருடராய்ப் பெருநாவலராக இலங்கிய **வீரராகவ முதலியார்** பேச்சுக்கலையில் சிறந்திருந்தவரே. எண்ணற்ற பாடல்களை மனதிலேயே எழுதிப் படித்த வித்தகர். ஒரு முறை, சோழன் பரராசசிங்கன்பால் பரிசு பெறச் சென்ற வீரராகவர் கம்ப ராமாயண விரிவுரை நிகழ்த்தினர். பன்னீராயிரம் பாடல்களையும் பொருள் சொல்லி விளக்கவுரை செய்து வந்தனர் என்றும், ஏட்டிலுள்ள பாடல்களை ஒருவர் படிக்க, அவைகளைக் கேட்டபின் பொருள் கூறி வந்தனர் என்றும், அந்தப் பாடல்களில் பயனுடையன, கடினமாயுள்ளன, வெளிப்படையாகவுள்ளன இத்துணை எனவும் பகுத்துக் கூறி யாவரும் வியக்கும் வண்ணம் நினைவுத்திறன் மிகுந்த பெருநாவலராய் விளங்கினர் என்றும் கூறப்படும் நிகழ்ச்சி தொண்டைமண்டல சதகத்தால் அறியப்படுகிறது. வீரராகவர் சொற்பெருக்கைச் செவிமடுத்த சோழ வேந்தனும் கோப்பெருந்தேவியும் பாமாலை சூட்டிப் புகழ்ந்தனர் என்பதும் தனிப்பாடல் வாயிலாகத் தெரிய வருகிறது. தமிழ்ப் புலமை சான்ற அரசியார் கலைமகளினும் கவி வீரராகவர் போற்றற் குரியவர் என்ற கருத்தில்,

" இன்னங் கலைமகள் கைமீதில் புத்தகமேந்தி யந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப்பா ளென்ன புண்ணியமோ
கன்னன் சயந்தன் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்றான் கனமுத் தமிழையுமே."

எனப் பாடியுள்ளமை பேச்சுக்கலை நிலவிய தன்மையை உணர்த்துகின்றதன்றோ?

கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே சோழ நாட்டில் தோன்றியவர் **நல்லாப் பிள்ளை** என்பார். நல்லாப் பிள்ளை பாரதம் என இன்றும் வழங்கப்படுவதால் அவர் பெயர் தமிழகம் முழுவதும் பரவியது என்பது தெரிகின்றது. இளமையிலேயே இருபெருங் குரவரற்ற தமியராய், வீரண்ண தேவர் என்ற தமிழ்ப்புலமை மிக்காரால் இரக்கமுடன் வளர்க்கப் பெற்றவர். வீரண்ண தேவர் வள்ளல்களை நாடிச் சென்று அவர்கள் வாழும் ஊர்களிலே பாரதத்தின் உயிர்ப் பகுதியாகக் கருதப்படும் 'கண்ணன் தூது' என்பதைச் சொற்பெருக்காற்றி மகிழ்வித்து வந்தார். அப்பொழுது, நல்லாப் பிள்ளை, பாடல்களை ஒவ்வொன்றாக இசையுடன் பாட, தேவரவர்கள் உரை கூறி விளக்கமுடன் சொற்பொழிவு நிகழ்த்துவர். ஒரு நாள்; பக்கத்து ஊரிலே 'பாரதப் பிரசங்கம்' ஏற்பாடு செய்து, கேட்பதற்காக மக்களெல்லாம் மிக ஆவலோடு கூடியுள்ளனர். தேவரவர்கள் பொறுக்க முடியாத கடுங் காய்ச்சலால் வருந்தியதால் போவதற்கு இயலவில்லை. இளைஞராக இருந்த நல்லாப் பிள்ளையை நிறைவு செய்ய அனுப்பினார். அன்றைய சொற்பொழிவின் இனிமையை மாந்திய அனைவரும் அவரையே தொடர்ந்து விரிவுரையாற்ற விழைந்தனர். அதற்கு இசைந்த அவர், இரண்டே ஆண்டுகளில் பாரத முழுவதையும் தம் பேச்சுத் திறத்தால் அழகு பெற விளக்கிச் சொல்லின் செல்வராகப் புகழ்பெற்றார் என்பதை அறிகின்றோம். பேச்சுக்கலை மன்னர் மன்றிலேயிருந்து மக்கள் மன்றிலே தவழ்ந்து மாட்சி யுற்றது என்பதற்கு இதனினும் சான்று வேண்டுங்கொல்? இக் காலத்தே கோவில்களிலும், மடங்களிலும்,

திருவிழாக்களிலும், குருபூசை நாட்களிலும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறலாயின. இவற்ருனும் பேச்சுக்கலையில் சிறந்தோர் பெருகுவாராயினர் என்னலாம். எனினும், பேச்சுக்கலை பிற்காலத்தைப் போன்று மின்னல வேகத்தில் வளர்ச்சியுறவில்லை. வள்ளுவப் பெருந்தகை, 'போர்க்களத்தே அஞ்சாது சென்று உயிர்விடத் துணிபவர் எண்ணிறந்தவர். ஆனல், அறிவுடையோர் குழுமிய அவைக்கண் அஞ்சாது போந்துநின்று பேசவல்லவர் விரல்விட்டு எண்ணத்தக்கவரே' எனக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மூதாட்டியாம் ஔவையார் பாடியதாக ஒரு பாடல் சொல்லின் செல்வர் அருமையைப் புலப்படுத்து கின்றது. அப்பாடல் எழுந்ததற்கு ஒரு கதைக் குறிப்பும் சொல்லப்பட்டு வருகின்றது. ஔவையாரைப் பெருமைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்ட கதையாயினும், அதன்கண் அமைந்த உயர்ந்த கருத்துக்கள் சிறந்த விருந்தாகும் என்பதைக் காண்போர் அறிவர். பாண்டிய மன்னன் ஒருவன் தமிழ்ப்புலமை சான்ருேனுய்ப் புலவர்களைப் பேணும் புரவலனுக விளங்கினன். ஒரு நாள், தமிழ் நலங் கருதி ஒரு பணயம் வைத்தான். அஃதாவது, பொன்ஞற் செய்த சங்கிலியால் பிணைக்கப்பட்ட ஒரு ஊஞ்சலில் பொற்கிழி ஒன்றை வைத்துச் சங்கிலி அற்று விழுமாறு பாடும் புலவர் அப் பொற்கிழியைப் பரிசாகப் பெறக் கடவர் என அறிவித்திருந்தான். அதனை யறிந்த தமிழ்ப் புலவர் பல்லோர் பாக்களை யாத்துப் பாடினர். சங்கிலி அற்று விழவில்லை. அவ்விடத்து எதிர்பாராது ஔவையார் போந்து பாடவும் பொற்சங்கிலி அறுந்தன வென்றும் பொற்கிழியைப் பரிசாகப் பெற்றனர் என்றும் கூறுவர். நான்கு பாடல்கள் பாடிய பின்னரே சங்கிலிகள் அறுந்தன வெனவும், அவற்றுள் முதற் பாடல் தமிழ்நாட்டின் சொல்வன்மைக் கலையின் அருமையைப் புலப்படுத்துவ தெனவும் அறிகின்ருேம்.

தமிழகத்தில் ஔவை கால்படாத சிறு இடமுமில்லை யல்லவா? உலகியலை நன்கு அறிந்த அவர், "அறிவுடையார் நிரம்பிய அவைக்கண் அஞ்சாது பேசும் பேச்சாளர் நூற்றுக்கு ஒருவரே யாவர்; அருந்தமிழ்ப் புலமை சான்றோர் ஆயிரத்துக் கொருவரே யாவர். தன்னை எதிர்ப்பாரோடு வாதிட்டு வெல்பவர் பதினா யிரத்துள் ஒருவரேயாம். தமிழக முழுதும் ஆராய்ந்து பார்க்குங்கால் கோடிக்கு ஒருவரே" என்னுங் கருத்தமையப் பாடியுள்ளார். வடமொழியாளர் "பேச்சுக்கலை வல்லுநர் நூறுயிரவருள் ஒருவரே" எனக் கூறுதலைப் பரிமேலழகர் சுட்டிக் காட்டியுள்ளார். தமிழகத்தில் நூற்றுக்கொருவர் பேச்சாளராய்த் திகழ்ந் தனர் என்பது அக்கலை வளர்ச்சி பெற்றதை அறிவிக் கின்றதன்றோ? இப்பாடல் சங்க கால ஔவையாரால் பாடப்பட்டது அன்று. ஆதலால், தமிழகத்தின் பிற்காலத் தன்மையை அறிவுறுத்துவதாகக் கொள்ளுதலே ஏற்புடைத்தாம். அப்பாடல் யாவரும் அறிந்து மனத்தமைக்க வேண்டும் என்னும் கருத்தால் ஈண்டுக் குறிக்கின்றோம்.

> "ஆர்த்தசபை நூற்றொருவர் ஆயிரத்தொன் றாம்புலவர்
> வார்த்தைபதி னாயிரத் தொருவர் — பூத்தமலர்த்
> தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவர்
> உண்டாயி னுண்டென் றறு."

இப்பாடற்கு வேறு பொருளுங் கொள்வர். பேச் சாளர், புலவர், வாய்மையாளர், வள்ளல் என நால்வ ராம் என்பர். ஔவையார் பாடலுக்கு ஒப்பாகப் பேச் சாளர் நூற்றுக்கு ஒருவர்கூட இல்லாத காலமும் உண்டு. ஆங்கில ஆட்சி பரவி இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளைத் தன்னகப்படுத்திய காலத்தில் தமிழ்ப் பேச்சுக்கலை குன்றிவிட்டது. ஆங்கில மொழி அரசியல் மொழியாயினமையின் தாய்மொழி பயில்வாரும் பேசு வாரும் அருகினர். அருகிவந்த காரணத்தால், பிற

மொழியிற் காதல் கொண்டு அரசாங்க அலுவலேயே குறியாகக் கொண்டு பயில்வாராயினர். அதனல், கல்லூரிகளிலும், வழக்கு மன்றங்களிலும், சட்டசபைகளிலும், நகராட்சிக் கழகங்களிலும், பிற பொது இடங்களிலும் ஆங்கிலத்திலேயே பேசும் முறை அமைந்தது. ஆகவே, கேட்போர் முழுவதும் உணரும் ஆற்றலில்லாவிட்டாலும், பேசுவோர் ஆங்கிலத்திலேயே பேசிவந்தனர். சுருங்கச் சொன்னல் இந்திய மொழிகளில் பேசுபவர் இல்லை என்றே கூறிவிடலாம். தம் மொழியில் பேசுவதும் இழுக்கென்று கருதும் அளவிற்கு மக்கள் தம் மொழி ஒருவிப் பிறமொழி வயத்தராஞர்கள். இந்நிலையில் தமிழகத்தில் பேச்சுக் கலை குன்றியதும், இலங்கையின் வட பகுதியாகிய யாழ்ப்பாணத்திலும் அக்கலை அருகிவரத் தலைப்பட்டதும் உண்மையேயாம். ஆங்கில நாட்டினர் தம் சமயத்தை வளர்க்கப் பேச்சுக் கலையினைக் கருவியாகக் கொண்டனர். அதுபோன்றே தத்தம் சமயத்தைப் பரப்ப வேண்டுமென்று முன்வந்த பிற சமயத்தவர்களும் பொதுவிடங்களிலே சொற்பொழிவாற்றத் தலைப்பட்டனர். இதனல் ஒவ்வொருவரும் ஓரளவு வெற்றியுங் கண்டனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அக்காலத்தே, தமிழில் பேசும் ஆற்றலுடையார் நூற்றுக்கு ஒருவர்கூட இல்லை என்று துணிந்து கூறலாம். கோடிக் கணக்கான தமிழினத்தவருக்குள் ஒப்பற்றவராக யாழ்ப்பாணத்திலே பிறந்து, பேச்சுக் கலையிற் சிறந்து, நாவலர் என்ற பெரும் பட்டம் பெற்றவர் நம் ஆறுமுக நாவலர் ஒருவரேயாம். அவைக்கண் அஞ்சாது பேசும் ஆற்றலும், எஞ்சாத நூற்புலமையும், எவரும் விஞ்சாது வாதிடும் வன்மையும், செஞ்சொற் செல்வருள் தலைமையும் ஒருங்கே கொண்டு மும்மொழி வாணராய் இலங்கிய நாவலர் இதுகாறும் தமிழகத்துத் தோன்றவில்லை என்று சொல்லலாம்!

நாவலர் சொல்வன்மைக் கலையில் தலை சிறந்து விளங்கியதை ஆராய்கின்றபொழுது அவரை ஒரு பிறவிப் பேச்சாளர் என்றே கருத வேண்டியுளது. சொற்கள் எண்ணிறந்தன மக்களால் பயன்படுத்தப் படுவன. சொல்லானது வலிமை பெறுவது பயன் படுத்துவார் ஆற்றலைப் பொறுத்தது. பயன்படுத்து பவன் மனவலியில்லாதானாயின் அந்தச் சொல்லும் வலியில்லாதாகிறது. மனவலி யுடையான்பாற் படும் சொல் ஆற்றல் பெற்று அப்பொழுதே பயனளிக்கிறது. சொல்லிற்கு வலிமை தருவது ஒரு அரிய செயலல்லவா? இத்தகைய சொல்வன்மை பெற்றோர் ஆக்கவும் அழிக் கவும் செய்ய வல்லவராவர். இற்றை நாளில், தம் மந்திரச் சொல்லினைப் பன்முறை உருவேற்றி ஒருவனைத் தம் வயப்படுத்தும் 'மெஸ்மரிஸம்' எனும் அற்புதச் செயலைக் காண்கின்றோம். எத்தனையோ நூற்கள் சொல்லின் வலிமையால் எத்தகைய பிணி களையும் ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்று துணிந்து கூறுகின்றன. சொல்லின் ஆற்றலுடையாரின் மனவலிமையை யாரும் அளவிடுதல் முடியாது. அத்தகையோர் வெகுண்ட விடத்திலேயே அவ் வெகுளிச் சொல் வெகுளப்பட்டானைப் பிணமாக்கி விடுதலும் உண்டு என்பதை அறிகின்றோம். வள்ளுவப் பெருந்தகை 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்த லரிது' எனக் கூறி யுள்ளதும், 'பெரியோர் வாயில் விழாதே' எனக் கூறும் முன்னறிவிப்பு மொழியும் சொல்லிற்கு எத்துணை வலிமை உண்டு என்பதை உணர்த்துகின்றன. ஆகவே, எவர் வாயினின்றும் பிறக்கின்றதோ அவருடைய மனவலியைப் பொறுத்ததே அச்சொல்லின் வலிமை என்பது பெறப்படுகின்றது. இத்தகைய வலிமையை இளமைப் பருவத்தே ஒருவர் அடைந் திருப்பின் அது வியப்பிற்குரியதல்லவா? இவ்வித வலிமையினை நாவலர் இளமையிலேயே பெற்றிருந்தா

என்பதை அவர்தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளே தெரிவிக்கின்றன.

நாவலர் பார்சிவல் துரைமகனுருக்குப் பண்டிதராக விளங்கினரல்லவா? அந்தக் காலத்தில் நாவலரின் ஒருசாலை மாணவர்களாக இருந்த இருவர் தம் சமயவொழுக்கங்களை நன்கு அறியாதிருந்தனர். அஃதன்றியும், புறச் சமயப் பற்றும் தம் சமய வெறுப்பும் கொண்டு மனமாற்ற முற்றிருந்தனர். இவர்கள் உளப்பண்பை அறிந்த நாவலர் அவர்களை அவர்தம் சமயத்திலிருந்து ஒழுகுமாறு தம் தூயவுள்ளத்தினின்றும் எழுந்த பேச்சுத் திறத்தால் அமையச் செய்தனர். அவர் சமய வுண்மைகளையும் பெருமைகளையும் எடுத்துக் கூறியதைக் கேட்ட இருவரும் மெய்ம்மறந்து தம் பிழை தவிர்ந்தனர். நாவலர்பால் அன்று முதல் மிகுந்த அன்பு காட்டித் தெய்வமாக மதித்து வந்தனர். அவ்விருவருள் ஒருவர் நாவலர் தோற்றுவித்த சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற கல்வி நிலையத்திலே ஆசிரியராகப் பணியாற்றினர். பிறிதொரு நண்பர் கொழும்பு உயர்நீதி மன்றத் தலைவராகப் பணியாற்றியும் வாழ்ந்தனர். அக்காலத்து நாவலர் பேச்சுத் திறத்தால் திருந்திய ஒழுக்கத்தை யடைந்தோர் பலராவர். எத்தகைய மக்களின் உள்ளத்தையும் சில நாழிகைப் பேச்சால் முற்றிலும் மாற்றி நல்வழி ஒழுகச் செய்வாரென்றால், அவர்பால் அமைந்த சொல்வன்மையை என்னென்பது! அஃதும் இளமைப் பருவத்திலே அமைந்திருந்தது வியப்பிற்குரியதன்றோ?

நாவலர் தமக்கு இளமையிலே வாய்த்திருந்த நாநலத்தைப் பயன்படுத்த இடம் தேடிக்கொண்டிருந்தார். கல்விக் கூடங்களில் கற்பிப்பதும், ஏட்டிலேயுள்ள நூல்களை வெளியிடுவதும் தமிழும் சமயமும் பரவும் கருவிகளாயினும், கேட்டாரை அந்த இடத்திலே உள்ளத்தைக் கவர்ந்து நல்வழிப்படுத்தும் சொற்

பொழிவுகள் அவற்றினும் மிக இன்றியமையாதன என உணர்ந்தார். காந்த சக்தி போல மக்களை விரைவிலே ஈர்க்கும் கலை பேச்சுக்கலை யன்றோ? ஆகவே, பன்னாளாகக் கண்ட கனவு நனவாயினாற்போல 1849-ஆம் ஆண்டில் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் முதற் சொற்பொழிவைத் தொடங்கினார். தமிழிலே சமயச் சொற்பொழிவை முதன் முதல் நிகழ்த்தியவர் இவரே என்பர். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சொற்பொழிவு குறித்த காலத்தில் நிகழ்ந்து வர ஆவன செய்தார். எவ்வளவு நேரமாயினும் நின்று கொண்டே மிக ஆர்வத்துடன் சொற்பொழிவு செய்வது வழக்கமாயிற்று. சில வாரங்களில் கார்த்திகேய ஐயரென்ற தமிழறிஞரும் சொற் பெருக்காற்றுவார். அந்நாளில் நாவலருடைய சொல்வன்மை பல்லோரையும் கவர்ந்தது என்பது மிகையன்று. வாரந்தோறும் கிடைக்கும் சொல் விருந்தைப் பருகிப் பயன் பெற ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்டனர். பிறமொழியில் பேசும் கூட்டங்களில் கலந்து புரியாமல் கைதட்டலோடு மகிழ்ந்திருந்த தமிழ் மக்கள், தம் தாய்த்தமிழில் இனிமையும் எளிமையும் ததும்பப் பேசும் கூட்டங்களைக் கண்டும் கேட்டும் மகிழாதிருப்பரோ? ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சென்று பயனடைய வேண்டுமென்னும் வேட்கை கொள்வாராயினர். வேறு எப் பணிசெய்யத் தவறினாலும் சொற்பொழிவு கேட்கத் தவறினாரல்லர். இவ்வாறு தம் பேச்சுக் கலை மக்களனைவரையும் தம் வயப்படுத்தி இடையறுது சமயப்பணி புரிந்து வரும் நாளில், எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. 'மலைபோல் வந்தது பனிபோல நீங்கிற்று' என்பது பழமொழி. அம் மொழி பொய்க்காது நாவலர் வாழ்வில் துணைநின்று உறுதியாயிற்று. அந்த நிகழ்ச்சியே நாவலரைப் பிறவிப் பேச்சாளராக உலகறியச் செய்தது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலிலே வாரச் சொற்பொழிவு நிகழ்ந்து வந்த தல்லவா? அவ்வாறு நிகழும் காலத்தில், ஒருவாரம் கார்த்திகேய ஐயரென்பார் சொற்பொழிவு செய்ய இசைந்திருந்தார். பேசவேண்டிய நாளும் வந்தது. குறித்த காலத்திலே மக்கள் ஆர்வத்துடன் போந்து குழுமியிருந்தனர். நாவலரும் அக் கூட்டத்தின் நடுவே வீற்றிருந்தார். யாவரும் அன்றையப் பேச்சாளரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த வேளையில் ஐயரவர்கள் மிக விரைவாக ஓடிவந்து நாவலர்பால் சென்றனர். 'என் தாயாருக்கு மிகவும் துன்பமாயிருப்ப தால் என் கடனைத் தாங்களே நிறைவேற்றியருள வேண்டும்' என்று சொல்லிவிட்டு, நாவலர் ஒப்புதலைக் கூடப் பெறுமல் அவ்விடம் விட்டகன்றுர். அதனைக் கேட்டு நாவலர் திகைத்துக்கொண்டிருந்தார். அச் செய்தியறிந்த மக்கள் அனைவரும் 'இன்றும் தாங்களே சொற்பெருக்காற்றுங்கள்' என்று ஆர்வக்குரல் எழுப்பினர். என் செய்வார்! அவர்கள் குரலிற்கு எதிராக 'ஆயத்தமில்லை' என்று உரக்கக் கூறினுர். எதிர்பாராத இச் சொல்லைக் கேட்ட பலர் விதிர்ப் பெய்தினர். சிலர் எள்ளுதல்போல் நகை செய்தனர். அது அவருடைய உள்ளத்தில் மின்சாரவேகத்தில் பாய்ந்ததுபோலும்! அற்புதமோ திருவருளோ அறியேன் என்று அதிசயிக்கும் வண்ணம் ஒரு கதை உள்ளத்தே முகிழ்த்து நினைவைத் தூண்டியது! அவ்வளவுதான்! கதையொடு சொற்பொழிவைத் தொடங்கினுர். கதை எத்தகைய கூட்டத்தையும் கவர வல்லதன்றே? அதனுல் அமைதி நிலவிய அம் மாபெருங் கூட்டத்தில் அவர் தொடங்கிக் கூறிய கதைக்குறிப்பைப் பாருங்கள்! "இங்கிலாந்தில் சில ஆண்டுகட்குமுன் ஒரு தேர்வு நடைபெற்றது. அத் தேர்வில் கலந்து கொண்ட மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கேள்வியைக் குறித்துக் கொடுத்தனர். அவர்களுள்

ஒருவனுக்கு ஒன்றும் எழுதாமல் வெற்றுத்தாளைமட்டும் கொடுத்தனர். அதனைப்பெற்ற அம் மாணவன் சிந்தனை செய்து, சூன்யத்திலிருந்து கடவுள் உலகைப் படைத் தார் என்பதே தனக்குக்கொடுக்கப்பட்ட பொருள் என்று கருதி எழுதினான்' என்ற கதையினை உருவாக்கிக் கொண்டு, 'ஆயத்தமில்லை' என்பதே தலைப்பாக அமைத்து, மரணத்திற்கு ஆயத்தமில்லை என விரித்து, இனிமையும் வியப்பும் தோன்றச் சொற்பொழிவாற் றினார். அது போன்றதோர் சொற்பொழிவு அவர் வாழ்விலே வாய்த்ததே இல்லை என்பர். ஒரு சிறு பொழுதுங்கூடச் சிந்திக்காமல் எவ்வித முன்னறிவிப்பு மில்லாமல் நினையாத பொருளை அந்த நேரத்திலே அழகாகப் பேசி அனைவரையும் கவர்ந்தனர் எனில், அவரைப் பிறவிப் பேச்சாளர் என்பதில் தடையு முண்டோ?

* "மேடைப் பேச்சாளர் என்போர் கடவுளர் அருளிய உயர்வடிவங்களே" என்பர். இந்தக் கூற்றை மெய்ப்பித்த பெரியார்கள் நம் தமிழ்மரபிலே வாழ்ந் துள்ளனர். அவர்களுள் ஒருவரே நம் நாவலர் பெரு மான். பிறிதொருவர் அவர் காலத்திலே வாழ்ந்த இராமலிங்கராவர். அவரருளிய திருவருட்பா இன்று அவர் வரலாற்றை உணர்த்தா நிற்கின்றது. பள்ளிப் படிப்பில் ஊக்கங்கொள்ளாது துள்ளித் திரிந்த இளைஞர் தம் அண்ணல் சபாபதியாருக்கு அஞ்சி ஒளிந்து உண்டு காலம் போக்கினர். ஒரு நாள் சபாபதியார் சொற்பொழி வாற்ற நேர்ந்தது. அந்நாளில் உடல் மிகத் தளர்ந்து அப் பணியினைச் செய்ய இயலாது வருந்தினர். அதனை யறிந்த அவர் மனைவியார் இராமலிங்கரை அனுப்பலாம் என்றனர். கல்வியறிவில்லா இளைஞன் அப்பணியினை எவ்வாறு முடிக்கவல்லன் எனவும், அண்ணியார் இராமலிங்கரை அழைத்து ஒப்புமாறு செய்தனர்.

* மேடைத் தமிழ்

இராமலிங்கர் சென்று யாவரும் வியப்புக்கடலுள் ஆழு மாறு சமயச் சொற்பொழிவு நிகழ்த்தினர் என்றும் அடுத்த கிழமையும் அவரே தொடர்ந்து பேசவேண்டு மெனவும் வேண்டினர் என்ப. இதனைப் பலரும் பாராட்டியுரைக்கக் கேட்ட சபாபதியார் உவகை மீதூரப் பெற்றுத் திருவருளை வாயார வழுத்தினர். இந்த நிகழ்ச்சியும் பேச்சாளர் கடவுளர் அருளிய அற்புத வடிவங்கள் என்பதை வலியுறுத்துகின்றதன்றோ?

உலகப் பெருநாவலர்களாக விளங்கியவர்கள் கிரேக்க ரோம நாடுகளிலும், இங்கிலாந்து, இந்தியா, இலங்கை முதலிய நாடுகளிலும் பிறந்தவர்களேயாவர். கிரேக்க நாட்டிற்கொரு டெமாஸ்தனீஸ், ரோம நாட்டிற் கொரு சீசர், அமெரிக்க நாட்டிற்கொரு ஆப்பிரகாம் லிங்கன், இதாலி நாட்டிற்கொரு சிசரோ, இங்கிலாந் திற்கொரு பர்க், இந்தியாவிற்கொரு பானர்சி, இலங் கைக்கொரு நாவலர் என்று சிறப்பித்துக் கூறுவோர் வரலாற்றுப் புகழ் பெற்ற உலகப் பெருநாவலர்கள். இன்னும் எத்தனையோ நாவலர்கள் காலந்தோறும் தோன்றி முன்னோர் வழியைப் புதுமையாக்கிப் புகழ் நிறுவினர் என்பதும் அறியக்கிடக்கின்றது. பேச்சுக்கலை கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டு கட்கு முன்னரே ஒரு தனிக் கலையாகச் சிறந்து விளங் கியது. அவ்வரிய கலைவல்லவர்களாகத் திகழ்ந்த பெரு நாவலர்கள் கிரேக்க ரோமப் பெருநாடுகளில் வாழ்ந்த சாக்ரடீஸ், டெமாஸ்தனீஸ், சிசரோ என்போர். இவர் களுள் சிசரோ என்னும் உலகப் புகழ்பெற்ற நாவலர் தனக்குரித்தாகிய பேச்சுக் கலையானது வருங்காலத் தவர்களுக்கும் பயன்படவேண்டும் என்று கருதினர். மேடை நாவன்மை நூலை எழுதியுதவினர். அந்த நூலினை இடைவிடாது கற்றுப் பெருநாவலராகப் பதி னெட்டாம் நூற்றாண்டில் விளங்கியவரே இங்கிலாந்து நாட்டின் முதலமைச்சர் வில்லியம் இவார்ட்கிளாட்ஸன்

என்பார். அதே காலத்தில் எழுத்துவன்மையிலும் சொல்வன்மையிலும் இணையின்றி வாழ்ந்தவர்கள் பேரறிஞர் ஜான்ஸன் என்பாரும், பெருஞ் செல்வர் செஸ்டர் பீல்டு என்பாரும் ஆவர். இலக்கியப் பயிற்சியும், கருத்துச் செறிவும், உருக்கந்தரும் நடையும், இனிய நாவன்மையும் ஒருங்கே பெற்றவர் செஸ்டர்பீல்டு. நாற்பதாண்டுகள் தொடர்ந்து பாராளுமன்றத்தில் பெருநாவலராக விளங்கியவர். அவர்தம் அருமை மைந்தன் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த பொழுது தீட்டிய முடங்கல் குறிக்கத் தகுந்தது. அதன்கண், "மக்கள் பேச்சாளர்களையும் வானத்தே பூத்து விளங்கும் விண்மீன்களையும் உலகில் ஒப்பான அதிசயப் பொருள்களாகவும், தெய்வத்தன்மை யுடையன வாகவும் கருதுவர். இந்த எண்ணம் பல இளைஞர்களைப் பேச்சுக் கலைஞர் ஆகாவாறு தடை செய்வதேயாம். தமது பேச்சுவன்மை கடவுளர் அருளிய வரமென எந்த நல்ல பேச்சாளரும் கருதமாட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் பேச்சு ஒரு அரிய செயல் என்றே நினைக்கவில்லை. நான் ஒரு பெருநாவலன் எனப் புகழப்படுதற்கு மற்ற மக்களைவிட சொற்போக்கு நயத்திலும், இனிமையிலும் மிகக் கருத்தூன்றியதே எனக் கரவாது கூறுவேன்" என்று கூறிய பொருள் பொதிந்த மொழிகள் எவரும் சொல்வன்மைக் கலையிற் சிறந்து விளங்க முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன. நாவலர் இக்கூற்றிற்கு விதிவிலக்கானவர் என்பதைப் பார்க்குமிடத்து, அவரைப் பிறவிப் பேச்சாளர் என்று புகழ்வது பொருத்தமே என்பது தோன்றுகின்றதன்றோ ?

இம்முறையில் சிறப்பெய்திய நாவலர், ஒரு கிழமை கூடத் தவறாமல் வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலில் சொற்பொழிவு நடத்தி வந்தார். கூத்து நிகழுமிடங்

* மேடைத் தமிழ்

களிலே கூடும் பெருங்கூட்டம் போல இவரது சொல்லாற்றலைக் கேள்வியுற்ற அந்தணர்கள், புலவர்கள், செல்வர்கள், பெண்கள் முதலியோர் அனைவரும் பேரார்வத்துடன் குழுமிப் பயன் பெறுவாராயினர். ஒவ்வொரு கிழமையும் சமயச் சார்புடைய தலைப்பில் சைவ சமய மாண்பினை வலியுறுத்தி வந்தார். அவரது பேச்சிலே ஈடுபட்ட மக்களில் பலர் தங்கள்பால் கொண்டிருந்த தீய பழக்கங்களை ஒருவினர். நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து நாவலரை வாழ்த்து வாராயினர். நாவலர் பேச்சு சீர்திருத்தத்தையே அடிப்படையாகக் கொண்ட தன்னலமற்ற தன்மையில் அமைந்தது. ஆகவே, நாவலர் பேச்சினை மக்கள் பெரிதும் விரும்பினர். கோயில் வழிபாடில்லாதார், சிவதீக்கை பெருதார், திருமுறை ஓதாதார், நோன்பு மேற்கொள்ளாதார், புலால் உண்பார், மது அருந்துவார், பிறமனை நயப்பார், செய்ந்நன்றி மறந்தார், அறச்சிந்தை யில்லாதார் ஆகியோரனைவரும் தத்தம் தீ நெறி விடுத்து நன்னெறி போற்றினர். இத்தகைய சீர்திருத்தம் அவர் பேச்சால் உண்டாகியதெனில், அவர் பேச்சுக்கலையின் மாட்சியினை என்னென்பது! திருவிழா நடைபெறுவது மக்கள் பொழுது போக்கிற்கு என்று எண்ணுகின்ற தன்மையைக் கடிந்துரைத்தார். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஆன்ருேர்கள் அமைத்த அருள்நெறி என்று சுட்டிக்காட்டினுர். கேட்டோர் புதியதோர் உள்ளக் கிளர்ச்சி பெற்றனர். இதுகாறும் கருதிய கருத்திற்கு நினைந்து காலம் வீணுயினமைக்கும் வருந்தினர். தம் சமயத்தில் மனம் பற்ருதாரை மறுத்துரையாட முடியாவாறு நயம்படச் சொல்லியும் அச் சொல்லை வெல்ல முடியாவாறு அழகுபடக் கூறியும் திருத்தினர். அந்த ஒரு தனியாற்றல் நாவலருக்கு அமைந்தது போன்று வேறு எவருக்கும் அமையவில்லை என்னலாம். பிற சமயக் கருத்துக்களை யெல்லாம் நன்கு பயின்று அவற்றின் கருத்துக்களைச் சித்தாந்தக்

கொள்கைகளோடு காட்டித் தருக்க நெறி பிறழாது வாதிடும் வன்மை கண்டு வியவாதார் ஒருவரும் இலர். வள்ளுவர்தம் 'சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை வெல்லுஞ் சொல்லின்மை யறிந்து' என்ற குறட்பாவை உள்ளத்தே பதித்திருந்தார் போலும்! அவர் முப்பத்திரண்டாண்டுகளும் நிகழ்த்திய சொற் பொழிவுகள் கணக்கில. கேட்டுப் பயன்பட்டோர் தொகையோ கணித்தற் கரிது. இவ்வுலகைத் துறப் பதற்கு மூன்று திங்களுக்கு முன்னுங்கூட, சொற் பொழிவுப் பணியை மிக ஆர்வமுடன் செய்தே வந்தார் என்பதை அறிகின்றோம். இலங்கை முதலிய பகுதி களில் தம் சொல் வன்மையால் புகழ் கொண்டதே யன்றி, தமிழ் நாட்டின்கண்ணும் தம் புகழ் நிறுவினார். தென்னாடு முழுவதும் சென்று மன்னரும் மற்றை யோரும் வரவேற்றுச் சிறப்பித்து, நானிலத்தின் நாவலன் நம் நாவலர் பெருமானே என்று அகமகிழ்ந் தளித்த பட்டமே 'நாவலர்' என்பதாம். ஆறுமுகனார், நாவலராக ஆயின வரலாற்றை இவண் அறிய வேண்டுவது மிகவும் பொருத்தமே யன்றோ?

1849-ஆம் ஆண்டில் நாவலர் யாழ்ப்பாணத்தி னின்றும் சென்னைமாநகருக்குப் போந்தார். அங்குத் தங்கி வாழ்ந்து வரும் நாளில், தம்மனையிடத்து வாளா விருக்க விரும்பவில்லை. தமிழும் சமயமும் அவர்தம் உள்ளத்தே இடம் பெற்ற அரும் பொருள்களல்லவா? அவற்றைப் பிறர்க்கும் வழங்கிப் பயனுறச் செய்யும் பெருவாழ்வை மேற்கொண்டார். ஆதலால், ஒவ்வொரு வார வெள்ளியன்றும் தம் மனையகத்தே இருந்து சொற் பொழிவு நிகழ்த்தி வர முனைந்தார். சென்னைவாழ் புலவர்களும், தமிழார்வமுடைய செல்வர்களும், சமயப் பற்றுடையவர்களும் நாவலர் பேச்சைத் தாங்கள் விரும்பி வந்து கேட்டு உவகை யடைந் தனர். இவருடைய பெரும்புலமையும் சீரிய ஒழுக் கமும் அரிய செயலாற்றலும் எங்கும் பரவலா

யின. சென்னையிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் பேச்சுக்காக நாவலரை அழைத்தனர். அவரும் பணி செய்து கிடப்பதே தம் கடனெனக் கொண்டவராதலின் அழைப்பிற்கிசைந்து சொற்பெருக்காற்றி வந்தனர். இவ்வாறு தொண்டாற்ற வந்த நாவலர் சென்னையி லேயே தங்கியிருக்காமல், தென்னாடு முழுதும் செல்லும் நோக்கங் கொண்டார். சென்னையினின்றும் புறப்பட்டுச் சிதம்பரம் அடைந்தார். ஆங்குக் கோயில்கொண் டிருக்கும் கூத்தப் பெருமானை வழிபட்டுத் திருக்குடந்தை சென்றார். இவர் வருகையைக் கேள்விப்பட்ட திருக் கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர்கள் தம் திருமடத்திற்கு அழைக்கத் திருவுளங் கொண்டனர். அந் நாவலர்கோனை அழைத்துவர அம் மடத்தே பாவலர்கோனா யிலங்கிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களே தக்கவர் எனக் கருதி யுய்த்தனர். இருபெருங் கடல்கள் ஒன்றுகூடிய தன்மை போல் நாவலரும் பாவலரும் நண்ணினர். புலவர் மணிகள் பலரோர் கண்கொள்ளாக் காட்சி கிடைத்தது எனக் களிப்பெய்தினர். திருமடத் தலைவர்களும் பிறவா யாக்கைப் பெரியோனைக் கண்டவர்போல் பெருவிருப் புற்று நின்றனர். உள்ளன்போடு வரவேற்றுத் தெள்ளமுதருத்தினர். புலவர்களும் மடத்திலுள்ள பிற சான்றோர்களும் குழுமிய அவைக்கண் நாவலரை இருக்கையில் அமரச் செய்தனர். இலக்கண இலக் கியங்களில் பல ஐயங்களை எழுப்பினர். சித்தாந்த சாத்திரங்களிலும் பல கருத்துக்களைக் குறித்து வினவினர். அவர்கள் கேட்ட வினாக்களுக்கு அஞ்சாது, கேட்டார் மகிழ்ந்து தலையசைக்குமாறு சொல்லிய விடைகள் பல நூல்களின் சாரமாகவும், தருக்க நெறிக்கு மாறுபடாமலும் இருந்தன. நாவலரைப்பற்றி முன்னர்க் கேள்விப்பட்டது உண்மையே என்பதை நேரிலே கண்டனர். இத்தகு நாவன்மை மிக்க புலவரை நேரிலே அறிந்த பின்னும் எளிதிலே விடுவரோ? திரு

மடத்திலே தங்க வேண்டினர். அதற்கு இணங்கி ஆங்கே தங்கியிருந்த பொழுது பண்டார சந்நிதிகள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப் பணித்தனர். நாவலரும் இசைந்து, பேரறிஞர் பல்லோர் கூடியிருந்த அவையின் கண் சமயச் சொற்பெருக்காற்றினர். பதி, பசு, பாசம் எனப் பகர் மூன்றையும் இறையன்புடையாரும் ஏனைய பொதுமக்களும் மனமுருகிக் கண்ணீர் பொழியு மாறு கடல்மடை திறந்தாற்போல் சொன்மாரி பொழிந்தனர். கேட்டவர் அவருடைய பேச்சில் சுருங்கச் சொல்லல் முதலிய அழகும், செந்தமிழ் நடையும், இலக்கணச் செறிவும், தருக்க நெறி யும் தவழ்ந்து மிளிர்தலைக் கண்டும் கேட்டும் வியந்துருகினர். சித்திரத்தினலர்ந்த செந்தாமரையினை ஒத்து முகமலர்ந்த வண்ணமே தம்மையும் மறந்து அமைந்தனர்! இப்பிறவியில் இதுபோன்ற அரிய சொற்பொழிவை யாம் கேட்கும் பேறு பெற்றேம் இல்லை என மகிழ்ந்து திருமடத் தலைவர் புலவர் பெரு மக்களைச் சூழ்ந்து, நாவலரைச் சிறப்பிக்கக் கருதினர். யாவரும் ஒருமித்த உள்ளத்தினராய் '**நாவலர்**' என்ற அரும் பெரும் பட்டம் அளித்துப் பாராட்டினர். வாணாள் நீடிக்க வாழ்த்தினர். தமிழர் செய்த நற்றவமே என்று எண்ணி இறும்பூதெய்தினர்! அன்றுதொட்டு ஆறுமுக நாவலர் என்று பெயர் பெற்றார். **தமிழகத்தில் பிள்ளை என்றால் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களையே குறிக்கும். ஐயர் என்றால் பேரறிஞர் சாமிநாத ஐயரையே குறிக்கும். அதுபோல நாவலர் என்றால் ஆறுமுக நாவலரையே தமிழர்கள் குறித்து வழங்குவாராயினர்.** அவ்வாறாயின் அதற்குரிய சிறப் பியல்புகள் நாவலர்பால் எவ்வாறு அமைந்திருந்தன எனக் காண்போம்.

மேனாட்டு நாவலர்கள் பேச்சாளருக்கு இலக்கணம் வரையறுத்துள்ளார்கள். அதனை 'மேடைத் தமிழ்'

என்ற நூலில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது. "ஒரு பேச்சாளருக்கு நாவின் உதவி மட்டும் போதியதல்ல ; பணையில் அடித்துச் சாணை பிடித்த போர்வாள் போன்ற பழுதற்ற கூரிய வார்த்தைகளும் போதியனவல்ல ; நூலறிவு, உலகியலறிவு, பல்வேறுபட்ட மக்களின் மனவியல்பு, சித்த விகாரம் ஆகியவற்றில் நன்கு பழகி அவற்றுள் தோய்ந்து படிந்து இருத்தலே சிறந்த நாவன்மை பெற்ற நாவலரின் பண்பு" என்பதாம். இந்த இலக்கணங்களில் ஒன்றும் குறையாமல் முழுவதும் நிரம்பப் பெற்றவர் நம் நாவலர் பெருமான். தமிழ் இலக்கண இலக்கியங்களிற் கரை கண்டு, சித்தாந்தக் கடலின் ஆழத்தையுங் கண்டவர். ஆங்கிலமும் வடமொழியும் பயின்று உலகியலின் உண்மையைத் தெள்ளிதின் உணர்ந்தவர். தம் சமயமன்றி வேற்றுச் சமயங்களின் கொள்கைகளை அறிந்து சிந்தித்து உண்மை காணும் நுண்புலமுடையவர். இணருழ்த்து நாறு மலர் போலாது கற்றதை அவையின் கண் அஞ்சாது விரித்துரைக்கும் நாவன்மையுடையவர். அம்மட்டோ ! நாவன்மைக்கு இன்றியமையாத உடல் வன்மை, இனிய குரல், கருத்துக்களை நன்கு விளக்கி உருகச் செய்யும் மெய்ப்பாடுகள், இசைவன்மை முதலிய யாவும் பிறவியிலே அமைந்து விளங்கின. *"பேச்சாளர் கலையறிவும், சாத்திரப் பயிற்சியும் பெற்றிலரேல் அவர் நாவலராக மாட்டார்" என்பார் சிசரோ. "அழகாகப் பேசுதலும், விளக்கமாகச் சொல்லுதலும், நீதிநெறி நின்று மனச் சான்றுடன் வாதித்தலுமே ஒரு நாவலரின் இலக்கணமாக மதிப்பேன்" என்றார் இங்கிலாந்தின் பெருநாவலர். இவர்கள் கண்ட இலக்கணங்கள் யாவும் நாவலர்பால் நன்கு பொருந்தி விளங்கின என்பதைப் பிற்காணும் நிகழ்ச்சிகளால் அறியலாம்.

* மேடைத் தமிழ்

நாவலர், திருவாவடுதுறை யாதீனம் அடைந்து தம் சொல்வன்மை காட்டி நாவலர் என்ற பட்டம் பெற்றூரல்லவா? அன்று முதல் அவருக்கு இடைவிடாமல் அழைப்புகள் வந்துகொண்டே யிருந்தன. அவ்வாறு அழைத்தற்குக் காரணம், அவர் கையாண்ட பேச்சுக் கலையின் சிறந்த முறைகளேயாம். அக்காலத்தில் தமிழ் நாட்டில் பேசவல்லவர் மிகக் குறைந்தவர்களே. 'போர்க்களம் சென்று அஞ்சாது சமர் புரிந்து துறக்கம் போவாரினும், அஞ்சாது அவைக்கண் நின்று பேச வல்லவர் மிக அரியர்' என்ருர் தமிழ்ப் பெரியார். அவர் கூற்றுப் பொய்யாகவில்லை. அவைக்கண் பேசுவதாக ஒப்புக்கொண்டு அச்சத்தால் வாராதாருமுளர். ஒருவாறு துணிந்து அவைக்கண் ஏறி நின்று ஒன்றும் பேசாமல் வருந்துவாரும், மயங்கிச் சோர்வாரும் உளர். ஆயிரங் கருத்துக்களை அடுக்கிக் கூறவேண்டுமென்று விழைந்து ஐந்தினைக்கூடக் கூறமுடியாது அச்சத்தால் நாணி நாவெழாது போவாரும் உளர். இவ்வாறு அவைக்கண் துணிவார் அருமையை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கின்ருேம். வழக்கறிஞராக நீதிமன்றம் சென்று எதிர் வழக்காளிக்குக் கரியாக வந்து நின்றவரை விசாரிக்க முடியாமல் ஊமையராய் அமர்ந்துவிட்ட காந்தியடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சியை அறியாதார் யாரே? இத்தகைய அவையஞ்சுதல் நாவலர்பால் கனவினும் இல்லாத தொன்ரும். அவருடைய இளமைப் பருவத்தில் பேசிய கன்னிப் பேச்சே அதற்குச் சான்ருகும். நாவலரவர்கள் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துங்கால் அமர்ந்திருந்தும், உலகியல் சொற்பொழிவாற்றுங்கால் எழுந்து நின்றும் பேசுதலே வழக்கம். அவையிலே பேசுவோர் சிறந்த நாவலர் எனப் புகழ் பெறுவதற்குரிய இலக்கணங்களில் அவர்கள் தோற்றப் பொலிவும் ஒன்ருகும். வெண்ணீறு விளங்கும் மேனியும், கண்டிகை அணி செய்யும் கழுத்தும், பட்டாடைப் பொலிவும்,

பருவுடலும், புதுவண்ணமும், கால்மேல் கால் வைத்து அமரும் காட்சியும் அவையோர் யாவரையும் கவர்வனவாம். இவர்கள் பேசுங்கால் கேட்போர் வெறுப்படையா தவாறு கால் மாற்ருமல் பத்து நாழிகை வரையிலும் இனிமையும் உணர்ச்சியும் பிலிற்றுமாறு பைந்தமிழ்ப் பாங்குடன் பேசுவர். இவரைப் போன்று பிற்காலத்தே தோற்றத்தாலும், சொல்வன்மையாலும், தொண்டினுலும் தமிழகப் புகழ்பெற்ற பெரியார் அருட்டிரு ஞானியாரடிகள் ஆவர். அவர்கள், சிவிகை மீதூர்ந்து செந்தமிழ் நாட்டின் சிற்றூர்கள் தோறும் சென்று தமிழும் சமயமும் தழைத்தினி தோங்கச் சொன்மாரி பொழிந்த செல்வர் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

நம் நாட்டிலும், பிற நாடுகளிலும் நாவலர்களாகத் திகழ்ந்தோர், பேசுவதற்கு முன் தாங்கள் பேசும் பொருளை நன்கு சிந்திப்பதும், முறைப்படுத்துவதும், எழுதிப் பார்ப்பதும் உண்டு. சிலர் தம் இல்லத்திலே இருந்து கொண்டு தனக்குள் சொல்லிப் பார்ப்பதும், தனியிடங்களிலே சென்று உரக்கப் பேசிப் பார்த்தலும் வழக்கம் என்பதை வரலாற்ருல் அறிகின்ருேம். ஆனுல், நம் நாவலர் பெருமானே அவ்வாறு செய்வதில்லை. எழுதிப் பார்த்தலுமில்லை. பேசுவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன் நூல்களைப் புரட்டி ஒரு தாளில் பாடல்களின் முதலடிகளை நினைவிற்காகக் குறித்துக் கொள்வதேயாம். அதை வைத்துக் கொண்டே நெடு நேரம் பேசி மக்களை மகிழ்விப்பார் என்பதை அறிய வியப்பாயுள்ளது. நம் நாட்டிலே ஆங்கிலப் பேச்சாளர்களாகத் திகழ்ந்தவர்களில் ஒருவரான திரு. சண்முகஞ் செட்டியாரவர்கள் மேனுடுகள் சென்று மதிக்கப்பட்ட நாவலராவார். அவர், பேசுவதற்கு முன்பே சிந்தித்துப் பேச்சை முறைப்படுத்திக் கொண்டாலும், பேசி முடியும் வரை மனம் மிகுந்த துயரில் ஆழ்ந்திருக்குமாம். தாம்

பேசிய ஒரு அவையில், அதனை ஒரு கருவுற்ற தாயின் நிலைக்கும், கருவுயிர்த்து மகவைக் கண்டு இன்புறும் நிலைக்கும் ஒப்பிடலாம் என்று கூறியது ஈண்டு நினைத் தற்குரியது. இந்த நிலைமை நாவலரிடத்தே சிறிதும் இல்லாமலிருந்தது அவருக்கொரு தனிச் சிறப்பாகும். எடுத்துக்கொண்ட பொருளிலே முதற்கண் கருத்தைச் செலுத்துதல் பேசுவோர்க்குரிய இலக்கணமாகும். அன்றியும் தங்கள் பேச்சிலே தொடர்பும் தெளிவும், செறிவும் அழகும் மிளிர்தலைக் குறிக்கோளாகக் கொள்ளுவதும் இலக்கணமேயாம். ஒரு பொருளை எடுத்து விரிவுரையாற்றுங்கால் புன் முறுவல் காட்டுதலும், மெல்லிய குரலில் தொடங்கி முறையாக உயர்த்தி உள்ளக் கிளர்ச்சியோடு பேசுதலும் பேச்சாளர்க்குரிய இலக்கணங்களாம். இவை யாவும் நாவலர்பால் அமைந்திருந்தன. அவர் பேசுங்கால் புன்முறுவல் காட்டுவதை அவையோர் பன்முறையும் சொல்லி மகிழ்வதுண்டு. வெறுத்த முகத்துடன் அவைக்கண் புகுவோர் மக்கள் அன்பையும் வர வேற்பையும் பெறமாட்டார்கள் என்னும் உளநூற் கொள்கையை உணர்ந்தார் போலும்!

ஒரு முறை, சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியா சாலை என்ற கல்வி நிலயத்தின் சார்பாக ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டம் சிவாகமத்தைப் பழித் துரைத்த சிதம்பராலய பூசகர்களைத் தெருட்டு தற்காம். வைதீக நெறி சிவாலயங்களில் கடைப் பிடிப்பது முறைகேடானது என்றும், சிவாகம நெறியே சிவன் கோயில்களில் கடைப்பிடித்தல் வேண்டும் என்றும் வலியுறுத்திச் சொற்பொழி வாற்றினர். சிவதீக்கை பெறாத பூசகர்களிடம் நீறு பெறுதலோ, விழா முதலிய நடத்த அழைத்தலோ, அவர்களை வணங்குதலோ சிவநெறி பற்றி ஒழுகு வார்க்குப் பெரும் பாவமாகும் என்று சாத்திரச் சான்று

காட்டி நயம்பட உரைத்தார். அவர் பேச்சு நீர்வீழ்ச்சி போன்று தடையில்லாமல் சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்தியது. மாற்ருரின் கருத்துக்களைக் காரணங் காட்டித் தருக்க முறையில் சம்மட்டி கொண்டு அறைந்தாற் போன்று அழுத்தந் திருத்தமாகப் பேசினுர். அவர்களுக்கு ஒவ்வாத கருத்துக்களை மறுக்கின்ற போதும் திறமையும் அழகும் மிளிரப் பேசினுர். கேட்பவர் அவற்றில் மயங்கி, எதிர்த்துப் பேச ஆற்றலில்லாது போயினர். ஈண்டு உலகப் பெருங் கவிஞராகிய செகசிற்பியர், ரோமப் பெருவீரனுன சீசரின் நாடகத்தில் கற்பித்துள்ள பெருநாவலன் அந்தோணியின் நாவன்மையை நினைக்காமல் இருக்க முடியாது. சீசர் தன் உயிர் நண்பர் புரூட்டசால் குத்துண்டு பிணமாகிக் கிடந்தான். அந்த இடத்திலே நிகழ்த்திய இரங்கற் சொற்பொழிவு ஒரு நாவலன் தன் பேச்சுக்கலையால் எத்துணை உணர்ச்சியை உண்டு பண்ணமுடியும் என்பதைக் காட்டுகிறது. அந்தப் பேச்சுக்கலை ரோம் நாட்டு மக்களனைவரின் மனத்தை மாற்றி, உணர்ச்சி உருவாகிக் கிளர்ந்தெழுந்த தன்மையைக் கவிஞன் அழகுபடக் காட்டியிருப்பதைக் காண்கின்ருேம். நம் நாவலர் சிதம்பரம் கல்வி நிலையத்திலே நிகழ்த்திய பேச்சும் வைதீக நெறியே சிறந்ததெனக் கருதிய மாற்ருரைத் தன் கருத்துக்களுக்கு அடிபணியச் செய்து, யாவரையும் சிவ தீக்கை பெறுமாறு செய்தது என்பதை இவண் ஒப்பு நோக்க வேண்டும்.

நாவலராக விரும்புவோர்க்கு நினைவாற்றலும் மிக இன்றியமையாத இலக்கணமாம். நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியைக் கடைப்பிடிப்பர். அடிமை நீக்ரோ மரபிலே தோன்றி, அமெரிக்க நாட்டின் மக்கள் தலைவராய்ப் பல்லாண்டுகள் விளங்கிய பெருஞ் சொற்

கொண்டல் ஆப்பிரகாம் லிங்கன் ஒரு குறிப்பும் வைத்துக் கொள்ளாமல், மணிக்கணக்கில மாரிபோல் பொழியும் நினைவுத்திறனுடையார். அது போன்றே நம் தமிழகத்தில் ஆங்கிலத்தில் பேசவல்ல வெள்ளி நாப்புலவர் சாத்திரியார் அழகும் உணர்ச்சியும் பொருந்தப் பேசவல்லவர். இன்றும் நம்மிடையே வாழும் சர். இராமசாமி முதலியாரும் அத்தகையோரே. அவருடைய ஜெனிவாப் பேச்சை உலகமே வியந்ததை நாம் கண்கூடாகக் கண்டோமல்லவா? அவருக்கு ஏவல் செய்யச் சொற்கள் காத்து நின்றன எனில் மிகையன்று. நாவலரையும் மேலே சொல்லிய பேரறிஞர் வரிசையில் வைத்து மதிக்கலாம். தமிழ் வளர்த்த சேது சமஸ்தானத்திலே, பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆட்சி புரிந்தோர் தமிழ்ப் புரவலர் பொன்னுச்சாமித் தேவர் ஆவார். தம்பால் போந்த புலவர்களை வறிதே போக்காத வள்ளல். ஒரு முறை, தேவரவர்கள் நாவலர் பெருமானை நேரிலே சென்று கண்டு தம் அரசவைக்கு அழைத்துச் சொற்பெருக்காற்றச் செய்தனர். அன்று புலமை முற்றிய புலவர் பலர் குழுமியிருந்தனர். தாயுமான அடிகளாரின் அருண்மொழியாம், 'சைவ சமயமே சமயம்' என்பதையே பொருளாகக் கொண்டு பேசிய பேச்சிலே மயங்காதாரிலர். சொற்கள் இவர் ஏவல்கேட்டு நின்றன. வந்த சொல்லோ கருததோ மீட்டும் வரவில்லை. பாவலரும் பாமரரும் புரிந்துகொள்ளும் தெளிவுடைமை இருந்தது. இலக்கண வரம்பு பெருகிய இன்றமிழ் நடை அமைந்தது. உள்ளொளி கடவாத அவர் உடலில் தெய்வீக ஒளி பிறங்கிற்று. தேவர் அவரைத் தெய்வமாகவே கண்டார் போலும்!

தேவரவர்கள் வியந்து செய்த விருதுகளைப் பெற்றுக் கொண்டு பாண்டிமாநகர் ஏகினர். மதுரைத் திருஞான சம்பந்தர் மடாலய ஆதீனத் தலைவர் அங்கயற்கண்ணியின் கோவில் மண்டபத்தே நாவலரைச் சொற்பொழி

வாற்றுதற்கு ஆவன செய்திருந்தார். அதற்கு இணங்கி அரியதோர் சமயச் சொற்பெருக் காற்றினார். அதனைக் கேட்டின்புற்ற ஆதீனத் தலைவர் தம் மெய்க்கண் அணிந் திருந்த அணிகலனை நாவலர்க்கு அணிவித்து மகிழ்ந் தார். அன்றியும், "இவைகளெல்லாம் எங்கட்கு எதற்கு? தங்களுக்கே இவை யுரியன" என்று மெய்ம் மறந்து கூறிநின்றனர். தம் பணிவுடைமை காட்டு முறையில் அவர் அணிவித்த அணிகலன்களை ஆதீனத் தலைவருக்கே திரும்பப் படைத்தனர் என்ப. சொற் பொழிவு முடிந்ததும் ஊர்வலமாக அழைத்துச் சிறப்புச் செய்தனர். தம் திருமடத்தே தங்கச் செய்து அன்புடன் ஓம்பினர். அதன்பின், தருமபுரமடத்தார் விருப்பிற் கிசைந்து ஆங்குச் சென்று பெரிய புராணச் செய்யுள் ஒன்றிற்குப் பல்வேறு பொருள்களைப் பொருந்துமாறு நயம்படக் கூறிக் களிப்பித்தனர். அந்தச் செய்யுள் சித்தாந்தக் கொள்கைகளை உள்ளடக்கிச் சேக்கிழாரின் ஆழ்ந்தகன்ற நுண்மையை அறிவிப்பதாகும். இற்றை நாளிலும் அச் செய்யுளின் அருமையை அறிந்து புராண விரிவுரை செய்வோர் வெவ்வேறு உரைகளைக் கூறி வருவதைக் காண்கின்றோம். எனினும், இதற்கு நாவலரே மூலகாரணம் என்பதை நினைக்கும்பொழுது அவரைப் புகழாமலிருக்க முடியுமோ? அச் செய்யுளை இவண் குறிப்பாம்:

"ஐந்துபேர் அறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியுள் மலர்ந்தார்."

இவ் வருமைச் செய்யுட்கே தருமபுர ஆதீனத் தலைவராகிய மாசிலாமணி தேசிகர், குமரகுருபர அடிக ளாரைப் பொருளும் நயமும் கூறுமாறு வினவினரென் றும், அவர் கூற முனைந்தபோது நா தழுதழுத்துச் சொல் தடைபட்டதாகவும் கூறுப. இத்துணைச் சிறப்புடைய சேக்கிழார் பாடற்கு, நாவலர் பல்லோர்வியக்க நல்லுரை பல விரித்துக் கூறினரெனில் அவர்தம் நாவன்மையை என்னென்பது! அவரைப் போற்றிப் புகழாதார் எவரேனும் இருப்பரோ?

அதன்பின், திருவண்ணாமலை யாதீனத்துக் குன்றக் குடிப் பண்டார சந்நிதிகள் நாவலரைத் தம்மடத்துக் கெழுந்தருள அவாவினர். தருமபுரத்தினின்றும் வந்த போது அவரை அழைத்துப்பேசுமாறு செய்தனர். அவர் பேச்சைக் கேட்டாரனைவரும் கலைச்சுவையருந்தி மெய்ம் மறந்தனர். சிலர் எழுந்து மகிழ்ச்சியால் துள்ளிவந்து திருவடிக்கண் வீழ்ந்து வணங்கினர். அவர் பேசிமுடிந்து செல்லும்போது அவரைச் சூழ்ந்துகொண்டு பார்த் தனர். இற்றை நாளிலும் சிறந்த பேச்சாளர் பேசி முடிந்தபின், அவர் அண்மையிற் சென்று காணுதற்கு அவரைச் சூழ்தலும், கையொப்பம் பெறுதலும் வழக்க மாக இருக்கின்றது. திருவண்ணாமலை யாதீனத் தலைவர் நாவலரின் நாவன்மையையும், புலமைத் திறத்தையும், சிவப்பற்றையும் கண்டு சிவிகையிலமரச் செய்து திருவீதி வலம் வரச் செய்தனர். பிறகு தொண்டை நாட்டுக் காஞ்சி மாநகர் சென்று கோயிலில் தம் சமயச் சொற்பொழிவினை ஆற்றிய பொழுதும் கேட்டார் யாவரும் இன்பந் துய்த்தனர். எழுத்து வன்மையிலே நாவலருக்கு இணையானவரில்லை என்று அறிந்திருந்த அம் மக்கள் அவர் நாவன்மையிலும் நிகரில்லாதவர் என்பதைக் கண்டு பெருவியப்புற்றார்கள். 'எழுத்துக் கலையிலே சிறந்தோர் பேச்சுக் கலையிலே வல்லவராதல் இல்லை' என்பது உலகமொழி. அதற்குச் சான்றாக

அழகு தவழும் நடையிலே உணர்ச்சி மிக எழுதும் ஆங்கில எழுத்தாளர் கோல்டுசுமித் என்பவரைப் பேரறிஞர் சாமுவேல் ஜான்சன் எடுத்துக் கூறியுள்ளார். அந்த விதிக்குக் கட்டுப்படாது எழுத்து, சொல் ஆகிய இருவகைக் கலைகளிலும் சிறந்தவர்கள் உலகத்து அரியர். பிற்காலத்திலே தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெருங்கடல் மறைமலையடிகளாரை ஈண்டுக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகுமன்றோ? அவர்தம் எழுத்தும் பேச்சும் இனிய தனி நடையாக மிளிர்ந்தன என்பதை அறிஞர் உணர்வர். ஆகவே, நாவலர் இருவகைக் கலையிலும் சிறந்த வித்தகத் தன்மையுடையார் என்பது போதரும்.

நாவன்மை யுடையார்க் குரிய இலக்கணங்களுள் சுவைபடப் பேசும் ஆற்றலும் ஒன்ருகும். சிலர் பேச்சிலே நகைச்சுவை யொன்றே அமைந்து விளங்கும். சிலருக்கு வீரச்சுவையும் அமைவதை அவர்கள் பேச்சுக்களில் காணலாம். ஆனல் நாவலருடைய பேச்சில் ஒன்பான் சுவைகளும் அமைந்து விளங்கின என்பர். அதற்குக் காரணம், அவருடைய குரல் இயற்கையாகவே இனிமை வாய்ந்திருந்தது. இனிமை யான குரல் ஒருவருக்கு அமைவதே இப்பிறப்பின் பேறு என்று சொல்லுவர். அன்றியும், பண்ணும், பண்ணின் திறங்களும் நன்கு அறிந்து இசைக் கலையிலும் அறிவுடையராக இருந்ததும் காரணமாம். அவர்தம் பேச்சிலே சிலேடையும், அடுக்கிய சொற்களும் சிறந்த அழகுடன் சுவைபட வரும். அவருக்கு நிகண்டிலுள்ள நிகரிலாப் புலமையை அவை வெளிப் படுத்தும். பேச்சில் கூறியது கூருமல் பல்வேறு சொற்களைப் பயன்படுத்த வேண்டுமாயின், தமிழகராதியை ஊன்றிப் படித்து நினைவிற் பதிக்க வேண்டும். மேனுட்டு நாவலர்கள் ஆங்கிலப் பேச்சிற்கு இரண்டாயிரம் சொற்களே போதியதாகும் எனக் கணக்கிட்டுள்ளனர். தத்துவக் கவிதைகள் யாத்த

வித்தகக் கவிஞர் மில்டன், தாம் ஆக்கியளித்த இலக்கியங்களில் எண்ணாயிரம் சொற்களையே பயன்படுத்தியுள்ளாரெனவும், கவியரசராகிய செகசிற்பியர் தாம் இயற்றிய முப்பத்தேழு நாடகங்களிலும் பதினையாயிரம் சொற்களையே கொண்டுள்ளாரெனவும் அறுதியிட்டுள்ளனர். ஒவ்வொரு கவிஞரும், பேச்சாளரும் எத்தனை சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்று காணும் அவா ஆங்கில மக்களிடத்திலே நிலவியிருந்தது. நம் நாட்டில் அத்தகைய அவா இதுகாறும் எழவில்லை. எனினும், நாவலர் பயன்படுத்திய சொற்கள் தமிழ் எழுத்தாளர், பேச்சாளர் எவரினும் மிகுதியாகவே இருக்கும் என்று துணியலாம். நாவலர் கற்ற நூலளவும், நினைவுத் திறனும் அவரை 'நடை அகராதி' என்று பாராட்டத் துணை நின்றன. அவர் பேசிய பேச்செல்லாம் தெவிட்டா அமுதமயமாகிக் கேட்டாரைத் தம் வயமாக்கின என்பதை முன்னர் அறிந்தோமல்லவா? அதற்குத் தலையாய காரணம் பாடல்களைப் பல்வேறு இசையிலமைத்து இனிய குரலில் பாடி விளங்கக் கூறுதலேயாம். இன்பச் சுவை ததும்பும் புலமை முற்றிய பேச்சாலன்றோ சேது சமத்தானத்திலும், மதுரை யாதீனத்திலும், குன்றக்குடித் திருமடத்திலும் பெருஞ்சிறப்புச் செய்து பாராட்டினர். நாவலர் தம் பேச்சை முடிக்கின்ற காலத்து முத்திரையிட்டது போல் ஒரு பொருத்தமான பாடலை உருக்கந்தரு முறையில் கூறுதலும் வழக்கம். தாம் வற்புறுத்த எண்ணிய கருத்தைப் பல்வேறு உருவில் கேட்போர் மனத்தில் ஆழப் பதியுமாறு பேசி முடிப்பதுமுண்டு. அக்கருத்தை மனத்தே கொண்டு செல்லுபவர் மகிழ்ச்சியுடன் பயனும் எய்துவர். இவ்வாறு நாவலர் என்ற பட்டத்திற்குரிய இலக்கணங்களைச் சிறிதும் குறையாது கொண்டிருந்தமை கண்டே, இப்பட்டம் அளித்துப் பாராட்டினர் என்பது உண்மையாகின்றதல்லவா?

தென்னாடு சென்று ஒண்புகழ் நிறுவிய நாவலர் தாம் பிறந்த யாழ்ப்பாணம் போந்தனர். நாவலர் என்ற பட்டம் பெற்றது குறித்து யாழ்ப்பாணத் தமிழர்கள் அனைவரும் எய்திய மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. நாவலரை நம்மவராகப் பெற்ற நம்மினும் பேறு பெற்றுருளரோ எனப் பெருமிதம் கொண்டனர். யாழ்ப்பாணத்தின் பல்லிடங்களிலும் சொற்பொழிவின் பொருட்டு அழைப்புகள் வந்து குவிந்தன. அவற்றிற்கெல்லாம் இசைந்து கைம்மாறு கருதாது பணியாற்றினர். கோவில் திருப்பணிகளிலும், பொதுப்பணிகளிலும் கருத்தைச் செலுத்திப் பல நன்மைகள் செய்து வந்தார். இன்றும் சிறப்புற்று விளங்கும் திருக்கேதீச்சுரம் கோவிலும், கீரிமலைச் சிவன் கோவிலும், நல்லூர்க் கந்தசாமி கோவிலும் நாவலரது இடைவிடா முயற்சியின் காரணமாகவே அழியாதவாறும், அரசினர் வசப்படாதவாறும் ஆகம முறையில் அமைக்கப்பட்டு விளங்குகின்றன. அவற்றுள் கந்தசாமி கோவில் என்பது நாவலர் பிறந்த நல்லூரிலே உள்ளது. இலங்கையை ஆட்சி புரிந்த அரசன் சிங்கை யாரியன் என்பவன். அவனிடம் அமைச்சனாக விளங்கிய புவனேகவாகு இறைவன்பால் மிகுந்த பக்தியுடையவன். ஆகம முறைப்படி கோவில் எழுப்பி வழிபாடாற்றி வந்தான். அவனுக்குப்பின் வந்த போர்த்துக்கீசியர் ஆட்சியால் அக்கோயில் அழிவெய்தியது. அவ்விடத்தில் ஆலந்தியர் ஆட்சிக் காலத்தில் இரகுநாத மாப்பாணர் என்பார் சிறு கோவில் அமைத்து இறைவன் அறிகுறியின் பொருட்டு வேல் ஒன்றை நாட்டி வழிபட்டு வந்தனர். கோவில், விதிப்படி அமையாமலும், மூலமூர்த்தி சிலையால் அமைக்கப்படாமலும் இருப்பதை நாவலர் கண்டார். அதனை ஊர்மக்கள் அறிய வேண்டுமென்ற கருத்தால் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலிலே தாம் ஆற்றிய சொற்பொழிவில் எடுத்துரைத்தார். அக்காலத்து இருந்த கோவில அதிகாரிகள் அறியாமையால்

நகைத்தனர். ஆதலால், நாவலர் ஆகம விதிப்படி அமையாத கோவிலுக்குச் செல்லுவதில்லை என உறுதி பூண்டார்! சில ஆண்டுகள் கழிந்தபின் அக் கோவில் அதிகாரியாக இருந்தவர் கந்தைய மாப்பாணர். நாவலர்க்கு நாடுமுழுதும் பரவிய புகழையும் தமிழ்ப்புலமையையும், சமய ஆர்வத்தையும் கண்டார். அவர்பால் மிக்க அன்பு வளர்தலையும் கண்டார். தாம் மேற்பார்க்கும் கந்தசாமி கோவிலில் சொற்பொழிவு நிகழ்த்த நாவலரைக் கேட்டுக் கொண்டார். அவர் நாவலர் விருப்பினை நிறைவேற்றுவதாக உறுதியளித்தபின், கோவிலில் சென்று சொற்பெருக்காற்றினர். அன்று 'தெய்வயானை அம்மையார் திருமணம்'பற்றிப் பேசினர். அப் பேச்சிலே தமிழ் மணமும் சமயவுணர்வும் ஒருங்கே இயைந்திருந்தது. கோவிலைச் சீர்திருத்தும் வழிகளையும் பொருந்தக் கூறினர். அன்றைய சொற்பொழிவின் ஆழ்ந்த கருத்தைக் கூர்ந்து கேட்ட கோவிலதிகாரி மீண்டும் ஒரு முறை பேசுமாறு ஏற்பாடு செய்தார். அதன்படி 1873-ஆம் ஆண்டிலே இறைவன் திருமுன்னர் பேசிய பேச்சு குறிப்பிடத் தக்கதாகும். கந்தசாமி கோவிலை ஆகம விதிப்படி கட்ட வேண்டுமென்ற நோக்கத்தையும், தமிழ்க்கடவுளாம் முருகப்பெருமானின் இலக்கணங்களையும் சான்று காட்டிக் கூறியதைக் கேட்ட ஊரார் உடனே மனம் திருந்தினர். நாவலரைப் பற்றித் தவருகக் கருதிய சிலரும் உள்ளம் நொந்து' தம் தவற்றினை யுணர்ந்தனர். அவர் பேசிய அதே கூட்டத்தில் கோவிலைக் கட்டுதற்கு ஆருயிரம் தொகை கையொப்ப வாயிலாகச் சேர்ந்ததும், மூவாயிரத்திற்குக் கோவில் கட்டப் பயன்படும் கற்களைப் பெற நேர்ந்ததும் நாவலரின் நாவன்மையின் ஆற்றலை உணர்த்துவன வன்றே? கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ப் பேச வல்லார்க்கு எவ்வித அரிய செயலும் எளிதே என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ?

கோவிலும் கட்டி முடித்து விழாவும் சிறப்புற நடத்திக் காட்டினார் என்பதும் அறியற்பாலதாம்.

நாவலர் தமிழ், சைவம் ஆகிய இரண்டு துறைகளில் மட்டும் தம் சொல்வன்மையால் வெற்றி பெற்றார் என்பதல்ல. அரசியல் வாழ்விலும் புகுந்து தம் பேச்சுக் கலையால் அரிய வெற்றி தேடித் தந்துள்ளார் என்பது குறிக்கத் தகுந்தது. மொழியில் கருத்தூன்றுவோர் சமயத்தில் செல்லார். அவ்விரண்டிலும் செல்வோர் அரசியலில் புகார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையிலே படிந்து பிறவற்றை ஒதுக்கிவிடுவர். ஆனால், நாவலரோ, மொழியும் சமயமும் வளர்தற்கு அரசியல் இன்றியமையாதது என்று கருதினார் போலும்! அவர் காலத்திலே ஒரு முறை இலங்கைச் சட்டசபைத் தேர்தல் நடைபெறறது. யாழ்ப்பாணத்தில் பெரும்பாலும் வாழ்பவர் தமிழர்களேயாயினும், தமிழரல்லாத பிறரே வெற்றி பெறும் நிலைமை நீண்டகாலமாக இருந்து வந்தது. அந்த நிலைமை மேலும் நீடிக்குமானால் மொழியோ சமயமோ தம் உரிமையுடன் வாழ முடியாது என்று எண்ணினார் நம் நாவலர். அப்பொழுது அந்தப் பகுதியில் தேர்தலுககு நின்றவர் இராமநாத பிள்ளை என்ற தமிழராவர். அவரை எதிர்த்து வெற்றி பெறும் நோக்குடன் மிக முயன்றவர் பிரிட்டோ என்பவர் ஆவர். அக்கால நிலையில் தமிழருள் பெரும்பாலோர் பின்னவரையே தேர்தலில் வெற்றி பெறப் பெரு முயற்சி செய்தனர். அந்த நிலையைக் கண்ட நாவலர் மிக நாணமுற்றுத் தேர்தலில இறங்கி வேலை செய்தேயாக வேணடும் என்ற முடிவிற்கு வந்தார். தனித்தனியாகத் தமிழர் சிலரைக் கண்டு தம் வயப்படுத்தினார். அவர்களையும் சேர்த்துக் கொணடு ஊரெங்கும் சென்று சட்ட சபைககுச் செல்லும் தகுதியுடையார் இராமநாத பிள்ளையே என்பதைக் கூட்டங்கள் கூட்டிப் பொது மக்களிடை

கூறி வந்தார். அரசியல் பேச்சு அக்கால நிலையில் எவ்வாறு இருந்திருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்! தமிழர் பெரும்பான்மையாக வாழுகின்ற ஒரு பகுதியில் ஒரு தமிழர் சட்டசபை உறுப்பினராக வர வேண்டாம் என்று கருதுகின்ற மக்களை எவ்வாறு திருப்ப முடியும்? நாவலர் உள்ளத்து உரன் படைத்தவரல்லவா? தேர்தல் பேச்சுக்காக அமைக்கப்பட்ட மேடைகளிலே தோன்றுவார். போட்டியிடும் இருவருடைய குணவியல்புகளை ஒப்பிட்டுக் காட்டித் தமிழ் மக்களின் பழம் பெருமையையும் கடமையையும் கூறப் புகுவார். அவர் பேச்சிலே கருத்துப் பொறிகள் சிதறும். சுடுசுரம் போன்று சொற்கள் விரைந்து வெளிப்படும். ஓசை உயர்ந்தும் தாழ்ந்தும் அடித்த பந்து போல் குதித்துக் குதித்து வரும். குருதி கொந்தளிக்கும். நரம்புகள் முறுக்கேறும். கூட்டத்திலே குண்டூசி விழும் ஓசையும் கேட்குமாறு அமைதி நிலவும். கேட்போர் தம்மை மறந்து கர முழக்கம் செய்வர். உணர்ச்சி உருவாகக் காண்பர். நாவலரும் ஒரு தனித் தோற்றம் பெறுவார். 'வாக்குரிமை இராமநாதருக்கே' என்ற ஒலி வானை முட்ட மேடை மீது அமர்வர். தேர்தலில் பேச்சு வன்மையால் போராடி இராமநாதருக்கே வெற்றி தேடித் தந்தார் என்பதைக் கேட்க எவரும் வியப்ப ரன்றோ? அரசியல் பேச்சிலும் அவரை வெல்லுபவர் இல்லை என்றாயிற்று. விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் என்று வள்ளுவர் கூறிய மொழியும் இவர்க்கே தகும்.

இனி, இவருடைய வாழ்க்கையின் முடிவாக இலங்கும் இறுதிச் சொற்பொழிவு வரலாற்றிலே குறிக்கத் தகுந்த பெருமையுடையது. உலகப்பெரு நாவலர்களிலே ஆப்பிரகாம் லிங்கன் ஆற்றிய கெட்டிஸ்பர்க் பேச்சும், கிளாட்ஸன் ஆற்றிய கிளாஸ்கோ பேச்சும், வேதாந்த விளக்கு

விவேகானந்தர் ஆற்றிய சிகாகோ பேச்சும் வரலாற்றிலே இடம் பெற்று இன்றும் பாராட்டப் படுதல் போல நாவலர், யாழ்ப்பாணச் சைவப் பிரகாச வித்தியாசாலையிலே ஆற்றிய இறுதிச் சொற்பொழிவும் பாராட்டிப் புகழத் தக்கதாம். 1879-ஆம் ஆண்டிலே நடைபெற்ற சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழாவிலே நிகழ்த்திய சொற்பொழிவே அது. அன்று பேசுமாறு எடுத்துக்கொண்ட தேவாரப்பாடல் சைவ மரபினர் யாவரும் ஓதி வழிபடும் பெருமையுடையது. சேர வேந்தராகிய சேரமான் பெருமாள், நம்பியாரூரர் பால் தணியாக்காதல் கொண்ட உழுவலன்பர். அவருடைய நகராகிய திருவஞ்சைக்களத்திற்கு ஆரூரரை அழைத்துச் சிறப்பித்தனர். இருவரும் கெழுதகை நண்பினராய் அங்குத் தங்கியிருந்த பொழுது சுந்தரமூர்த்திகட்குத் திருவாரூர் இறைவன் மீது நினைவு தோன்றியது. உடனே சென்று காண வேண்டுமென்னும் அவா மிகுந்தது. அப்பொழுது 'இறைவன் தமக்குச் செய்த நன்றியெல்லாம் கூறி ஆரூரானை மறக்கலுமாமே' என ஒவ்வொரு பாடலின் இறுதிதோறும் அமைத்துத் தம் ஆற்றாமையைப் புலப்படுத்தினர். அப்பதிகத்தின் முதற்கண் அமைந்துள்ள,

"பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்

பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை

இன்ன தன்மையன் என்றறி வொண்ணு
எம்மானை எளிவந்த பிரானை

அன்னம் வைகும் வயற்பழனத்து
அணிஆரூரானை மறக்கலு மாமே"

என்ற பாடலே நாவலர் அன்றைய பேச்சிற்குரிய பொருளாகக் கொண்டதாம். குருபூசை நாளில் குழுமிய

கூட்டமோ அளவில்லாதது. நம்பியாரூரரை, 'நாவலர் பெருமான்' என்றே கனிந்த மொழியாற் கூறுவதும் எழுதுவதும் நம் நாவலர் வழக்கம். அத்தகைய நாவலர் பெருமானைக் குறித்துப் பேசினாரென்றால், அப்பேச்சின் வன்மையைச் செப்புதல் ஒல்லுமோ? அவர் பேச்சிலே சமய உணர்ச்சி ஊற்றெனப் பெருகி வழிந்தது. பேச்சிலே புதிய ஓசை பிறந்தது. மனத்திலே பொங்கிய எழுச்சி அவர் உருவத்திலே ஒரு புரட்சியைத் தோற்றுவித்தது. உள்ளம் உருக்கும் இசை செந்தமிழ்ப் பாவோடு பரந்தது. பேசுகின்ற போதே தம்மை மறந்தார். அவருள்ளம் எங்கோ சென்று கலந்து ஒளி வீசியது போலும்! தமிழின் பெருமானைப் பற்றிப் பேசியவர் தமிழின் பெருமானாகி விட்டார்! அன்றைய பேச்சின் இறுதியில் உரைத்த பொன்மொழிகளை நோக்குங்கள்:

"யான் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டாண்டுகள் உங்களுக்குச் சைவ சமயத்து உண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப்போம் என்று பாதிரிமார்கள் சொல்லு கின்றார்கள். யான் உயிருள்ள போதே உங்களுக்காக ஒரு சைவப் பிரச்சாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப் போன்று படித்தவர்களும், ஒழுக்க முடையவர்களும் பலர் வருவார்கள். ஆனால், உங்களுடைய பழிப்புரையைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதித்த என்னைப் போல ஒருவரும் வாரார். இதுவே என்னுடைய கடைசிப் பேச்சு" என்று நைந்த உள்ளத்துடன் கூறிய சொற்கள் கேட்டோர் செவிகளைத் துளைத்து, மனத்தினைக் கலக்கி, மூளையை முட்டி, முகத்தினைக் கவிழ்த்துக் கண்ணீர்க் கடலிலே படியுமாறு செய்தன. அன்றைய பேச்சைக் கேட்டு அழாதார் ஒருவர் கூட இல்லை.

மறுநாள் நாவலரை அவர்தம் நண்பர்கள் கேட்ட போது, அதுபற்றித் தமக்கு ஒன்றுந் தெரியாது எனப் பகர்ந்தனராம். ஈண்டு ஆங்கிலப் பெரு நாவலரா யிலங்கிய எட்மண்டு பர்க் என்பார் பாராளுமன்றப் பெருமக்கள் சபையிலே வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது குற்றஞ் சாட்டிப் பேசிய வீரவுரையினைக் கேட்டவர்கள் கண்ணீர் சொரிந்ததும், பெண்பாலார் மூர்ச்சையற்றுக் கிடந்ததும் சிந்திக்கற்பாலதாம். இத்தகைய பேச்சுத் திறன் படைத்த உலகப் பெரு நாவலர் வரிசையில் வைத்துப் போற்றத்தக்கவர் நம் நாவலரன்றோ?

இவ்வளவு பெருமை வாய்ந்த நாவலர் மறைவு கேட்டுத் துயருற்ற பெரியார் ஒருவர் 'பாவாணர் மெச்சச் செயும் பிரசங்கமும் பார்த்தினி நான் நாவார வாழ்த்திடும் நாளுமுண்டோ நல்லை நாவலனே' என்று அவர் சொல்வன்மையை நினைந்து ஏக்கமுற்றார். இலங்கைச் சட்ட சபையினர் இந்து சமய சீர்திருத்த வீரரை இழந்தோம் என வருந்தினர். கங்கையைப் போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊற்றெடுக்குமாறு செய்த வீரத்தமிழ்ப் பேச்சைக் கேட்ட மக்கள் செவிகள் மறக்க முடியாது தவித்தன. தெருக்களிலும் திண்ணை களிலும், கோவில்களிலும் பள்ளிகளிலும், மடங் களிலும் மேடைகளிலும் அவர் பேசிய தமிழ், சமய, அரசியல் பேச்சுக்களைக் கேட்டு இன்புற்றோர் இனைந் துருகின்றனர். 'அவருடைய தமிழ்ப் பேச்சின் வனப்பிலே கோவில்களில் உள்ள கற்சிலைகளுங்கூட மயங்கித்தான் அசைவற்று நிற்கின்றனவோ? அவற்றிற்குச் சொல்லுந் திறமையிருந்தால் இன்றைக் கும் அவர் பேச்சைக் கேட்கலாமே' என்று எண்ணி எண்ணிக் கரைவோர் கணக்கற்றோர். **நாவலர் பிறந்ததனால் யாழ்ப்பாணத்திற்கும், வாழ்ந்ததனால் தமிழகத்திற்கும் இமயமன்ன புகழைப் பெற்றுத் தந்தவராகி விட்டார். அவர் இறப்பு தமிழர்க்குப்**

பேரிழப்பு என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அவர் பேச்சு மீட்டும் நம்மால் கேட்டு இன்பந்துய்க்க முடியாத அரிய பொருளாய்ப் பழங்கதையாய்க் கற்பனையாய்க் கனவாய்ப் போயிற்றே என நினைக்கின்ற பொழுது வருத்தம் அளவிறந்து செல்லுகின்றது. தமிழில் சுருக்கெழுத்தில்லாப் பெருங்குறையும் நாவலர் தம் பேச்சுக்கலையைத் துய்க்க முடியாததற்குக் காரணம் என்பதைத் தமிழர்கள் இனியேனும் உணர்வார்களாக.

7. குணக் கலைக் குன்று

பண்டைப் பெருமக்கள் பண்புடன் வாழ்தலே வாழ்க்கை என்று கண்டிருந்தனர். தாமும் வாழ்ந்து பின் வருவார்க்கும் வழிகாட்டிச் சென்றனர். அவர்கள் உள்ளம் வான் போல் பரந்து விரிந்திருந்தது. தங்கள் வாழ்க்கையில் கண்டறியும் ஒவ்வொரு பொருளும் உயிர்க் கூட்டமனைத்திற்கும் உதவ வேண்டும் என்னும் கருத்துடன் வாழ்ந்தனர் என்பதை இலக்கியங்கள் அறிவிக்கின்றன. உலக முழுதும் ஒன்றே என்ற உயர்ந்த உள்ளம் தமிழ்ச் சான்றோரிடத்தேதான் முதன் முதலில் பிறந்து நிலவியது என்று சொல்லலாம். 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்று கூறுகின்றான் பாண்டியன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி. 'உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டு' என்றார் ஒல்காப் புகழ்த் தொல் காப்பியனார். 'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என முதற் குறளிலே உலகைக் குறித்தார் வள்ளுவப் பெருந்தகையார். 'உலக முவப்ப வலனேர்பு திரிதரு' எனத் தொடங்கினார் திரு முருகாற்றுப்படை தந்த பெரும் புலவர் நக்கீரனார். 'உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்' எனப் பாடினார் சிவனடி மறவாச் சேக்கிழார். 'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்றெடுத்தார் உம்பரும் புகழ் கம்ப நாடர். இவை யாவும் நம் தமிழ்ச் சான்றோரின் பரந்த உள்ளப் பண்பைக் காட்டுகின்றனவல்லவா? உலகம் வாழ வேண்டும் என்று நினைக்கும் உள்ளம் யாவர்க்கும் எளிதிலே வந்து விடுவதல்ல. இந்த உலகத்தின் வரலாற்றை நன்கு உணர்ந்தவரே அந்த உள்ளப் பண்பை விரைவிலே அடைவர். இந்த உலகம் என்று தோன்றியது எனச்

சொல்ல முடியாத கால எல்லையை உடையது. இஃது இதுகாறும் அழிந்துபோகாது இருப்பதற்குக் காரணம் யாது, இவ்வாராய்ச்சியில் புகுந்த வள்ளுவர் என்ன கூறுகின்றார், அவர் வழி வந்த தமிழர் கூறுவன யாவை என்பதைச் சிறிது காண வேண்டும். 'பண்புடையார் பட்டுண்டுலகம் அதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன்' என்றார். உலகம் வாழ வேண்டும் என்று கருதுகின்ற பரந்த உள்ளமுடைய சான்றோர்களைப் பொறுத்தே இவ்வுலகம் உள்ளது என்பதை நன்கு காட்டியுள்ளார். தனக்கென முயலாத வலிய முயற்சியையும் பிறர்க்காகவே வாழும் பெரும் பண்பும் உடையவர்களாலேதான் இந்த உலகம் நிலைத் திருக்கின்றது என்று கண்டான் பாண்டி வேந்தன். இந்த உலகம் வாழ்வதற்கு மழை இன்றியமையாதது. அம் மழை யின்றேல் மாநிலம் வளமுடையதாகாது. அம் மழையும் நல்ல பண்புடைய சான்றோர் வாழும் நாட்டின்கண் பெய்து யாவர்க்கும் பயன்தரும். இன்றேல், அந் நாடு நாடாகாது. பசியும் பிணியும் பகையும் சூழ்ந்து அல்லலுறும். இந்த உண்மையை 'நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யு மழை' என்ற நீதியுரை எடுத்துக் காட்டுகின்றது. இதனால் அறியக்கிடப்பது என்ன? நல்ல பண்புடையவர்களே ஒரு நாட்டின் வாழ்விற்கு ஒளிதரும் விளக்குகள். அவ்விளக்குகளின்றேல் இருள் சூழ்ந்துவிடும். ஒரு நாட்டில் வாழும் மக்கள் தீமையகற்றி நற்பண்புடையவர்களாக வாழ வழி காட்டுபவர்கள் சான்றோர்கள் அல்லவா? அப் பெரியார்கள் மக்களினத்திற்கு வழங்கும் தக்க கருத்துக்கள் என்றும் அழியாத் தன்மையுடையன வாகும்.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்' என்பது பொய்யாமொழி. மக்கட் பிறப்பின் அருமையைக்

காணும்பொழுது நாம் அப்பிறப்பினை எத்துணைக் கவலையோடு போற்றிப் பயனுடையதாக்க வேண்டும் என்பது புலனாகின்றது. பிறக்கின்றபோதே கூன், குருடு, செவிடு, ஊமை நீங்கிப் பிறப்பது அருமை. அத்தகைய குறைபாடில்லாமல் பிறந்தாலும் அழகுடையராய்ப் பிறப்பது இன்னும் அருமையே. அவ்வழகினைப் பெற்றவர் இப்பிறப்பின் முழுப்பயனையும் அடைந்து விட்டோம் என்று கருதி மயங்குவதும் தவறு. நம்முடைய உறுப்புக்களின் அழகுதான் உயர்ந்த அழகு எனக் கருதினால் அது அறியாமையே. இயற்கை அழகினையும் பெற்று இப்பிறவிக்கு மருந்து போல்வதாகிய கல்வியறிவைப் பெறுபவர் மிகவும் குறைந்தவரே. அவர்கள் கல்வியழகே அழகு என்று எண்ணி இறுமாந்து வாழ்வதும் அழகல்ல. உடலழகும் கல்வியழகும் ஒருங்கியைந்த பின் குன்றமன்ன செல்வமும் ஒருவருக்கு வந்துறுவது மிக அரிதே. அவ்வாறு எய்தப்பெற்றவர் செல்வத்தினால் வரும் மகிழ்ச்சி யழகே அழகென்பாராயின் அவர்களை ஆராய்ச்சியிலாதார் என்றே கூறுவர் உலகோர். உடலழகும், கல்வியழகும், செல்வத்தழகும் ஆகிய மூன்றும் இவ்வுலகில் அழகென்றே கருதப்படினும், அவற்றையெல்லாம்விட ஒரு அழகு உண்டு என்பதை உணர வேண்டும். அந்த அழகினை அடையாது ஏனைய அழகுகளையெல்லாம் அடைந்தாலும் அவர்கள் அழகில்லாதாரே ஆவர். அவர்கள் மக்களென்றும் எண்ணத் தகாதாரே. மரம் போன்றாரென்றே இகழப்படுவர். பண்பு என்ற ஒப்பற்ற அழகுமட்டும் ஒருவனுக்கு அமைந்து ஏனைய அழகுகள் என்று கருதுபவை இல்லையாயினும் அவனுக்கு வருவதோர் இழுக்கில்லை. பண்புடையவனே மகனாவான். அப் பண்புடைமையே அழகுடைமையாகும். அவனே இவ்வுலகில் போற்றுதற்குரியவன். அவனைப் பொறுத்துத்தான் இவ்வையம் இயங்கும். குணவழகுடையாரையே குணமென்னும் குன்றேறி நின்றார் எனப் புகழ்ந்தார் செந்நாப்போதார்.

அத்தகைய குணக் கலைக் குன்றுகள் காலந்தோறும் தோன்றி என்றும் அழியா வரம்பெற்று வயங்குதல் உண்டு. அவர்களுள் ஒருவராக யாழ்ப்பாணத்திலே தோன்றிய குணக் கலைக் குன்றே நம் நாவலர் பெருமான்! அவர்தம் குணவியல்புகளைத் துருவிக் காண்போம்.

நாவலர் கார்காத்த வேளாண்குடியிலே பிறந்தவர். ஒழுக்கம் பழுத்த ஞானப்பிரகாசரின் வழிவழித் தோன்றியவர். அந்தக் குடியின் பெருமை குன்றுவண்ணம் நல்லொழுக்கப்பண்பும் வாய்க்கப் பெற்றவர். ஒழுக்கத்தால் மேன்மை எய்துதலும், ஒழுக்கமின்மையால் இழுக்கமடைதலும் உலகத்திற் காணப்படுவன அல்லவா? இந்த உண்மையை இளமையிலே உணர்ந்தவர் நம் நாவலர். தாம் கற்ற நூல்களில் சொல்லப்பட்டவற்றிற்கு மாறுபடாது ஒழுகி வந்தவர். கற்றதற்குப் பயன் அறிவும், அறிவிற்குப் பயன் ஒழுக்கமுமாகலின் அக்கற்றதற்குத் தக நின்றனர். விழுப்பந்தரும் பொருள் ஒழுக்கம் ஒன்றே எனக் கருதியதால், தம் துறவு வாழ்வில் எவ்வித இழுக்கும் ஏற்படாவண்ணம் இறுதிவரை காத்துப் புகழ் கொண்டார். துறந்தார் பெருமையை யாவரே அளந்துரைக்க முடியும்? உலகந் தோன்றியது முதல் இறந்தார்களை எண்ணிப் பார்க்க முயன்று முடியாதது போலாம் என்பர் நீத்தார் பெருமை கூறவந்த தமிழ்ப் பெரியார். துறவு வாழ்வில் ஒரு பழிச் சொல்லும் ஏற்படாதவாறு பிறர்க்காக வாழ்ந்த நாவலரின் ஒழுக்கம் யாவராலும் பின்பற்றத் தக்கதன்றோ?

இப் பெருமகன்பால் விளங்கிய குணங்களுள் வீறிட்டு நின்றது அஞ்சாமையாகும். ஒழுக்கமுடையவர் யாருக்குத்தான் அஞ்சுவர்? அச்சம் கீழ்களது ஆசாரம் அல்லவா? தம்பால் குற்றமுடையவர் பிறர்க்கு அஞ்சுவது இயல்பு. உள்ளத்து உறுதியில்லாதாரும்,

அறிவில் தெளிவில்லாதாரும் அஞ்சியே கிடப்பர். ஆனால், ஒரு குறைவுமில்லாத நாவலர் எவருக்கும் அஞ்சியதே இல்லை. அவையின்கண் சிறிதும் அச்சமில்லாது 'சொற்போர் நிகழ்த்த வல்லவர் வேறு எங்குதான் அஞ்சுவார்? அவர் காலத்தே சமயப் பிணக்குகள் இடையிடையே நடைபெற்று வந்தன. தம் சமயத்திலே அழுத்தமான பற்றுக்கொண்டு வளர்ச்சி செய்தவர் நாவலர். அவரைப் போன்றே பிற சமயத்தவர்களும் தத்தம் சமய வளர்ச்சியில் மிகுந்த ஊக்கங் காட்டினர். இந்நிலையில், அக்காலத்தே இருந்த ஜான்வால்டன் என்பார் நாவலர்மீது வழக்குத் தொடுக்க வேண்டுமென்று எண்ணினர். கடித வாயிலாகவும் அச்சுறுத்தினர். அதற்குக் காரணம் நாவலர் வெளியிட்ட 'சைவதூடண பரிகாரம்' என்பதாகும். கடிதம் பெற்ற நாவலர் சிறிதும் மனம் கலங்கினரில்லை. "'சைவதூடண பரிகாரம்' என்ற நூலை எழுதியவன் யானே. கருத்துவேறுபாடு இருக்குமாயின் அதனை விளங்கக்கூறுவேன்" என்று மறுமொழி விடுத்தார். அதனைப் பெற்றபின் வழக்குத் தொடர்வது நின்று விட்டது. இதனால் உண்மைக்கு அஞ்சாது போரிடும் மனப்பண்பு உடையவர் என்பது தெளிவாகின்றது. இன்னும் சில நிகழ்ச்சிகள் இவர் அஞ்சாமையை வெளிப்படுத்தும். அப்பண்பை விளக்க இஃதொன்றே போதுமன்றோ?

இந்தப் பண்போடு ஒன்றாக வளர்ந்து வருவது மானம் என்ற பண்பாம். அதாவது தம்நிலையில் தாழாமையும் தாழ்ந்த விடத்து உயிர் வாழாமையும் ஆம். மானங் கெட வரின் வாழ்வரோ மேதக்கோர்? மானம் சிறிதென்றும் வாழ்வு பெரிதென்றும் எண்ணுவோரை ஈனர் என்று இழித்துரைக்கும் உலகம். அவர்கள் தலையினின்றும் இழிந்த மயிரனையரே. ஆனால், நம் தமிழர்கள் உயிரினும் சிறந்த பொருளாக

மானத்தைக் காத்துவந்தனர் என்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன. சேரவேந்தன் ஒருவன் பகையரசன் நீர்கேட்டு உண்ணாது உயிர் நீத்து மானங்காத்த மாண்பினை யாரே அறியாதவர்? அத்தகைய அழியாப் பண்பையுடையவர் நம் நாவலர். அப்பண்பை உணர்த்தும் ஒரு நிகழ்ச்சியைச் சுட்டுவது இன்றியமையாததாகும். ஒரு முறை சிதம்பராலய பூசகர்கள் சிவநிந்தை செய்ததைக் கேள்விப்பட்ட நாவலர் அங்கு ஒரு சொற்பொழிவு செய்தார். அப்பொழுது, முன்காலத்தில் பூசை செய்தோர் அனைவரும் சிவதீக்கை பெற்றவர்களே என்று நூற்சான்று காட்டிவிட்டு, சிவதீக்கை பெறாதா பூசை செய்யும் தகுதி யில்லாதார் என்றும், அவர்கள் செயல் கண்டிக்கத்தக்கதென்றும் உணர்ச்சியுடன் பேசிமுடித்தார். அதன் காரணமாக வெறுப்புற்ற பூசகர்கள் தங்களைப் பழித்தாரென்று கூறி வழகுத் தொடுத்தனர். நாவலர் வழக்கு மன்றம் செல்லவேண்டிய சூழ்நிலை யுண்டாயிற்று. அதற்கும் அஞ்சினாரில்லை. பூசையைத் தவறாது முடித்தார். தம் மாணவர் சதாசிவம் பிள்ளையை அழைத்தார். “யான் இன்று தண்டிக்கப்படின் என் உயிரை விட்டுவிடுவேன். இவ்வுடையவரைக் கங்கையிலே போட்டுவிடு” என்று கூறி, தாம் பூசை செய்து வழிபட்டு வந்த உடையவரை ஒப்படைத்தார். வழக்கு மன்றம் சென்றார். நாவலர் உண்மையை மறைக்காமல் மிகுந்த உருக்கமுடன் நீதிபதியின்பால் தெரிவித்தார். நீதிபதி கேட்டு வியந்தார். வழக்குத் தொடுத்தார்க்கே தண்டம் விதித்தார். இந்த வழக்கில் நாவலர் தண்டிக்கப்பட்டிருப்பின், அது தம் நிலையில் தாழ்ந்ததே யாகும் எனக் கருதித் தம்முயிரைப் போக்கியே இருப்பர். மானமொன்றே நல்வாழ்வெனக் கொண்டு வாழ்ந்த தமிழ் மரபு பொய்த்துப் போமோ?

மானமுடையார் பிறரால் உதவிபெற்று வாழ்வாரோ? ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்கு இழிவு என்று கருதும் குணமுடையரல்லவா? அவர்கள் தாங்களே உழைத்து உயிர் வாழ்வரே யல்லாமல் சோம்பிக் கிடத்தலு மிலர். தம்மால் இயன்றளவு பிறர்க்குதவும் பெற்றியுடையராயு மிருப்பர். இந்த முறையில் இளமை முதல் இடைவிடாது உழைத்துப் பிறர்க்காகவே வாழ்ந்தவர் நாவலர். அவர்பால் காணப் பட்ட பண்புகளுள் தாளாண்மையும் ஒன்ரும். தமிழ் நாடெங்கும் தமிழும் சைவமும் பரப்பும் கல்வி நிலையங்கள் நிறுவத் திட்டமிட்டதும், சிலவிடங்களில் கல்வி நிலையங்கள் தோற்றி ஊக்கமுடன் நடத்தி வந்ததும் முன்பு கண்டோம். அம்மட்டோ! பல நூல்கள் அச்சிட்டும், உரை வரைந்தும், புது நூல்கள் யாத்தும் இடைவிடாது உழைத்ததை நினைக்கின்ற பொழுது அவர் வாழ்நாளில் உறங்கிய நாட்கள் மிகச் சிலவே என்று கருத வேண்டியுளது. மேலும், முப்பத்திரண்டாண்டுகள் ஆயிரக்கணக்கான இடங்களிற் சென்று தம் நாவன்மை வெளிப்பட ஆற்றிய சொற்பொழிவுகளும் அவருடைய தாளாண்மையைக் காட்டுகின்றன. இத்துணைக்கு மேல், பொதுப்பணியிலும், அரசியல் வாழ்விலும் ஈடுபட்டு இராப்பகலாக உழைத்ததை நோக்கும் பொழுது அவரை ஒரு தனிப் பிறவி என்றே வியப்பரன்ரே? உலைவின்றி முயல்பவர் ஊழையும் உப்பக்கம் காண்பரென்பது உண்மையேயாம். தனக்கென முயலாது பிறர்க்காக வாழும் பண்பு இவர்க்கே யுரியது போலும்!

இம்மையில் பிறர்க்காக வாழ்பவர் புகழ் என்றும் நிலவி நிற்கும். அவர்கள் புகழை விரும்புவரல்லரெனினும் அதற்கு உரியவராகின்ருர்கள். நாவலர் தம்மைத் துறந்து தமிழர்க்காக வாழும்போது மனதிலே புகழையோ பொருளையோ அடைய வேண்டுமென

னினைத்தாரில்லை. தம் கடமை யுணர்ச்சியில் சிறிதும் வழுவாது தொண்டாற்றுவதிலே முனைந்திருந்தார். தாம் தோற்றுவித்த கல்வி நிலையங்களைத் தாமே பொறுப் பேற்றுப் புகழை அடைய விரும்பினாரா? அவற்றைத் தம் மாணக்கர் பொறுப்பிலே விட்டுப் புகழ் பெறச் செய்தார். அவற்றின் வளர்ச்சிக்கு அருந்துணை புரிந்தார். இம்மைச் செய்தது மறுமைக்கு உதவும் என எண்ணிச் செயலாற்றும் அறவிலை வணிகருமல்லர். மறுமையைப் பற்றியும் மனத்திலே சிந்தித்துச் செயலாற்றவுமில்லை. இவ்வாறு புகழ் விரும்பாப் பெருந்தகை அழியுந்தன்மையதாய செல்வத்தை விரும்புவரோ? துறவு நிலையை மேற்கொண்டாரை நன்னெறிக்கண் செல்லாவாறு தடைப்படுத்துவது அவா என்ற குணமேயாம். அவர்பால் அந்தக் குணம் ஒரு சிறிதுமில்லை. பிறரிடத்துப் பொருள் உதவி பெறவோ அன்றிப் பின் வாழ்விற்கு வேண்டும் என்று கருதிச் சேர்க்கவோ இறையும் எண்ணவில்லை. பொது நலம் பேணித் தமிழ் மக்களை உதவுமாறு வேண்டு கோள் விடுத்ததையே பார்க்கின்றோம். தமிழும் சமயமும் வாழ அவர்களை வேண்டுவது இழிவாகாது என்று அறிந்தவர். தம் வாழ்விற்காகப் பிறர்பால் சென்று இரப்பது மிக இழிவு என்பதை அவர் ஒரு போதும் மறக்கவில்லை. அவர் தம் வாழ்வில் பொருளையும் புகழையும் விரும்பாத தன்மையை ஒரு நிகழ்ச்சி சுட்டிக் காட்டுகின்றது. நாவலர் தென்னாட்டுச் சுற்றுப் பயணம் செய்தாரல்லவா? அப்பொழுது மதுரை ஆதீனத் தலைவர் நாவலரின் நாவன்மையைக் கேள்வியுற்றுச் சொற்பொழிவாற்றச் செய்தனர். அப்பொழுது பேசிய பேச்சினைத் திருச்செவி சாத்திய அடிகளார் மனமுருகித் தாம் அணிந்திருந்த பொற் கண்டிகையை நாவலர்க்கு அணிவித்து வியந்து மகிழ்ந்தனர். விலை மிக்கதும் பெருமையாக எண்ணத் தகுவதுமாகிய அதனைத் தாம் வைத்துக்

கொள்ள விரும்பினரா? அக்கணமே கழற்றி அடிகளாருக்கே உரியதாக்கினர் என்பதை அறிகின்றோம். பிறிதொரு நிகழ்ச்சியும் அவர்தம் அவாவின்மையை நனி விளக்கும். ஒரு முறை சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலே என்ற கல்வி நிலேயத்திற்குத் திருவாவடுதுறை யாதீனத் தலேவரா யிலங்கிய அம்பலவாண தேசிகரவர்கள் எழுந்தருளினர். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளேக் கண்ட ஆதீனத் தலேவர் அங்குள்ள ஆசிரியர், மாணவர் முதலானோர்க்கு ஆடைகளும் பரிசுகளும் வழங்கிச் சிறப்பித்தனர். நாவலருக்கும் சால்வையும் சரிகை வேட்டியும் மனமுவந்தளித்தனர். அதனே மறுக்க வியலாது ஏற்றுக்கொண்டார். அவற்றைக் குருமூர்த்திகள் திருவடியில் வைத்து 'திருக்களாஞ்சேரியில் உள்ள மறைஞான சம்பந்த சிவாச்சாரிய சுவாமிகளுடைய சமாதியைச் செப்பம் செய்ய உதவட்டும்' என்று பணிவுடன் கூறினர். இவருடைய பொருள் விரும்பாத தன்மை கண்ட குருமூர்த்திகள் சிதம்பரத்தை விட்டுச் செல்லுங்கால் நாவலருக்கு எண்பது வெண்பொன் அனுப்பினர். அதனேயும் மறுக்காமல் பெற்றுக் கொண்ட நாவலர், சென்னேக்குச் சென்றதும் மீண்டும் குருமூர்த்திகட்கே அப்பொருளே அனுப்பிவிட்டனர். இத்தகைய பண்புடையார் உலகிலே மிக அரியர் என்றே சொல்லலாம். வேண்டாமையன்ன விழுச் செல்வம் இவ்வுலகிலும் எவ்வுலகிலும் ஒப்பில்லாதது என்பதை உணர்ந்தார் போலும்!

பொருளாசை யில்லாத அவர், தம்பால் வந்த பிறர்க்குப் பொருள் உதவுதலேக் குற்றமெனக் கருதினரில்லே. தம்மை யடைந்த வறுமையாளருக்கு வேண்டுமுதவி செய்வதையும் விட்டாரல்லர். தம் புலமையைக் கருவியாகக் கொண்டு வள்ளல்களே நாடிச் சென்று பாடிப் பரிசில் பெற்றாரல்லர். புலவராகத் திகழ்ந்த

அவரே புரவலராகவும் விளங்கி ஈகைப் பண்புடையராய் வாழ்ந்தார் என்பதற்கும் சான்றுளது. ஒரு முறை இசைத் துறையில் தேர்ச்சி பெற்ற கோபால கிருஷ்ண பாரதியார் நாவலர்பால் வர வேண்டிய நிலை ஏற்பட்டது. பெரிய புராணச் சிறப்புடைய திருநாளைப் போவார் என்ற நந்தனார் வரலாற்றைக் கீர்த்தனையாகச் செய்தவர். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடமும் ஏனைய பெரும் புலவர்களிடத்தும் இசையுடன் பாடிக் காட்டிப் பாராட்டுரை பெற்றவர். தமிழ் ஆதீனங்களிலும், வள்ளல்களிடமும் உருக்கமாகப் பாடிப் பரிசில் பெற்றவர். நாவலர் புகழைக் கேள்வியுற்று அவர்பாலும் பாராட்டுப் பெற விழைவு கொண்டார். நந்தனார் கீர்த்தனையை நாவலர்பால் பாடிக் காட்டினர். பாரதியாரின் இசைப் புலமையையும், அடியார் பக்தியையும் கண்ட அவர் பாராட்டிப் பரிசும் வழங்கினர். இன்னும் சிலர் இறைவன்மீது பாடிக் கொண்டு சென்று பாடிக்காட்டி நாவலர்பால் பரிசு பெற்றனர். தமிழ் வரலாற்றிலே ஒரு புலவர் பிறரிடம் சென்று பரிசில் பெறாது பரிசு வழங்கினார் என்பது இதுகாறும் காணாத செய்தியாகும். நாவலர் ஒருவரே அந்தப் புதுவழியை வகுத்தவர் ஆவர். மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று எனத் துணிந்தார் போலும்!

ஈகையிற் சிறந்த அவர் எவ்வுயிர்க்கும் இரங்கும் அருட் பண்புடையராகவும் வாழ்ந்தனர். பிறவுயிர்கட்கு உறும் தீங்கு தமக்கேற்பட்டதாகக் கருதி இரங்குதலே அருளாளர் பண்பு. வாடிய பயிரைக் கண்டும் வாட்டமுறும் அருளாளர் பிறந்த நாடல்லவா தமிழ் நாடு! முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் ஈந்த அருளாளர் தோன்றிய பழந்தமிழ் மரபல்லவா? ஒரு பசுவின் உயிரைப் பிறர்பால் கொல்லுதற்கு ஒப்புவிக்கத் துணியாது, பிறந்த நாட்டைவிட்டுத் தமிழ்த் துறவி

யாகிய அருளாளர் ஞானப்பிரகாசர் குடியில் வந்தவ ரல்லவா? ஆகவே, அவர்க்குப் பிறவியிலே இரக்க வுள்ளம் அமைந்திருந்தது. ஒரு முறை, தம்பால் கற்ற மாணவர் ஒருவர் அம்மை நோய் கண்டு வருந்தினுர். வெப்பு மிகுதியால் உண்டாகும் அந்நோய் உயிரையும் போக்கும் கொடுந் தன்மையது. அதனுல் கண்கள் குருடாஞேரும், கைகால் முடமாஞேரும் பலராவர். அது அழகினைச் சிதைப்பதோடல்லாமல் ஆற்றல் முழுவதையும் இழக்கச் செய்கிறது. அந்நோய் கண்டவர்களை அருகில் சென்று பார்ப்பதற்கே அஞ்சுபவர் பலர். அஞ்சா நெஞ்சங் கொண்ட ஆங்கில மக்கள் ஓடி ஒளியுமாறு செய்யவல்லது அம்மை நோய் ஒன்றேயாம். இத்துணை கடுமையான நோய் தம் மாணவர் ஒருவருக்கு உண்டாகியது. அதனை அறிந்து உள்ளங் கலங்கினுர். பார்த்துவர வேண்டுமென விரும்பினுர். அவர் விருப்பைத் தெரிந்த சிலர் போக வேண்டாம் எனக் கூறினர். நாவலரா அதற்கு ஒருப்படுபவர்? பிறர்க்குறும் சிறு துன்பத்தினையும் தமக்கு நேர்ந்ததென எண்ணி இரங்கும் தகைமைசான்ஞேர் வாளாவிருப்பரோ? அங்ஙனமிருப்பின் அவர் அறிவினுைய பயன் உண்டோ? நாவலரும் தம் மாணுக்கரை நாடோறும் சென்று கண்டார். அவருக்கு ஆறுதல் மொழிதலும், இயன்ற உதவியைச் செய்தலும் வழக்கமாகக் கொண்டார். பிறிதொரு மாணவர் நோய்வாய்ப்பட்ட போது மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்தார். நாள் தவருமல் சென்று பார்த்து அன்புரை வழங்கி வந்தார். எவ்வளவோ முயன்றும் அம்மாணவர் குணமடைய வில்லை. அந்நோயே கூற்றுவனுக அமைந்தது. அம் மாணவர் பிரிவால் உள்ளம் வருந்தி இரங்கல் நூல் ஒன்று வெளியிட்டுத் தம் ஆற்ருமையைப் போக்கிக் கொண்டார். அம்மாணவரின் அருமை மைந்தனைத் தேற்றிப் பல உதவிகளும் செய்து வந்தனர். பள்ளியில்

கல்வி பெறச் செய்து வாழ்விற்குரியவனாக்கினர். என்னே அவர்தம் அருளுடைமை! இவ்வாறு எத்தனையோ மக்கட்குத் தம் நாளில் ஒல்லும் வகையால் உதவியுள்ளார். தம் அருமை மாணவர் பொருட்டுக் கலங்கிக் கண்ணீர் சிந்தினர் என்றால், அவர் இரக்க உள்ளத்தை என்னென்பது! இவ்வாறு எவ்வுயிர்க்கும் இரங்குவது அவர் பிறவிக் குணமா, அன்றி, 'அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதினோய் தந்நோய் போற் போற்றாக்கடை' எனும் அருள் மொழியா என்று நினைக்கத் தோன்றுகின்றதன்றோ? அருளாளர் பகைவர்க்கும் இரங்கும் பான்மையர் என்பதை நாவலர் அறியாமலிருப்பரோ? அவர்தம் அருட்பண்பு யாவர்க்கும் செந்தண்மை நல்கச் செய்து அந்தணராக்கிற்றல்லவா? அவரல்லவா உண்மை அந்தணர்!

நாவலர் சிவனை மறவாச் சிந்தையரல்லவா? சிவனடி மறவாதவர் அவன்றன் அடியவரை மறப்பரோ? அடியவரைப் போற்றுதலே சிவனைப் போற்றுவதாகும் எனும் உண்மையை அறிந்து ஒழுகி வந்தார்! 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்' எனத் தொழுதேத்திய செந்தமிழ்ச் சுந்தரர் மொழியைப் பயின்றவரல்லவா? ஆதலால், அப் பெரியார்பால் தணியாக் காதல் முதலிலே முகிழ்த்தது. அதன்பின் அடியார்கள்பால் அன்பு வளர்ந்தது. பின்னர் அடியார்களைப் பற்றிப் புகழ்ந்துரைக்கும் பெரிய புராணத்தின்மீது அளவிலாப் பற்று உண்டாகியது. இறுதியாக அந்நூலை அருளிச் செய்த அருண்மொழிச் சேக்கிழார் திறத்திலே நீங்காத அன்பு உண்டாயிற்று! 'பெரிய புராணப் பித்தர்' என்று கூறுமளவிற்கு அடியார் பக்தி ஓங்கி நின்றது. அவர் அடியார் பக்தர் என்பதற்கு எத்தனையோ நிகழ்ச்சிகள் காட்டலாம். ஒரு முறை, தம் தமயனார் பெரிய புராணம் முழுதும் கட்டுக்கதை என்று சொல்லியதை நண்பர்

வாயிலாகக் கேட்டுச் சின முற்றதும், தம் தமயன் தலையினைத் துணித்திட வாள் கொண்டோடியதும், அவர் இறக்கும் வரையிலும் பேசாதிருந்ததும் அவர்தம் அடியவர் பக்தியைக் காட்டுவதாகும். பிறிதொரு முறை, தம் மாணவர் ஒருவரைத் தேவாரத் திருப்பாடல் பாடுமாறு ஆணையிட்டார். அப்பாடலின் இடையே 'நாவலா உனை' எனச் சுந்தரரைப் பற்றி வருகின்ற சொல்லினைப் பாட நேர்ந்தது. அச்சொல் நம் நாவலர் பெருமானையும் சுட்டும் தன்மையில் பொதுவாக நின்றது. அதனை யுணர்ந்த அம்மாணவர் ஆசிரியர் பெயராக விருத்தலின் உச்சரிக்க அச்சங்கொண்டு சிறிது தாழ்ந்த குரலில் அச்சொல்லைப் பாடினார். பூசை செய்து கொண்டிருந்த நாவலர் அதனையறிந்து அடக்க முடியாத சினங்கொண்டார். பூசை நியமமும் அடியார் மேல் கொண்ட அன்பினால் தவறியதையும் அவர் பெரி தாகக் கருதவில்லை. சுந்தரருக்குக் குறை நேர்ந்த தாகவே கருதிய அவர்தம் அடியார் பக்தி எத் தன்மையதென்று பாருங்கள்! இதனினும் மேலான ஒரு நிகழ்ச்சி இவரது தீவிர அடியார் பக்தியைக் காட்டு வதாகும்.

நாவலர் சென்னையில் இருந்த காலத்தில் வாழ்ந்த மற்றொரு பெரியார் இராமலிங்க அடிகளாவர். இவர் அருளிச் செய்த நூல் அருட்பா எனப்படும். இவர் பாடிய பாடல்கள் தேவார ஆசிரியர்கள் பாக்களைப் போன்று சில கோவில்களிலும் ஓதப்பெற்று வந்தன. நாவலர் இதனைக் கேள்விப்பட்டு உள்ளம் வருந்தினார். "இறைவன் அருள் பெற்றுப் பாடிய சமய குரவர்கள் பாடலோடு ஒத்துமதிப்பின் அவர்கள் பாடல்களையும் மக்கள் குறைத்தே மதிப்பர். இராமலிங்கர் என்பவர் அருள் பெறறவராகார். அவர் அதற்கு அருட்பா வென்று தானே வைத்துக் கொண்டதே அதற்குச் சான்றாகும். தான் தற்புகழ்தல் தகுதியன்றாம்" எனச்

சினந்து நாவலர் வழக்குத் தொடுத்தனர். 'போலி அருட்பா மறுப்பு' என்ற சிறு நூலும் வெளியிடுமாறு தூண்டினர். நாவலரும் இராமலிங்கரும் ஒரே காலத்தவரே யன்றி ஒருவரை யொருவர் நெருங்கிப் பழகியவரும் அல்லர்; முன்பின் பகை கொண்டவரும் அல்லர். ஒருவருக்கொருவர் புலமைக் காய்ச்சலால் தம்முள் வேறுபாடுற்றனர் என்பதற்கும் சான்று எதுவுமில்லை. அதற்கு நாவலர் அடியார்பால் கொண்ட தீவிர பக்தியே காரணமாம். நாவலர் பாடும் ஆற்றல் வாய்ந்தவர். ஒரு தடவை தம் மாணாக்க ரொருவரைப் பாடுமாறு சொல்ல, அம்மாணவர் தாங்களே முதலில் வணக்கம் சொல்லுதல் நலமாகும் எனத் தெரிவித்தார். அப்பொழுது கணபதி வணக்கப் பாடலொன்றை மனப்பாடம் செய்தவர்கள் சொல்லும் பான்மையில் பல்லோர் குழுமிய அவையில் பாடியருளினரென்ப. பிறிதொருகால், தம்முடன் கற்ற கார்த்திகேய உபாத்தியாயர் போந்து உரையாடிக் கொண்டிருந்தார். ஏட்டையும் எழுத்தாணியையும் வரும்போதே கொண்டுவந்திருந்தார். யாழ்ப்பாண நல்லூரில் எழுந்தருளியுள்ள கைலாசப் பிள்ளையார், சுப்பிரமணியர் இருவர்மீது இரு விருத்தங்கள் சொல்லுமாறு வேண்டினர். எவ்வித மறுப்புமில்லாமல் அந்தச் சமயத்திலேயே இரண்டு விருத்தங்களைச் சிறிதும் வருத்தமின்றித் தம் புலமையால் யாத்துக் கூற அவர் ஏட்டிலே எழுதிப் பார்த்து வியந்தனர். அப்பாக்கள் இன்றும் படிப்பாரை வியந்துருகச் செய்யுமென்பதில் ஐயமுண்டோ? இத்தகு வன்மையுடைய நாவலர் பாக்களியற்றுவதை அறவே விட்டுவிட்டார். அதற்குக் காரணங் கேட்டபோது, பாடல்கள் இயற்றுவது இறை வழிபாடு செய்வதற்கே எனவும், அதற்குத் தேவாரத் திருவாசகச் செழும் பாடல்கள் உள்ளபோது பாடல் யாத்தல் வேண்டுவதில்லை எனவும் கூறுவராம். இந்த அழுந்திய மனப்பான்மையே இராமலிங்கர் பாக்களை

அருட்பா என ஒப்புக் கொள்ள மறுத்தது என்பது உறுதியாகின்றது. இருவருக்கும் சென்னை உயர் நீதி மன்றத்திலே வழக்கு நடைபெற்ற தென்பதும், இறுதியில் ஒற்றுமைப்படும் நிலைமை திருவருட் செயலால் உண்டாயது என்பதும் செவி வழியாகக் கூறப்படும் செய்திகளாகும். எவ்வாறுயினும் அக்காலத்தே இருவரும் பெரியார்களாக ஓரொரு சாராரால் மதிக்கப்பட்டு வந்தனர் என்பது தெளிவாகின்றது. அன்றியும் நாவலர் அழுக்காறு கொண்டோ பழம் பகை கொண்டோ வழக்குத் தொடுக்கவில்லை என்பதும், தம்பால் உறைந்திருந்த அடியார் பக்தியே அதற்குக் காரணம் என்பதும் மறுக்க முடியாததாகின்றதன்றே?

'குணமிகுந்தவரிடத்தே கோபமும் உண்டு' என்பது உலகமொழி. அம்மொழி பொய்த்துவிடாமல் நாவலர்பால் அமைந்தது. 'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என தாய் தடுத்தாலும் விடேன்' என்பது மொழியாற் பிறந்த வெகுளி. அது போலவே சிவனையும் சிவனடியார்களையும் இகழ்ந்தவர் எவராயினும் அவரோடு போராடுவது சமயக் காதலால் பிறக்கும் வெகுளியாகும். நாவலர் வெகுளிக்கே அடிமைப்பட்ட ஒரு நிகழ்ச்சியும் அவர் வாழ்விலே அறியக் கிடக்கின்றது. சிவதீக்கையின் இன்றியமையாததைக் கூறிய நாவலர் மீது வெறுப்புற்ற தில்லைப் பூசகர்கள் சிவநிந்தை செய்தனர். அதற்கு வெகுண்டு சிதம்பரத்திலுள்ள கல்வி நிலையத்தில் கூட்டம் அமைத்துக் கண்டனம் செய்தது அறிந்ததே. தம் சமயக் கடவுளர்களைப் பழித்ததைக் கண்டித்துத் தன் வெகுளித் தீயை நூல் வாயிலாகப் பரப்பியதைக் காண்கின்றோம். இவற்றைவிட அவர் வெகுளி உச்சநிலை யடைந்தது தம்பால் மிகுந்த மதிப்புடைய சிவசமயத்தவர் மேலாகும். சிதம்பரத்தைச் சார்ந்த வெள்ளங்தாங்கி என்ற ஊரிலே உள்ளவர் ஒருவர். சிவகாமி அம்மைக்

குரிய நிலம் அவ்வூரிலிருந்தது. கோவிலுக்குச் சேர்ந்த நாற்பது வேலி நிலத்தையும் தாமே ஆண்டு பயன் துய்த்து வந்தார். நாவலர் இதனை யறிந்தார். அவர் நாவலர்பால் மிக்க மதிப்புடையவரா யிருந்ததால் அவர்பாற் சென்று, 'சிவ சொத்து குல நாசம்' என அறிவுரை மொழிந்தார். 'இறைவியாகிய சிவகாமி அம்மைக்குரிய நிலத்தையும், இதுகாறும அடைந்த வருவாயையும் கோவிலுக்குச் சேர்த்துவிடுக' என்றும் கடிந்து கூறினர். ஆசைக்கோ ரளவுண்டோ? நாற்பது வேலி நிலமும் அதன் மிகுந்த வருவாயும் பல ஆண்டு கள் தம்முடையதாகவே கருதித் துய்த்த ஒருவர் அறிவுரைக்கு அவ்வளவு எளிதில் இணங்குவரோ? அவர் இணங்காமை கண்டு தம்மையும் மறந்து சுடுமொழிகளைக் கனல் பறக்க வீசினார். அவர் பேச்சு வெகுளியின் உச்சநிலையை எட்டியது. வசைமொழி கேட்ட அந்த மனிதரால் வழக்குத் தொடரப்பட்டது. நீதி மன்றத்தில் நாவலர் வசைமொழி கூறியதை மறுக் காமல் ஒப்புக்கொண்டு தண்டமும் செலுத்தினர். தமக்கு வரும் பழிச் சொல்லைவிடச் சிவனையும் சிவனடி யார்களையும் குறித்துவரும் பழிச்சொல் கண்டு எத் துணை கவலை கொண்டார் என்பதற்கு இதனினும் சான்று வேண்டுங்கொல்? இறுதி வரையிலும் விடாது நேர்மைக்குப் போராடி அந்தச் சொத்தைச் சிவகாமி அம்மைக்கே உரியதாகுமாறு வழக்குத் தொடுக்கச் செய்து வெற்றியுங் கண்டார் என்பதை அறி கின்றோம். அவர் வெகுளி அவரை அழித்துவிடாது சமயத்திற்கு நன்மை பயப்பதாக அமைந்தது விந்தை யினும் விந்தையே!

நாவலர் யாவருக்கும் தமிழோடு சமயக் கல்வியும் ஒருங்கே வழங்கும் நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தில் கல்வி நிலையம் முதன்முதல் தோற்றுவித்தாரல்லவா? அதன்கண் பயின்ற மாணவர்களிடம் எவ்வித ஊதிய

மும் பெறவில்லை. பலருடைய பொருளுதவியால் பள்ளி நடைபெறலாயிற்று. அந்த நாளில், நாவலர்பால் பயின்ற மாணவர்களுள் ஒருவர் ஆறுமுகம் செட்டியார் என்பவர். அவர் மனமுவந்து ஒரு நிலத்தை வண்ணார் பண்ணைக் கல்வி நிலையத்திற்கு நன்கொடையாக எழுதி வைத்தார். இவ்வாறு நன்மக்கள் சிலர் உதவி பெற்று வளர்ச்சியடைந்து வருங்காலத்தில், நாவலர் நூல்கள் அச்சிடும் பொருட்டுச் சென்னை சென்று வர நேர்ந்தது. அப்போது நிலம் உதவிய ஆறுமுகம் செட்டியாரிடம் கல்வி நிலையப் பொறுப்பையும், அதற்குரிய இருப்புத் தொகையையும் ஒப்புவித்துச் சென்றார். செட்டியார் வணிகத் தொழில் புரிந்து வந்தார். வணிகத்தில் வளர்ச்சி காணாமையால் பொருள் முழுதும் தொலைந்துவிட்டது. கல்வி நிலையத்தின் பொருளும் அதனால் தொலைந்தது என்னலாம். அத் தொகையை மீண்டும் கொடுக்க இயலாதவராகி விட்டார். வழக்குத் தொடுத்தால் அப் பொருளை எவ்வகையானும் பெற்றுவிடலாம் என்ற வாய்ப்பு இருந்தது. அங்கிருந்த பலரும் நாவலர்பால் வழக்குத் தொடுக்குமாறு வற்புறுத்தினர். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுதல் அறிவுடைமை யாகுமோ? ஆகாதன்றே. அன்றியும் ஒருவர் காலத்தினாற் செய்த நன்றியை மறப்பவர் மக்களினத்தவரோ? அதனால், நம் நாவலர் செட்டியாரவர்கள் முன் கல்வி நிலையத்திற்கு உதவிய நன்றியை நினைந்து வழக்குத் தொடுக்காது வாளா இருந்துவிட்டார். செய்ந் நன்றி கொன்ற மகற்கு உய்வில்லை என்பதை அறிந்து செயலிற் காட்டிய நாவலர் நன்றி மறவாப் பண்புதான் என்னே!

'கல்விக் கழகு கற்றுணர்ந் தடங்கல்' என்பது நன்மொழி. நாவலர் மும்மொழியும் கற்றவர்; சித்தாந்தச் செம்மல்; இலக்கண ஏறு; உலகியல் வல்லுநர்; பேரவை வியக்கும் பெரு நாவலர். அவர் கற்ற

நூல்கள் கணக்கில. கற்றவற்றை நன்கு உணர்ந்தவர். உணர்ந்ததை உளத்தே அமைத்தவர். செருக்கு வீறிட்டெழா வண்ணம் அடக்கியாளும் தன்னடக்க முடையவர். இந்தப் பண்பு முற்றத் துறந்த முனிவர்க்கும் கைவரப் பெறல அரிது. அத்தகைய அடக்கப் பண்பே உருவாகக் கொண்டவர் நாவலராவர். ஒரு சில நூல்களை மட்டும் கற்று யாம் எல்லாவற்றையும் முற்றக் கற்றேம் எனத் தருக்கும் அடக்கமில்லாதார் நடுவண் நாவலரும் வாழ்ந்தாரென்பது எத்துணை வியப்பு! நாவலர் நூல்கள் எழுதியும், சொற்பொழிவுகள் ஆற்றியும் தொண்டாற்றிவருங் காலத்தில் யாழ்ப்பாணத்து அறிஞர்கள் சிலர் நாவலரிருக்குமிடம் போந்தனர். அவர் துறவு வாழ்விலே எவ்வித களங்கமும் இல்லை. எழுத்திலும் சொல்லிலும் இணையாவாரும் அக்காலத்து இல்லை. யார்க்கும் சொல்லுதல் எளிது; ஆனால், சொல்லிய வண்ணம் செய்தலரிதல்லவா? அந்தக் குறையும் அவர்பால் காண முடியவில்லை. சொல்லும் செயலும் ஒன்றுயமைந்து விளங்கினர். ஆகவே, அவரைச் சோதித்தற் பொருட்டே சிலர் வந்தனரோ என்று கருத வேண்டியுளது. அவர்கள் நாவலரை அணுகி, "தாங்கள் நூல்களில் எழுதுவதைப் போன்றும், சொற்பொழிவுகளில் பேசுவதைப் போன்றும் நடைமுறையில் நடந்து காட்டி வருகிறீர்களா?" என அன்புடன் கேட்டனர். அறிவிருந்தும் அடக்க மில்லாதவராயின், கேள்வி கேட்டவர் மீது சீறிப் பாய்ந்திருப்பர். செருக்குடையவராயின் 'ஆம்' என்று இறுமாந்து முழங்கியிருப்பர். ஆனால், நாவலர் நவின்றதென்னை? "**கைகாட்டி மரம் இன்னின்ன ஊருக்குச் செல்லும் வழி இஃதிஃது என்று கையால் காட்டிக் கொண்டு நிற்கின்றதே தவிர, தான் அவ்வழியில் என்றேனும் செல்லுகின்றதா? இல்லையன்றே? யானும் அக் கைகாட்டி மரத்தைப் போன்றவன்தான்**" என்று விடை யிறுத்தனர்.

கேட்டவர் மெய்விதிர்த்துப் பதுமைபோல் அசைவற்று இருந்தனர். ஒழுக்கந் தவருத தமிழ்த் துறவியிடம் குடி கொண்ட அடக்கப் பண்பு ஒரு தனிப் பெருமை யுடையது அல்லவா? அடக்கம் அமரருள் உய்க்கும் எனும் வாய்மொழி வாய்க்காது போமோ?

என்றைக்கும் இறவாத நெறி யுய்க்கும் தமிழோடு சமயக் கல்வி பயின்றும், பிறரை ஏவாமல் தாமே உழைத்து உண்டும், ஐம்புலனடக்கிய வீரத் தமிழ்த் துறவியாக விளங்கியும், இறைவனைச் சிவஞகவே கண்டும் வாழ்ந்து காட்டிய நம் நாவலர் பெருமான் நற்பண்புகளை நவில்தல் எளிதாமோ? அப்பெருமகன்,

> "ஒன்ருகக் காண்பதே காட்சி ; புலன் ஐந்தும்
> வென்ருன்தன் வீரமே வீரம்;—என்றுந்தான்
> சாவாமல் கற்பதே கல்வி; பிறர்தம்மை
> ஏவாமல் உண்பதே ஊண்."

என்ற அருமைப் பாடலுக்கு இலக்கியமாய் இலங்கினரன்ருே?

8. பிறவாப் பெருநிலை

நாவலர் நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கமே கொண்டு வாழ்ந்து வந்தனர். அவர் ஒழுக்கம் விழுப்ப முறுவதற்கு மொழியும் சமயமுமே காரணமாயிற்று. ஆகலின், அவர் நினைவு முழுவதும் தமிழர் நலனிலேயே தோய்ந்திருந்தது என்பதற்கு ஐயமில்லை. தமிழ் மக்களின் நல்வாழ்வு கருதித் தோற்றிய பள்ளிகளும், எழுதிய நூல்களும், ஆற்றிய சொற்பொழிவுகளும் எத்துணை பயனுடையன என்பதைக் கூறவும் வேண்டுமோ? முப்பத்திரண்டாண்டுகள் தொடர்ந்து பணியாற்றி வந்ததை அறிகின்றபோது அவருடைய தன்னலமிலாப் பெருவாழ்வு இன்னதெனக் கண்டுணர முடிகிறது. அவருடைய எழுத்தால் புலமை பெற்றுச் சிறந்தோர் எத்தனையோ பேர்? அவருடைய பேச்சால் வியப்புற்றுத் திருந்தியோர் எத்தனையோ பேர்? அவர் வாழ்விலே குறிப்பிடத் தக்கது அவர் ஆற்றிய கடைசிச் சொற்பொழிவாகும். ஏனெனில், அது அவருடைய தெய்வீக நிலையினை உணர்த்துவதாக அறிந்தோர் கருதுகின்றமையே. ஒரு முறை, யாழ்ப்பாணக் கல்வி நிலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனுர் குருபூசை விழாவில் சொற்பொழிவாற்றினுர். அப்போது தம்மையும் மறந்து யாவரும் கண்ணீர் சிந்துமாறு மிக உருக்கமுடன் பேசினுர். பேச்சின் முடிவில் 'இதுவே என்னுடைய கடைசிப் பேச்சு' எனக் குறிப்பிட்டார். அதன் பிறகு அவர்எந்தக் கூட்டங்களிலும் பேசவே இல்லை. பின்னல் நிகழப்போகும் செயலை முன்னரே அறிந்து பலர்முன் கூறுபவர் யாவர்? அவரே தெய்வீகத் தன்மை யுடையார். அத் தன்மையுடையவராக விளங்கிய பெருந்தகையே நம் நாவலர் எனக் காண்கின்றோ

மல்லவா? அத் தெய்வீக ஆற்றல் வாய்க்கப் பெற்ற அவர் தம்முயிர்க்கு இறுதி வருவதையும் முன்னரே உணரவல்லவராயினர். தம் உடல் நலம் குன்றி நோயால் வருந்துகின்றபோது ஒருநாள் தம் இல்லத்தில் உலாவிக்கொண்டே திருவாசகத்தில் ஒரு பாடலை இடைவிடாமல் ஓதிக்கொண்டே இருந்தனராம். தம்முயிர்க்கிறுதிவருதலைக் குறித்து ஏதேனும் அறிகுறி தோன்றிற்றோ என ஐயுறுதற்கிடனுளது. ஏனெனில், ஒரு வாரங் கழிவதற்குள்ளே நோய் முற்றியது. 1879-ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் தாமிருந்த இல்லத்துச் சிவனடி மறவாச் சிந்தையராய்த் திருவருட்பே றெய்தினார். அவர் பாடிய 'புல்லிப் புணர்வதென்று கொலோ என் பொல்லா மணியைப் புணர்ந்தே' என்ற திருவாசகத்தின் அடிகள் அவர் மறைவு நிகழ்ச்சியோடு ஒத்து நோக்கத் தக்கதாக உள்ளன. நாவலர் பிரிவாற்றாத மாணவர்களும் உறவினர்களும் ஏனைய மக்களும் மிகவும் இரங்கி வருந்தினர். தமிழகத்துள்ளாரனைவரும் இனைந்து உருகினர். இந்து சமய சீர்திருத்த வீரரை இழந்தோம் எனத் தவித்தனர். தமிழ்க் கடலை என்று காண்பேம் என ஏங்கினர். தமிழ்க் குன்றில் தோன்றிய பரிதி மறைந்தது என மாழ்கினர். 'சைவமெனும் செஞ்சாலியோங்கச் சிறந்த பிரசங்க மழை அஞ்சாது பெய்யும் அருள் முகில் அவிந்தது' என அலறினர். அவர் பிரிவாற்றாத பேரறிஞர்கள்,

'நல்லை நகராறுமுக நாவலர்பி றந்திலரேல்,
சொல்லுதமி ழெங்கே? சுருதியெங்கே?—எல்லவரும்
ஏத்தும்பு ராணாகமங் களெங்கே? பிர சங்கமெங்கே?
ஆத்தனறி வெங்கே? யறை'

எனப் புலம்பித் துடித்தனர். தமிழர்களுக்கு ஒரு பேரிடி போலாயிற்று! பேரிழப்பு வேறு உண்டோ? கூறுமின்! பூதவுடல் மறைந்தது உண்மையே; ஆனால், புகழுடம்பு

மறையுமோ? உயிர் பிரிந்தது உண்மையே; ஆனல், அவர்தம் உரை மறையுமோ? அதோ கேளுங்கள்! அத் தமிழ்க் கடல் ஆவியுருவில் நின்று வழங்கும் செந்தமிழ்ப் பொன்னுரைகளைச் செவி கொடுத்துக் கேளுங்கள்!

"உலகீர்! ஒன்று சொல்லுகேன். கேண்மின். 'என்னை நன்ருக இறைவன் படைத்தனன் தன்னை நன்ருகத் தமிழ் செயுமாறே' என்ருர் திருமூலர். அவ் வண்ணமே முப்பதிற்கு மேற்பட்ட ஆண்டுகள் தமிழ்ப் பணியும் சைவப்பணியும் ஆற்றத் திருவருள் துணை நின்றது. அதற்கு என் நன்றி யுரியதாக. உலகிலே படைக்கப்பட்ட பொருள்களை எவரே எண்ணிச் சொல்லுதல் முடியும்? எவரே நன்று தீதென்றும், சிறிது பெரிதென்றும், உயர்வு தாழ்வென்றும் முடிவு கட்டுதல் இயலும்? ஒன்றை நோக்க ஒன்று பெரிதாக விருக்கும். நாம் கண்டவற்றுள் இது பெரிதென்று சொல்லலாமே யொழிய, உலகிற் பெரிது இதுதான் என்று முடிவு கட்ட வருதல் அறியாமையன்ரே? நம் கண்களுக்கு நாடோறும் பொருள்களை விளக்கிக் காட்டும் விளக்கு உருவத்தால் சிறியதும் ஒளியுடையது மாகும். அவ் விளக்கினை உருவத்தாலும் ஒளித் தன்மையாலும் வானில் பூத்து விளங்கும் விண்மீனேடு ஒப்பிட்டுப் பாருங்கள்! விண்மீன் விளக்கினைவிடப் பெரிதானதல்லவா? விண்மீனினை அது விளங்கும் படியான வானத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! வானம் விண்மீனை வென்று பெரிதாக விளங்குகின்றதல்லவா? அம் முறையிலே, மண்ணகத்தில் பரந்து காணப் படுகின்ற கடலினைக் காணுங்கள்! சிறு திவலைகளை வீசும்படியான அலையோ மிகச் சிறியது. அந்த அலையின் உருவத்தை ஆழியோடு ஒப்பிட்டுப் பாருங்கள்! எத்தனையோ மடங்கு சிறியதாக வுள்ளது என்பதை அறியலாமல்லவா? இவ்வாறு உலகிலே உள்ள பொருள்கள் யாவும் கூர்ந்து ஆராய்கின்றபோது ஒன்றைவிட ஒன்று பெரிதாகவே காணப்பட்டு இது

தான் பெரிது என்று முடிவுகட்ட வியலாது அப்பாலுக் கப்பாலாய்ச் சென்று கொண்டிருப்பதை உணரலாம். இந்த உண்மையை மனதிலே அமைத்துக் கொண்டு மனித சமுதாயத்தை நோக்குங்கள்! எத்தனை சாதிகள்! எத்தனை சமயங்கள்! எத்தனை சாத்திரங்கள்! எத்தனை கோத்திரங்கள்! இவற்றிற்குள் எத்தனை பூசல்கள்! அம்மம்ம! நினைக்கவும் நெஞ்சம் நடுங்குகின்றது. இவையெல்லாம் எதனால் உண்டாகின்றன என்பதை என் வாழ்க்கை எனக்குக் கற்பித்தது! மக்களுக்குள்ளே இருக்கும் பேதைமையும், அப் பேதைமையால் உண்டாகும் செருக்கும் எனக் கண்டேன். ஒருவன் தனது சமயம் உயர்ந்தது எனச் சொல்லலாம். அதற்கு அவனுக்கு உரிமையும் உண்டு. ஆனால், பிற சமயங்கள் தாழ்ந்தது எனச் சொல்லலாமோ? தன்னையும், தன் மொழியையும், தன் சமயத்தையும், தன் நாட்டையும் ஒருவன் புகழ்ந்து கூறுவதனால், பிறநுடைய சமயம் முதலியவற்றை இகழ்ந்ததாக ஆகுமோ? அவ்வாறு ஒருவன் தன்னைப் புகழ்ந்து கொள்வது மனித இயல்பு; மற்றவன் தன்னை இகழ்வதாகக் கருதுதல் பேதைமையாம். அப்பேதைமை தோன்றின் வெகுளி பிறக்கும். வெகுளி பிறந்தால் பூசலும் கொலைச் செயலும் நிகழும். **ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்தைச் சார்ந்து நிற்கின்றீர்கள். தான் விரும்பிய சமயக் கொள்கைவழி யொழுகுவது தனி மனிதனின் உரிமையாகும். அதனினும் சிறந்தது, அவரவர் சமயத்தில் நின்று ஒழுகி உலகிற்குப் பயன் செய்வதாகும்.** கிறிஸ்து சமயத்தவர் அச் சமயத்தின் பால் அன்புகொண்டு ஏசு பெருமானின் தூய வழியைக் கடைப்பிடித்து வாழுங்கள். இஸ்லாம் சமயத்தவர் அம் முறையிலே பற்றுடையவர்களாய் நபிநாயகத்தின் நல்வழியைக் கடைப்பிடித்து ஒழுகுங்கள்! பௌத்த சமயத்தவர் அச்சமயத்தில் உறுதிகொண்டு புத்தர் பிரானின் முத்தன்ன மொழிகளைப் போற்றி வாழுங் கள்! சைவ சமயத்தவர் தம் சமயத்தே உள்ளன்பு

வைத்து மெய்கண்ட தேவர் முதலிய சமயப் பெரு மக்கள் வழியிற் சென்று ஒழுகுங்கள்! இவ்வாறே சமணரும், வைணவரும், பிறரும் தத்தம் நெறிபற்றி வாழுங்கள்! யான், எனது என்னும் செருக்கை வேருடன் களையுங்கள்! ஒரு சமயத்தவர் பிற சமயத் தவரைத் தூற்றலை விலக்குங்கள்! ஒரு சாதியினர் இன்னொரு சாதியினரை இழிவாக எண்ணுவதையும் நடத்துவதையும் இகழ்ந்தொதுக்குங்கள்! சாத்திரத் திலும் கோத்திரத்திலும் வேறுபாடு கற்பித்தலை அறவே அகற்றுங்கள்! சாதி சமய சாத்திர கோத்திரச் சண்டை யைக் காட்டிலும் சாந்தமே பெரிதல்லவா? வெறுப்பை யும் பகையையும், அழிவையும் பழியையும் உண்டுபண் ணும் போரினைவிட ஒற்றுமையும் இன்பமும், ஊக்கமும் ஆக்கமும் பயக்கும் சாந்தநிலை மிகமிகப் பெரிது என் பதை உணருங்கள்! அனைவரும் ஒன்றுவதற்கு உரிய நிலை வேறுண்டோ எனச் சிந்தியுங்கள்! ஆண்டுக் கணக்காகப் பயின்று பன்னூல்களைப் புரட்டி விடுவீர் கள்! கற்ற பொருளைப் பிறர்க்கு எடுத்துரைக்கும் ஆற்றலும் அடைவீர்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஒன்றை மனதிலே இறுத்துங்கள். மேடைகளிலே ஏறி மணிக் கணக்கில் பேசும் உரைகளின்படி நடக்கின் றோமா? அவ்வாறில்லாவிட்டால் பயன் என்ன? உரைப்பது மிகக் குறைவாயினும் உள்ளம் அதனளவா வது பண்பட வேண்டாமா? உரை பெரிதா, உள்ளப் பண்பு பெரிதா என்பதை ஆயுங்கள். உரையைக் காட்டிலும் உள்ளமே பெரிது என்ற முடிவிற்கே வரு வீர்கள். சொல்லுதல் யார்க்கும் எளியதே. ஆனால், சொல்லிய வண்ணம் செய்தல் எவ்வளவு அரிதானது. அவ்வரிதாகிய செயலைச் செய்பவர்கள் தாம் பெரியவர். அவர்கள் உள்ளத்தால் பொய்யாது ஒழுகி, உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் தெய்வமாக நின்று வழிபடப் படுபவர். அத்தகைய உள்ளமே உரையினும் சாலப் பெரியது என்பதை அறியுங்கள்! உள்ளத்தில் உரு

வாகி அமைக்கப்படுவதே சமயம். அது மிகப் பரப்புடையதாக வளர்ந்தபோது மதம் என்ற பெயரைப் பெறுகின்றது என்னலாம். ஒழுக்கம் பழுத்த உரவோர் சமைத்தது சமயமல்லவா? அது மக்கட்கு ஏனைய பொருள்களைவிட இன்றியமையாததும் பெரியதுமாகும். அதனை மக்கட்குத் துணை செய்யும் பான்மையில் செம்மையாக்கிக் கொள்ளுகின்றீர்கள். **மதமே பெரிதென்று கருதுகின்றபோது மனித சமுதாயத்தை மறந்துவிடக்கூடாது. இறைவனுற் படைத்த மனித குலம் பல மதங்களையுடையது. மனித குலத்தையும் அதன் பரப்பையும் பார்க்கின்றபோது மதம் அதனை விடச் சிறியதாகக் காணப்படுகின்றதல்லவா? மனித சமுதாயத்தின் நன்மையை நோக்குகின்றபோது, மதத்தின் நன்மை சிற்றளவுடையதாகிறது. ஆகவே, மதத்தைக் காட்டிலும் மானிடம் பெரிது என எண்ணுங்கள்! மனித குலத்திற்காக நன்மை செய்கின்றபோது தன்னலம் சுட்டெரிக்கப்படுவதைக் காண்பீர்கள்!** மொழியிலும் சமயத்திலும் உறைத்துநின்று தொண்டில் தலை நிற்பீர்கள்! அருள் வடிவாய் இலங்கும் வழியன்றோ அஃது. அஃதே இறைபணி நிற்றல் என்பது. அந்த ஒரு பொருளே உண்மையானது; அருள் வடிவாயது; அறிவுருவாயது; உலகெலாம் பரந்து நீக்கமற நிறைந்திருப்பது; பேரின்பப் பொருளாயது. உலகில் காணப்படும் பொருள்களைக் காட்டிலும் பெரியது! **அந்த முடிவிலேதான், பேதமை அகலும்; செருக்கு அழியும்; சாதி மாயும்; சமயம் ஒடுங்கும்; சாத்திரம் பணியும்; கோத்திரம் குமையும்; உரை சுருங்கும்; உள்ளம் விரியும்; அமைதி நிலவும்; அறம் ஓங்கும்; மறம் மடியும்; மானிடம் மலரும். மரணமிலாப் பெருவாழ்வு வந்துறும். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உயர் மொழி உலகிடை வாழும்! தமிழ்க்குலம் உலகப் புகழ் எய்தத் தாழாதுஞற்றுக! அஃதொன்றே எனக்குத் தமிழர் செய்யும் கைம்மாறு!"**

அன்பர்களே! இவ்வுரைகளை உன்னுங்கள்! நாவலர் பெருமானின் ஆவி, உருக்கொண்டு இவை களையே கூறியிருக்கும் என்னலாம். தமிழ்ப் பரிதியாக விளங்கிய அவர் உரைகள் நம் வாழ்வின் ஒளிக் கதிர்கள். அவ்வொளிக்கதிர்கள் நம் அறியாமையைப் போக்கும் சுடர் விளக்குகள்! அப் பெருமான் உறையுங் கோவிலே நம் உள்ள மாகட்டும். உள்ளக் கோவிலிலே ஒளி வீசும் உரை விளக்குகள் என்றும் நின்று நில வட்டும். தமிழக முழுவதும் பரவிக் கறையிருளைப் போக்கட்டும். திக்கெட்டும் சென்று அமைதிக்கு வழி யாகட்டும். அவர் உரைபோற்றி உள்ளப் பண்படை வோம். தன்னல மறுப்போம்! பொதுநலங் காண் போம்! நாவலராக வாழ முயல்வோம்! வாழ்வோம்! வயங்கு புகழ் நிறுவுவோம்!

வாழ்க நாவலர்! வளர்க அவர் நன்னெறி!